624

தமிழரசு

தைத் திங்கள்

OFFICE OF THE REGIS...
24 JAN 1934
MADRAS
624

சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட	இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு	ரூ 1—0—0
	பினங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு	2—0—0
	ஜீவிய சந்தா	20—0—0
	தனிப் பிரதி விலை	0—1—0
	மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது	0—2—0

மாதிரி சஞ்சிகை இனம்.

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

ஒவ்வோரு ஆங்கில மாதம் 15-ஆம் தேதியிலும் வெளிவரும்

விளம்பர விகிதம்

உட்பக்கம் ஒன்றுக்கு	1-மாதத்திற்கு	ரூ.	10—0—0
,, அரைப் பக்கத்திற்கு	,,		6—0—0
,, கால் பக்கத்திற்கு	,,		4—0—0
க்வர் 3-வது பக்கத்திற்கு	,,		15—0—0
,, 4 ,,	,,		20—0—0

இதர விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,
'தமிழரசு' ஆபீஸ்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

தமிழ் நாட்டில் சிறந்த மாதப் பத்திரிகை எது?

'பாரதி'தான்.

இவ்வுண்மையை ஒரு தரம் 'பாரதி'யைப் படித்துப் பார்த்தால் உணரலாம். பாரதிக்கு நான்கு ஆண்டு முடிந்து இதுபோது ஐந்தாம் ஆண்டு நடைபெறுகிறது. 'பாரதி'க்குச் சமத்துவம் சகோதரத்வம் இரண்டும் இரண்டு நுரை யீரல்கள்; உரிமை வேட்கையே உயிர். 'பாரதி'யைத் தமிழ் நாட்டு 'மாடென் ரெவியூ' என்றே சொல்ல வேண்டும். இதன் ஆசிரியர் பத்திரிகை உலகில் பண்பட்டவரும், சிறந்த தேச பக்தருமான திரு. ரா. நாராயணசுவாமி அவர்களாவர். 'பாரதி' தமிழர் ஒவ்வொருவரும் தவருது வாங்க வேண்டிய பத்திரிகை.

சந்தா விவரம்

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு	ரூ. 2.	அல்லது	3 ஷில்லிங்.
வெளி ,, ,,	ரூ. 3.	,,	5 ,,

விலாசம்:—

'பாரதி' ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

500 ரூபாய் பரிசு

வாசகர்களே!

இம் மாதத் 'தமிழரசு'

பத்திரிகையைப்

பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.

இப்பிர

அடுத்த

ஐந்நூ

இ

ஜாக்கிர

துவ

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 OCT 1933
MADRAS

ய்

த்து அரை
சாப்பிட
வு, கை
வையும்
வாய்வு,
த்திர
ங்க

வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்
சரீரம் இளைத்துவிடும்.

சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினார். அவர் வார்த்தைக்கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரினுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30

இப்படிக்கு.
அண்ணாவையங்கார்.

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் எனக்குக் கொடுத்த சகல மேக சித்தாதி எண்ணெயை இரண்டு நாள் சாப்பிட்டேன். என் முழங்கால் வீக்கமும் பிடிப்பும் நீங்கிவிட்டது. இடுப்பு வலியும் போய்விட்டது. வயிற்றில் சப்தித்துக்கொண்டிருந்த வாய்வும் நீங்கிவிட்டது. இன்னும் ஒரு வேளை எண்ணெயைக் கையிருப்பாக வைத்திருக்கிறேன். இந்த லெட்டர் கொண்டுவரும் பிராம்மண விதவை மிகவும் ஏழை. கால் குடைச்சலினால் அனேக நாளாய்க் கஷ்டப்படுகிறாள். கிருபை கூர்ந்து ஒரு ரூபா வாங்கிக்கொண்டு இரண்டு வேளை எண்ணெய் கொடுத்தனுப்பவும். நான் தங்களை வந்து பார்க்கிறேன்.

இப்படிக்கு,
கீழ்வீதி சீனிவாச ஐயங்கார்,
சைவ முத்தையா முதலி வீதி, சென்னை.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

சகல மேக சித்தாதி எண்ணெய்

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

அயத்[illegible]
திராவகம்

நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினலாவது அல்லது வேறு எந்த சுரத்தினலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எனும் புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். தி[illegible]ர் காத்திர புத்தி[illegible]ார் களைப் [illegible]பத் கள்; [illegible]டை தையும் வார்கள்.

... மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் ...பாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோ...த்து வரலாம்.

மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப் படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

சில அபிப்பிராயங்கள்

அன்புள்ள மாசிலா திலக !

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அனுபவ வைத்தியனுதலால் விலை குறைவு செய்து அனுப்பினுல் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் ஏஜண்டுமோனுலு மாவேனுதலால் அதை யனுசரித்த அரை டஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S. V. அக்னீஸ்வரன்.

ஐயா!

தாங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்தங்க திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினுல் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கும் அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்

20—6—30, கண்ணுபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்.

நான்குமாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணு 12.

தபால் கூலி பிரத்தியேகம்.

வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.

மென்தா மவுத்வாஷ்

இம் மருந்தானது வாயிலுள்ள நோய், ஈர்வளர்தல், பல்வலி, இரத்தம் கொட்டல், சீழ் வருதல், வாய் நாற்றம் இவைகளைப் போக்கிச் சதா வாயுக்குக் கம கம வென்ற ஒரு மணத்தைக் கொடுக்கும். 4-மாதம் உபயோகிக்கக் கூடிய மருந்து விலை ரூபா 2.

தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5-நிமிஷத்தில் தலைவலி நீங்கும். தவிர உடம்புவலி கை கால்வலி இவைகள் போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வை விட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும். இம் மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித அஞ்சனமும் வேண்டியதில்லை. புட்டி 1-க்கு விலை அணா 8.

...ப்பாண்ட லேகியம்

இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கியகுணம். எலும்புருக்கி நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல்

யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும், சு... தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தரக்கூடியது.

சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, கூழ்ப்பாண்ட லேகியம், மீன் எண்ணெயைக் காட்டிலும் குணம் செய்கின்றது. கணச்சூட்டுக்கு மேன்மையாய்த் தெரிகின்றது. க்ஷயரோகம் வாராதபடி தடுக்கவும் மேலானதாய்க் காணப்படுகின்றது. மலச்சிக்கல் நீங்குகின்றது. ஆனபடியால் எங்கள் எல்லா ஷாப்புக்கும் மாதா மாதம் 10 பவுன் அனுப்பவும். இந்த லெட்டர் கொண்டுவரும் ஆள்வசம் 3 வீசை கூழ்ப்பாண்ட லேகியம் கொடுத்தனுப்பவும்.

M. C. நஞ்சுண்டராவ். B. A., M. B. &. C. M. மைலாப்பூர்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கும் ஜில்லா முனிசீப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினுல்தான் என் குழந்தை பெருத்து நன்ருக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A., B. L.,
District Munsiff, Tanuku.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, 2 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. யில் அனுப்பவும். இப்போது என் மனைவியின் தேக காந்தம் குறைந்திருக்கின்றது. அத்துடன் சிவப்பிரகாச பற்பொடி 1 டசன் அனுப்பவும்.

வியாசராவ் M. A., B. L., District Munsiff, Bellary.

ஒரு பவுன் விலை ரூபா 2.

கிடைக்குமிடம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.

அன்பே ஆண்டவன்

தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

' எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் '...

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

மலர்	ஸ்ரீமுக௵ ஐப்பசி௴ 1௳	இதழ்
4	1933௵ அக்டோபர்௴ 17௳	10

கடவுள் வாழ்த்து

எனக்(கு) எனச்செயல் வேறிலை ;
யாவும் இங்(கு) ஒருநின்
தனக்(கு) எனத்தகும் உடல்பொருள்
ஆவியுந் தந்தேன் ;
மனத்தகத்(து)உள அழுக்(கு)எலாம்
மாற்றிஎம் பிரான்! நீ
நினைத்த(து) எப்படி அப்படி
அருளுதல் நீதம்.

—தாயுமானர்

குறிப்பு:—'தமிழர'சில் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டன வாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாக மாட்டார்.

ஆசிரியர் குறிப்புக்கள்

அக்டோபர் 2௨

மகாத்மா காந்தியடிகளுக்கு இந்த அக்டோபர் மாதம் இரண்டாந் தேதி அறுபத்தைந்தாவது பிறந்த நாள் ஆரம்பமாயிற்று. அன்றைய தினம் நமது இந்திய நாட்டில்—இமயம் முதல் குமரி வரை—ஏன் உலகின் பல்வேறு இடங்களிலும் பெரு விழாக் கொண்டாடப்பட்டது. அடிகளின் பிறந்த திருநாள் அக்டோபர்மீ 2௨ முதல் ஒரு வாரம் வரையில்—பல இடங்களில் பத்து நாட்கள் வரையிலுங்கூட வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. எங்கும் ஊர்வலங்கள்! எங்கும் அன்னதானங்கள்! எங்கும் பொதுக் கூட்டங்கள்! ஆலயங்களி லெல்லாம் அபிஷேக ஆராதனைகள்! மகாத்மா பிறந்த நாளை மாநில மக்க ளெல்லாம் சாதி—சமய—மொழி—நிற வேற்றுமை யில்லாமல் கொண்டாடினார்கள். இவ்வளவுக்கும் காரண மென்ன? அடிக ளிடத்து அமைந் துள்ள புனித வாழ்வு, அன்பு, தியாகம் என்பதை நாம் குறிப்பிட வேண்டுவதில்லை.

தேசத்திற்கு உழைப்பதற்காகவே தேக மெடுத்த மகாத்மா விடம் மக்கள் கொண்டுள்ள மட்டற்ற அபிமானத்தை நாம் மனமாறப் போற்றுகிறோம். ஆனால் அவர்களுடைய செயல்களை நாம் ஆமோதிக்க முடியாது. நீண்ட காலமாகவே நம் நாட்டிடை ஓர் அறிவற்ற செய்கையானது குடிகொண்டு இருக்கிறது. பெரியார்க ளது திருநாட்களைக் கொண்டாடுவதாக எண்ணி மக்கள் அவர்க ளுடைய திருஉருவங்களை அலங்கரிக்கிறார்கள்; அவற்றைத் தூக்கிக் கொண்டு ஊர்வலம் செய்கிறார்கள். ஆனால் அப் பெரியார்களுடைய அரிய கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைக்க அவர்கள் அஞ்சுவ தில்லை. இந்த அடாத—அறிவற்ற செயல் நம் நாட்டி லிருந்து ஒழிய வேண்டும். அப்போதுதான் நம் நாட்டிற்கு விடுதலை.

மகாத்மாவின் திருநாளைக் கொண்டாடுகிற மக்கள் அவர் காட்டும் வழியில் செல்லா விட்டால் என்ன பயன்? அவரது கொள்கைகளைக் கைப்பற்றி நடக்காவிடில் என்ன உபயோகம்? காந்தி யடிகள், உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றித் தவிக்கும் கோடிக் கணக்கான ஏழை மக்களின் துன்ப நீக்கத்திற்கே ராட்டினத்தைச் சாதனமாய்க் காட்டினார்; ராட்டினத்தில் நூல் நூற்று, கைத்தறிகளில் கதராடைகள் தயார் செய்து பரப்பினால், ஏழை மக்களுக்கு ஆகாரத்திற்கும், ஆடைக்கும் குறைவிராது. ஆனால் இக் காரியத்தைக் காந்தி திரு நாள் கொண்டாடும் மக்கள் எவ்வளவு தூரம் கைக்கொண்டு நடக்கி

208529

ளூர்கள்? ஏழை மக்களின் அற்ப ஊதியத்தைப் பறித்து அறிவைக் கெடுக்கும் மதுப் பேயைத் தொலைக்க வேண்டுமென்ற மகாத்மாவின் மன்றாடல் இவர்களால் நிறைவேற்றப் பட்டதா? இப்பொழுது அடிகள் தமது உயிரினும் சிறந்ததாக நினைத்து வரும் ஹரிஜன விடுதலைக்கு — தீண்டாமை விலக்கிற்கு இவர்கள் என்ன செய்தார்கள்?

மகாத்மாவிடம் உண்மையிலேயே அன்பிருக்குமானால்—மகாத்மாவின் திருநாளை உண்மையாகக் கொண்டாட வேண்டுமானால், அவர் காட்டும் சன்மார்க்கத்தில் செல்ல வேண்டும். அவரது கொள்கைகளைப் பொன்னே போல் போற்றிக் கைக்கொள்ள வேண்டும். நாடு முழுதும் கதர் மயமாக்க வேண்டும். அன்னியப் பொருளை வாங்குவதால், நாம் அன்னிய அரசாங்கத்தை ஆதரிக்கிறவர்களாகிறோமாதலால் சுதேசப் பொருளையே வாங்க வேண்டும். பாழும் குடியைப் போக்க வேண்டும். தீண்டாமைப்பேயை ஓட்ட வேண்டும். காந்தி வாரத்தில் காட்டும் உற்சாகமும் ஊக்கமும் ஒவ்வொரு நாளும் காந்தியடிகளின் கொள்கைகளை நிறைவேற்றுவதில் காட்ட வேண்டும். அவ்வாறின்றி மகாத்மாவின் பிறந்த நாள் விழாவென்று வெறும் கூட்டமும், கூச்சலும், தூப தீப நைவேத்தியங்களும் செய்வது மகாத்மாவுக்கே துரோகம் செய்வதாகுமென்பதை நாம் எடுத்துக் காட்டவேண்டுவதில்லை. வாழ்க மகாத்மா.

'தற்கால இந்தியாவின் தந்தையார்'

ராஜா ராம் மோசனராயைத் 'தற்கால இந்தியாவின் தந்தையார்' என்றார் காலஞ்சென்ற மஹாதேவ கோவிந்தரானடே. உண்மையில் இந்தியாவிலே ஆங்கில அரசாங்கம் ஆரம்பிக்கப்பட்டபின் இந்நாட்டில் தோன்றிய பெரியார்களில் ராஜா ராம்மோகனராயே தலைமையானவர். இவர் இந்திய மக்களிடையே மலிந்துள்ள சமூகக் கொடுமைகளை வேரறக் களைந்து, ஜன சமூகத்தைப் பலப்படுத்திக் காலத்திற் கேற்ப நாமும் நம் நாடும் நன்மை அடைய வேண்டுமென்ற தனிப் பெரும் நோக்கத்தோடு ஆசார சீர்திருத்த இயக்கத்திற்கு இந்தியாவில் விதை கோலிய முதல்வர். இவர் நம் நாட்டில் இருந்த உடன் கட்டை யேறல் என்ற கொடிய வழக்கை ஒழித்து, நமது பெண் மணிகளுக்குப் புத்துயிரளித்துப் புண்ணியம் பெற்றபெருந்தகை. இதுகாலை இந்தியாவில் வடமொழி நூல்களில் வல்லவராகிய பண்டிதர்கள் பலரும் வைதீகப்பித்து மேற்கொண்டு நாட்டின் நன்மைக்கான எத்தகைய சமூகச் சீர்திருத்தங்களையும் அடியோடு எதிர்த்து வருவது யாவர்க்கும் கண்கூடு. இவ்வாறு இருக்கையில், சீர்திருத்த ஆரம்ப நிலையிலேயே இந் நாட்டில் வடமொழி சாஸ்திர ஆராய்ச்சிகளில் பெயர் பெற்ற ஒரு பண்டிதரான ராஜாராம் மோகனராய் பெரிய சமூகப் புரட்சியான உடன்கட்டை யேறுதலை ஒழித்தல் முதலிய ஆசார சீர்திருத்தங்களை ஏற்படுத்தக் காரணமா யிருந்தா ரென்பது பெரிதும் போற்றத்தக்கது.

ராஜாராம் மோகனராய்

இந்தியாவில் பற்பல துறைகளிலும் முன்னேற்ற மடைந்து விளங்குவது வங்காள மாகாணமே யென்றால், அதற்கு அடிப்படையாக வேலை செய்தவர் ராஜா ராம்மோகனராயே யாவர். இத்தகைய பெரியார் ராஜா ராம் மோகன ராய் நாட்டு நலத்தின் பொருட்டு இங்கிலாந்து தேசம் சென்றிருந்தபோது பெயர் பெற்ற பிரஸ்டல் நகரத்தில் இன்றைக்கு நூறு வருஷங்களுக்கு முன் காலமானார். இவரது சத வருஷக் கொண்டாட்டத்தைச் சென்ற செப்டம்பர் மீ 27உ பல விடங்களில் மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்

கள்; இன்னும் பல விடங்களில் கொண்டாடி வருகிறார்கள். ராஜா ராம் மோகனராய் தொண்டாற்றிய கல்கத்தா நகரத்திலே அவரது உருவச் சிலையைப் பிரதிஷ்டை செய்ய முயன்று வருகிறார்கள். இக் காரியம் பாராட்டத் தக்கதாகும். மற்றும் அவரது போதனைகளைக் கற்றுணர்ந்து அவற்றை உலகமெங்கும் பரவச் செய்ய வேண்டியது இந்தியரின் நீங்காக் கடமையாகும். அன்றியும் அவரது சரிதத்தைப் பிற்கால பிரஜைகளான சிறுவர்களைப் படிக்கச் செய்ய வேண்டும். ராஜா ராம் மோகனராயின் புகழ் ஓங்குக.

வருகிறது தீபாவளி!

நம் நாட்டில் சுதந்தர இன்பம் நீங்கி அடிமைத் துன்பம் ஓங்கி இருந்தாலும், கல்வியும் செல்வமும் மிகமிகக் குறைந்திருந்தாலும், வயிற்றுப் பிழைப்பிற்காக மக்கள் பெரிதும் வாடவேண்டிய நிலையில் இருந்தாலும்—இன்றளவும் கொண்டாடப்படும் பண்டிகைகளுக்கு மாத்திரம் குறைவில்லை; ஆண்டு ஒன்றுக்குள் ஐம்பது பண்டிகைகள் வந்தாலும் அவை அனைத்திலும் சிறந்தது தீபாவளியே என்று சொல்வார்கள். ஆனால் தீபாவளியின் உண்மையான தத்துவத்திற்கும் இக் காலத்தில் நமது நாட்டினர் அதைக் கொண்டாடுவதற்கும் உள்ள சம்பந்தம்; 'அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் உள்ள சம்பந்த' த்தை ஒக்கும்.

தீபாவளி என்றால் (தீப—விளக்கின், ஆவளி—வரிசை) விளக்குகளின் வரிசை என்று பொருளாம். அதாவது அருட்பெருஞ்ஜோதியாக இருக்கிற ஆண்டவனுடைய நினைவை ஊட்டுமாறு விளக்குகளை அழகுற ஏற்றி இறைவனைப் போற்றுவதற்குரிய நாளாம். தீபாவளி என்பது கொடிய நாகாசுரனை வதைத்து மக்களுக்கு விடுதலை இன்பம் அளித்த கண்ணபிரானுக்கு வணக்கம் செலுத்தும் கருத்தை யுடையதென்பர்.

இத்தகைய உத்தம தத்துவங்களுடைய நாளை மக்கள் எவ்வாறு கொண்டாடுகிறார்கள்? அன்றைய தினத்தில் அன்னிய நாட்டு ஆடைகளை அணிந்து, ஆயிரக் கணக்கான ஆடுகளையும், கோழிகளையும் வதைத்துக் கொன்று அவற்றின் தசையைத் தின்று, மதுஉண்டு மகிழ்கின்றார்கள்; வெளி நாட்டி லிருந்து வரும் வெடிகளை வாங்கித் தாங்கள் கஷ்டப்பட்டுத் தேடிய காசைக் கரியாக்குகிறார்கள். இதுவா ஒரு நன்னாளைக் கொண்டாடும் விதம்? எல்லா உயிர்களுக்கும் தந்தையாகிய இறைவனைத் தொழுகின்ற தினத்தில் வாயில்லாத சகோதரர்களாகிய பிற உயிர்களை வதைக்கலாமா? பஞ்சமா பாதகங்களில் ஒன்றெனக் கூறப்படும் மது உண்டு மயங்கலாமா? நம் நாட்டில் கோடிக் கணக்கான ஏழை மக்கள் அரை வயிற்றுக் கஞ்சிக்கும் அவதிப்பட அவர்களுக்கு உதவி செய்யக் கதரை வாங்கி அணித்து

அவர்களை ஆதரிக்காமல் பகட்டால் நமது உதிரத்தை உறிஞ்சும் அன்னிய நாட்டு ஆடைகளை வாங்கிப் பணத்தைக் கொள்ளை கொடுக்கலாமா? இச் செயல்கள் அனைத்தும் எவ்வளவு விபரீத மானவை என்பதை அன்பர்களே! ஆலோசித்துப் பாருங்கள்.

எனவே, இவ்வருடத் தீபாவளி தினம் அதிகாலையில் எண்ணெய் ஸ்நானம் செய்து அன்று முதல் அகப்புற அழுக்கை நீக்கி, அந்நாளில் கண்ணன் கொடிய நரகாசுரனை வதைத்து மக்களுக்கு அருள் சுரந்தது போல், இப்போதுள்ள வறுமையாகிய நரகாசுரனை வதைக்கக் கதரையே ஆதரித்துத் 'தரித்திர நாராயணர்'க்குச் சேவை செய்ய வேண்டும். மாமிச உணவைப் புசித்தலையும் மது உண்டலையும் நீக்க வேண்டும். தீபாவளி யன்று முதல் உங்கள் இல்லம் இன்ப நிலயமாகத் திகழட்டும். அந்நாள் தொட்டு உங்களுக்குப் புத்துணர்ச் சியும் புதுவாழ்வும் உண்டாகட்டும்.

பெசண்டு அம்மையாரின் பிரிவு

உலகுக்கு ஒருவராக விளங்கிய டாக்டர் அன்னி பெசண் டம்மையார் தமது 86-வது வயதில் சென்ற செப்டம்பர் மாதம் 20-ஆம் நாள் புதன்கிழமை மாலை 4-மணிக்கு இம் மண்ணுலக வாழ்வை நீத்தமை குறித்து உலகமே வருந்துகிறது. அன்னி பெசண்டம்மையார் பொதுவாக உலகுக்கும் சிறப்பாக இந்தியா வுக்கும் செய்துள்ள சேவை எட்டி லடங்காதது. பெசண்டம்மையார் தமது நாற்பத்தாறுவது வயதில் (1893ஸு) இந்திய நாட்டிற்கு முதன்முதல் விஜயஞ் செய்தார். அந்நாள் முதல் இந்தியாவைத் தமது சுவிகார நாடாக எண்ணி மத, சமூக, ராஜீயத் துறைகளில் இந் நாட்டின் முன்னேற்றத்திற்காக அரும்பாடு பட்டார். பிரம ஞான சபையின் மூலமாக அவர் சாதி, மத, வகுப்பு பேதங்களை ஒழித்து, சகோதரத்வத்தைப் பரப்பினர். கல்வித் துறையில் அவர் புரிந்துள்ள தொண்டு கொண்டாடத் தக்கதாகும். அரசியல் துறை யிலும் அவர் செய்த சேவையை மக்கள் என்றும் மறக்க முடியாது. பெசண்டு அம்மையார் சோம்பல் என்ற பதத்தையே அறியார். விருந்தி னரை உபசரிப்பதில் அவருக்கு விருப்பம் அதிகம். அவரைப்போல் அதிகமான நூல்கள் எழுதியவர் இந்த உலகிலேயே இல்லை. பல பத்திரிகைகளுக்கு அவர் அடிக்கடி கட்டுரைகள் அனுப்பி வந்ததோடு 411 புத்தகங்கள்வரை இயற்றி இருக்கிறாரெனத் தெரிகிறது. பல் வேறு வழிகளிலும் உலகிற்கு அவர் செய்த ஊழியம் பாராட்டத் தக்கதாகும். எனவே அவரது பெயர் உலகின் சரித்திரத்தில் பொன் னெழுத்துக்களால் பொறிக்கப்படு மென்பதில் சிறிதும் சந்தேக மில்லை. அவரது ஆன்மா அமைதியுறுவதாக.

காதலுக்கு இரண்டு பலி

[இலைமறை]

சாதாரணமாகப் பத்திரிகை ஆசிரியரது வன்மையை ஜனங்கள் அறிவதில்லை. 'கோலெடுத்தால் குரங்காடும்' என்று சொல்லுவார்கள். அதுபோலவே ஆசிரியர் பேனாவை யெடுத்தால் ஜன நாயகத்தை ஆட்டிவிடுவார். இல்லாததைச் சொல்லுவதானாலும் சரி; இருப்பதைப் பன் மடங்குப் பெருக்கிச் சொல்ல வேண்டுமானாலும் சரி; ஏதாவது ஒன்றை மறைக்க வேண்டுமானாலும் சரி; ஒரு திறப்பட்ட மனத்தைக் கலைக்கவேண்டுமானாலும் சரி; ஆசிரியர் தம் பேனாவின் வன்மையினால் மிக எளிதாகச்செய்து விடுவார். ஏககாலத்தில் இருபதாயிரம் அல்லது முப்பதாயிரம் பேர்களோடு தம் கட்சியைப்பற்றி வாது புரிகிறார் அல்லவா?

'ஹிப்பர்ட் தீவிலிருந்து ஜான் கோலட் என்பவர், சந்திரனைப்பற்றிப் பதினைந்து வருட காலமாக ஆராய்ச்சி செய்து வந்தார். சமீபத்தில் ஆகாய விமானம் போன்ற கூடு ஒன்று செய்துகொண்டு சந்திரலோகம் போய் ஒரு வாரத்திற்குள் திரும்பிவிட்டார். அங்குள்ள இயற்கை விநோதங்களைப் பற்றி ரேடியோவில் பேசியதுதான் தாமதம். பல தேசங்களிலுள்ள அறிஞர்களும், சாஸ்திரீகர்களும், கோலட்டைப் பார்க்க ஹிப்பர்ட் தீவுக்குக் குழுமுகிறார்கள்' என்ற அறிக்கை தடித்த எழுத்தில் பத்திரிகை ஆசிரியர் எழுதிவிட்டால் போதும். நீங்களும் சந்திரலோகத்தைப் பார்க்க விரும்புவீர்கள். ஹிப்பர்ட் தீவுக்குப் போகும் முதற் கப்பலுக்கு, இடம் ரிஸர்வு செய்ய முந்துவீர்கள். திட மனத்தைக் கரைக்கவும், நம்பிக்கையூட்டி பரபரக்கச் செய்யவும் ஆசிரியரது பேனா முனைக்குச் சக்தியுண்டு.

* * *

இத்தகைய வன்மையாளர் நம் ஆசிரியர், திருவாளர் தெய்வசிகாமணி; பல துறைகளில் அடிபட்டவர்; அதனால் அனுபவமுள்ளவர். ஒரு வழியிலும் கரைகாணாது முடிவாக ஒரு பத்திரிகைக்கு இவர் நிருபரானார். பிறகு வெவ்வேறு பத்திரிகைகளுக்கு நிருபரானார். அதிலிருந்து படிப்படியாக உயர்ந்து உதவி ஆசிரியராகிவிட்டார்.

'ஹிந்து சமாசாரம்' என்ற தினசரி பத்திரிகை சாதாரணமானதல்ல. சுமார் முப்பதாயிரம் சந்தாதாரர்கள் உள்ளது. அதன் செல்வ

மும் சிறப்பும் மிகப் பொருமைப் படத் தக்கதாய் இருந்தது. அதில் எட்டு துணை ஆசிரியர்கள் இருந்தார்கள். வெவ்வேறு துறைகளுக்கு வெவ்வேறு துணையாசிரியர்கள். நம் திருவாளர் அவர்களில் ஒருவர். நாடகம், நடனம், ஆடல், பாடல், வேடிக்கை, கேளிக்கை, ஹாஸ்யம் இவைகளெல்லாம் தெய்வசிகாமணியைச் சேர்ந்தவை.

அவர் துறையே அனைவரையும் களிக்கச் செய்யும் துறை. உழவினர் முதல் உலகாளும் மன்னன் வரை நாடகத்தை விரும்பாதவன் யாவன்? குழவி முதல் கிழம் வரை அனைவருக்கும் நாடகப் பைத்தியமே. இவ் வுலகமே ஒரு நாடகமேடை அல்லவா? ஆதலின் எல்லா ஆசிரியர்களையும்விட இவருக்குச் செல்வாக்கு அதிகம். அற்பமாய் இருந்த சிலரை ஆசிரியர் மிக உயர்ந்த நிலையில் ஏற்றி விட்டார். சங்கீத உலகத்தில் சமனற்று பயமற்று உலவி வந்த 'சக்கரவர்த்திகள்' 'கேசரிகள்' 'இராணிகள்' என்ற பேர் வழிகள் எல்லாம் விரைவாக மறக்கப்பட்டனர். ஆசிரியரின் பேனா எல்லாரையும் மறக்கடிக்கச் செய்து விட்டது. இவ்விதமாக இவருக்குச் செல்வாக்கும், செல்வமும் அதிகரித்தன. எல்லா ஆட்டங்களுக்கும் இவருக்கு ரிஸர்வ் ஸீட். இவர் எழுதுவதே முடிவு. சங்கீத உலகத்தில் ஒருவரை ஊக்கவோ, ஒழிக்கவோ வல்லமையுள்ளவரா யிருந்தார். இவர் இவ் வண்ணம் முடிசூடா மன்னராக விளங்கலானார்.

* * *

ஆசிரியர் ஒரு நாள் மாலை சற்ற முன்னதாகவே தம் இல்லம் சேர்ந்தார். அவர் ஹாலில் உட்கார்ந்து ஏதோ வாசித்துக் கொண்டிருக்கும் போது இனிமையானப் பாட்டுக் குரல் கேட்டது. ஆசிரியர் அதை ஊன்றிக் கவனித்தார். அது ஒரு ரமணியின் குரல். அக் குரல் தம் வீட்டி லிருந்தே வந்ததென்று அவர் கண்டு கொண்டார். பெரிதும் வியப்



புற்றார். சிறிது நேரம் சென்று பாட்டும் நின்றது. ஒரு விதவையும், ஒரு சிறு யுவதியும் தம் வீட்டை விட்டு வெளியே போவதைக் கண்டார். அந்த யுவதி சரேலெனத் தோன்றி மறைந்தது, மின்னற் கொடி பளிச்சென்று தோன்றி மறைவதுபோ லிருந்தது.

உடனே அவர் காற்றிலும் கடுகி விரைந்து, தம் மனைவியை அடைந்து விசாரித்தார்:—

'அந்த விதவை என் தாயாருக்குத் தெரிந்தவள். அந்த ரமணி அவ் விதவையின் மகள். வயது பதினாறு. மிகக் கொடிய வறுமைக் குட்பட்டு வருந்துகிறார்கள். நட்பினர் இன்றியும், உறவினர் இன்றியும் ஆதரிப்பாரற்று ஏங்குகிறார்கள். எனக்கு அவர்கள் கதையைக் கேட்க மிகப் பரிதாபகரமா யிருந்தது. நம் உதவியை



நாடுகிறார்கள். நாம் ஏதாவது உபகாரம் செய்ய வேண்டும். உங்களை நம்பி அடுத்த வாரம் வரச் சொல்லி அனுப்பி யிருக்கிறேன்' என்றாள் ஆசிரியரின் வாழ்க்கைத் துணைவி.

மறுபடியும் தொடங்கி, 'ஆ ஹா! என்ன அழகு!! என்ன இனிய சாரீரம்!!! இவ்வளவும் அனுபவிக்க இவ்வுலகில் ஒரு புருஷனில்லையா? பாழும் உலகம்! பணம்! பணம்!! பணம்!! என்று பறக்கிறது. காடுகளிலும், மலைகளிலும் ரோஜா மலர்கள் பூக்கின்றன. அவைகளின் இன்பம் துய்ப்பாரின்றி வாடி, வதங்கி, உதிர்ந்து காய்கின்றன. அப் பூக்களின் கதியே இந்த ரமணிக்கும். இளமை, எழில், தேகக்கட்டு, எல்லாம் 'வா வா' என்று அழைக்கின்றன. அக் கன்னிகை என் மனத்தைக் கொள்ளை கொண்டு விட்டாள். நாம் அப் பெண்ணிற்குத் தகுந்த ஒரு பையனைக் கலியாணமாவது செய்துவைக்க வேண்டும்' என்று விடாது மன்றாடினாள் இரக்கத்தினால்.

ஆசிரியரும் அநுதாபப்பட்டார்; சிறிது தயங்கினார். ஒரு யோசனை கிட்டிற்று. மனைவியிடம் தெரிவித்தார். அது முறையே, அவ்வேழைப் பெண்டிருக்கும் தெரிவிக்கப்பட்டது. அவர்களது நிலையில் அவர்களும் சம்மதித்தனர்.

'அன்னபூரணி' என்ற அந்த ரமணியின் பெயர், சுருக்கமும் இனிப்பும் கொண்ட 'விமலா' என்று மாற்றப்பட்டது. மூன்று மாதப் பயிற்சியுடன் விமலா நாடக மேடைக்குத் தயாராய் விட்டாள். ஆசிரியரின் மனைவியும் உள்ளம் களித்தாள்.

* * *

'ஸ்ரீமதி விமலா தேவியின் வருகை—இதுவே முதல் தோற்றம்—கந்தர்வ கன்னிகையின் அழகும் குரலும்—தேவலோக ஸ்திரீகளின் நடனத்திறமை—ஒருவரும் பார்க்கத் தவறக்கூடாத ஒரு நாடக நக்ஷத்திரம்' என்று கொட்டை எழுத்துக்களில் ஓர் பிரசுரம் 'ஹிந்து சமாசாரம்' பத்திரிகையில் ஒரு நாள் வெளிவந்தது. நாடக மேடைக்குப் புது வரவைப்பற்றித் தெய்வசிகாமணியின் குறிப்பும் கீழே பிரசுரிக்கப்பட்டிருந்தது.

'நாடகம் ஒத்திகை வைக்கும்போது, விமலா என்னும் இம் மாதின் நடிப்புத் திறத்தைப் பார்த்துள்ளோம். அழகு, குரல், சங்கீத ஞானம், நடிப்புத்திறமை இந் நான்கும் நாடகப் பாத்திரங்களுக்கு, அதிலும் முக்கியமாக நாடக நாயகிகளுக்கு, மிக மிக அவசியம். இந் நான்கும் ஒருங்கே பொருந்துவது மிக அரிது. ஒன்றிரண்டு ஓங்கியும் மற்றவை தாழ்ந்தும் இருப்பதைத்தான் நாம் கண்டுள்ளோம். இவ்வனைத்தும் பொருந்திய அரிய மாது நாடக உலகிற்குக் கிடைத்தது இணையற்ற பாக்கியமே. ஒப்பற்ற எழிலும், மதுரமான குரலும், குரலிற் கேற்ப அபாரமான சங்கீத ஞானமும், அவ்வனைத்தையும் விழுமிய நடிப்புத் திறனும், இந்த ரமணீ படைந்துள்ளாள்.

'மற்றோர் விஷயம். இவளது வயது பதினாறே. இளமையிலேயே இத்தனை வல்லமை காட்டும் இந்த ரமணீ ஒரு பிரத்தியேகப் பிறப்பு என்றே கூறவேண்டும். அதிகம் கூறுவதில் பயனென்ன? கண்கூடாகப் பார்த்துக் களித்துத் திடமுறலாம். இதற்கு நாம் சிபார்சு செய்கிறோம்.

* * *

நாடகம் நடந்தேறியது. விமலா நாடக உலகில் ஒரு விண் மீன் ஆனாள். எங்குப்பார்த்தாலும் விமலாவைப் பற்றியே பேச்சு. 'தெய்வசிகாமணி கூறுவது பொய்ப்பதே யில்லை' என்ற ஆசிரியரின் பெருமையையும் கலந்து ஒலித்தது.

இது மட்டுமல்ல, விமலாவின் இளமை, தேகக்கட்டு, நடை, சாயல், ஒய்யாரம் இவைகள் செய்த கொடுமை சிறிதல்ல. நாடக மேடையிலிருந்து விமலா விடுத்த மலர்வாளிகள் பெரும்பாலரை வருத்தின. வெறும் பாணத்திற்குத் தப்பலாம், காமபாணத்திற்குத் தப்ப முடியுமா? நம் ஆசிரியரும் இந்தத் துர்பாக்கியத்திற்குள்ளானர். இளமை கடந்து இல்லறம் புரிந்துவரும் சுமார் நாற்பது வயதுள்ள நம் திருவாளரும், மேடைமீது விமலாவைக் கண்டு காதல் கொண்டார்.

விமலாவிற்கு அடித்தது 'சகட யோகம்'; சிறப்பும், செல்வமும் சடுதியில் கிட்டின. பேரும் பெருமையும் பரவிவிட்டது. போட்டோக்காரர்களும், கிராமபோன் ரிகார்ட் எடுப்பவர்களும் அவளைத்

தொந்தரவு செய்யலாயினர். இளங்காளைகளிற் பலர் அவ ளில்லத்தைச் சுற்றி வட்டமிடலாயினர். விமலா தவிக்கலானாள்.

ஆசிரியரை, பிதா, குரு, தெய்வம் அனைத்துமாகக் கருதியிருந் தாள் விமலா. ஆசிரியரது நோக்கமோ வேறு. நெருங்கிப் பழகப் பழக அவருக்குக் காதல் ஓங்கி வளர்ந்தது. அவளை நாடி பேட்டிக்காக வும், பேச்சிற்காகவும், புன்னகைக்காகவும் இளம் மைனர்கள் படும் பாட்டையும் தமக்கும் விமலாவிற்கும் உள்ள சம்பந்தத்தையும் ஒப்பிட்டுக்கொண்டார். 'வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க் கழுபவர்'போல் தம்மை நொந்து கொண்டார்.

ஆசிரியரின் காதல்வலி மிஞ்சிவிட்டது. ஆயினும் எப்படி தெரி விப்பது? விமலாவோ, அவர் 'நட்டபயிர்'. தாமும் ஒரு மனைவியை யுடையவர். எவ்வாறு காதலை வெளியிடுவது என்று ஏங்கி நின்றார். உணவு, உறக்கம் துறந்தார். நிறத்தில் வெளுத்தார். எடையில் குறைந்தார். சந்தர்ப்பத்தை எதிர் பார்த்த வண்ணம் நலிந்து கொண்டிருந்தார்.

அவரது சரீர மாறுதல்களை விமலா கவனியாமல் இல்லை. ஒரு நாள் விசாரித்தாள். அந்தச் சந்தர்ப்பத்தைக் கைக் கொண்டார் நம் ஆசிரியர்.

'விமலா' என்று ஆரம்பித்தார். குரல் தழுதழுத்தது. உடல் நடுங்கியது. இளைத்திருந்த எண்சாண் உடம்பும் குன்றியது. குசேலர், கிருஷ்ணபகவானிடம் இரக்கப் போனதுபோ லானார். எனினும், காதல் ஊக்க, சிறிது ஊக்கமுற்றார்.

விமலா, எனக்கு விமோசனம் அளிக்கவல்ல விமலா, என் உயிர் உனது கையில் இருக்கி றது. 'பெண் என்றால் பேயும் மயங்கும்.' உன் வசீகரங்கள் என் மனத் தைச் சிறைப்படுத்தி விட்டன. மேனகை, அருந்தவரிஷியாம் விசு வாமித்திரரின் தவத்தைக் கலைத்தாள். நீ என்மனோ நிம்மதியைக் குலைத்து விட்டாய். நீ என் பிரி யத்திற் குட்பட்டால் தான், நான் உயிர் பிழைத்திருப்பேன். நீ என் மனைவியாக வேண்டும்' என்று முடித்தார்.



அவர் மனத்தி லிருந்த பளுவை ஒழித்து விட்டதுபோல் சற்று நிம்மதி அடைந்தார். முகமும் தெளிவுற்றது. விமலாவின் விடையை எதிர் பார்த்த வண்ணம் பரபரத்து நின்றார்.

விமலாவிற்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. அவள் என்ன பதில் அளிப்பது? ஆசிரியரின் வேண்டுகோளைச் சிறிதும் பொருட்படுத்தாது புறக்கனித்துவிடலாம். எனினும் விமலா அத்த கையள் அல்லள். அவர் செய்திருக்கும் நன்றியை அவளால் மறக்க முடியவில்லை. தன் பழைய கஷ்டங்கள் எல்லாம் அவள் மனத்தை விட் டகலவில்லை. தனக்குத்தானே எண்ணலானாள். 'என்னை ஒரு நாடகமேடை இராணியாக ஒரு நொடிப்பொழுதில் ஆக்கிவிட்டார். என் வறுமையை வெருட்டினார். இவரை என் பிதாவாக நான் கருதி யிருக்கும்போது, இவர் விருப்பம் இவ்வாறு இருக்கிறதே! என்ன செய்வேன்! எனக்கு யார் புத்திமதி சொல்ல இருக்கிறார்கள். 'நல்ல ஆபத்து வேளைதன்னில் அஞ்சல் என்று உற்றதுயர் தீர்த்துளோன் ஒரு பிதா; அன்புளோன் ஒரு பிதா, அல்லவா?'

'மேலும், இவர் மனைவி என்னைப்பற்றி என்ன நினைப்பாள்? நாயினுங் கீழாகக் கருதுவாளே. அவ்வம்மையாலன்றோ, நான் வறுமை நீங்கி, வளம் அடைந்தது. கொடுமை! கொடுமை!!' என்று மனத்திற்குள்ளேயே பற்பல எண்ணங்களால் உலுப்பப்பட்டு, 'இருதலைக்கொள்ளி எறும்புபோல்' தயங்கலானாள்; ஆகையால் பேசாது நின்றாள்.

ஆசிரியருக்கு வருத்தம் நெஞ்சை யடைத்தது. ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகமாய்த் தோன்றியது. அவள் திகைப்பிற்கும் மௌனத்திற்கும் காரணம் புலப்படவில்லை.

மறுபடியும் இறைஞ்சலானார்.

'விமலா, என்னைக் கைவிட்டுவிடாதே. காதலா? சாதலா? இரண்டிலொன்றே. 'இல்லை' என்று சொல்லிவிடாதே.'

ஆசிரியரின் காதற்பெருக்கத்தின் வேகத்தை ஆற்றுதவளானாள்; தடுமாற்றமுற்ற வார்த்தைகளில்

'நீங்கள் என் பிதா அல்லவா? உங்கள் மனைவியே என் அன்னை. நீங்களிருவரும்தான், எனக்குப் பற்றுக்கோடு, நீங்கள் ஏற்றிவைத்த விளக்குத்தானே நான்! உங்கள் மனைவியின் விருப்பத்திற்கு மாறாக நான் நடக்கலாமா? 'உண்ட வீட்டிற்கு இரண்டகம் எண்ணலாமா?'

கேவலம், வறுமைக்காற்றுது, நாடகமேடையிலேறினேன். அதற்காகக் குணத்தைக் கெடுத்துக் கொள்ளலாமா! நன்றியை மறக்கலாமா? நான் என் செய்வேன்? உங்கள் உபகாரத்திற்கு என்ன கைம்மாறு செய்யவல்லேன்?...'

'என் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதே உன் கைம்மாறு' என்று குறுக்கிட்டார், ஆசிரியர். காதலுக்குக் கண்ணில்லை. புத்தியில்லை, மனமுமில்லை, எதுவுமில்லை. ஆனல் வேகம் அதிகம். காதலில் மயங்கிய அக்கற்றவருக்கு ஒன்றும் ஏறவில்லை.

விமலாவிற்கு மேலே என்ன சொல்வது என்று விளங்கவில்லை. அவர் பிடிவாதத்தைக் கண்டு ஒன்றுந் தோற்றுது விம்மி விம்மி அழலானுள். அவள் வாழ்க்கையே ஓிருள் சூழ்ந்ததுபோல் அவளுக்குத் தோன்றியது. 'நான் ஏன் இவ்வாசிரியர் வழியில் தென்பட்டேன்' என்று தன்னையே நொந்துகொண்டாள். ஆசிரியரின் இரங்கலுக்கு அனுதாபப்பட்டாள். எனினும் 'செய்நன்றி மறக்கலாமா?' என்று தன்னையே வினவிக்கொண்டாள். ஆசிரியரின் மனைவியையும் நினைத்துக் கொண்டாள். வாளா இருந்தாள் சிறிது நேரம்.

காதல் நோயின் வேகமும் வெப்பமும் அதிகரித்தன. அவள் தயங்கத் தயங்க அவருக்குக் கோபமும் தாபமும் பெருகின. காலதாமதத்தையும் மௌனத்தையும் தாங்காதவராய்ச் சற்றுச் சினத்தோடு,

'விமலா, வீணுக என்னை வாட்டாதே. போதும் உன் வேதாந்தமும், விளக்கமும். நாடகமேடையில், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு! வெகு அழகு! நன்றி! கைம்மாறு! என்ன ஏமாற்றல்! என்ன சாகஸம்! நல்லது. இரண்டிலொன்று சொல்' எனக் கடிந்தார்.

ஆசிரியர் ஸ்திரீகளின் மனப்பான்மை தெரியாதவர். தம் கோப மொழிகள் என்ன செய்ய வல்லவை என்று அறியாதவர்.

'நாளைக்குள் முடிவு சொல்லிவிடுகிறேன்' என்ருள் விமலா நடுக்கத்துடன்.

ஆசிரியருக்குச் சிறிது சந்தோஷம். 'இல்லை' என்பதைவிட அம்மறுமொழி மேலாகப்பட்டது. கோபம் கொஞ்சம் தணிந்தது. எனினும், விமலாவின் விடை அநுகூலமா யிருந்தாலும் இருக்கலாம்; பிரதிகூலமா யிருந்தாலும் இருக்கலாம். எனவே,

'நாளைக்கு உன் முடிவு, தீர்ப்பு எனக்கு அநுகூலமா யிருக்க வேண்டும். இன்றேல், என்னுயிர் அல்லது உன்னுயிர் அல்லது இரண்டும் போகவேண்டியதுதான்' என்று சபதமிட்டார்.

விமலா நடுங்கினள். ஆனல் வாய் திறக்கவில்லை.

* * *

மறுநாள் 'ஹிந்து சமாசார'த்தில் ஒரு அறிக்கை வெளிவந்தது.

'புதிய நாடகமேடை இராணி, விமலா தேவியின் பரிதாபகரமான தற்கொலை. காரணம் இன்னும் விளங்கவில்லை. நாடகவுலகிற்கு ஓர் அரிய இழப்பு'

இச் செய்தி நம் ஆசிரியருக்கு முன்னமேயே தெரிந்து விட்டது. அவரும் அன்று முதல் நோய் வாய்ப்பட்டு, சில நாட்களுக்குள் இவ்வுலகை நீத்து விமலா சென்றுள்ள விண்ணுலகிற்கு அவளுடன் வாழ விரைந்து விட்டார்.

காதலுக்கு இரண்டு பலி. ஆசிரியரின் சபதம் நிறைவேறியது.

காலஞ்சென்ற
டாக்டர் அன்னி பெசண்டம்மையார்

—'தமிழ்நாடு' உதவியது.

குருவிப் பாட்டு

[பரலி - சு. நெல்லையப்பர்]

1. சின்னஞ் சிறு குருவி—நீ
செய்கின்ற வேலை யென்ன ?
வண்ணக் குருவீ இ—நீ
வாழும் முறை கூறாய்.

2. கேள் அடா மானிடவா—எம்மில்
கீழோர் மேலோர் இல்லை
மீளா அடிமை இல்லை—எல்லோரும்
வேந்தர் எனத் திரிவோம்.

3. உணவுக்கு வேலை இல்லை—எங்கும்
உணவு கிடைக்கு மடா
பணமுங் காசு மில்லை—எங்கு
பார்க்கினும் உண வேடா.

4. சிறியதோர் வயிற் றினுக்காய்—நாங்கள்
ஜென்மம் எல்லாம் வீணாய்
மறியலில் இருப்பது போல்—பிறர்
வசத்தினில் உழல்வ தில்லை.

5. காற்றும் ஒளியும் மிகு—ஆ
காய மேயெங் கள்
ஏற்ற மிகு வீடு—இதற்
கெல்லை ஒன் றில்லையடா.

6. வையகம் எங்கு முள—உயர்
வானப் பொரு ளெல்லாம்
ஐயமின் றெங்கள் பொருள்—இவையெம்
ஆகார மாகு மடா.

7. ஏழைகள் யாரு மில்லை—செல்வம்
ஏறியோர் என்று மில்லை
வாழ்வுகள் தாழ்வு மில்லை—என்றும்
மாண்புடன் வாழ்வ மடா.

8. கள்ளங் கபட மில்லை—வெறுங்
கர்வங்கள் சிறுமை யில்லை
என்னற் குரிய குணம்—இவை
யாவும் எங் குலத்திலடா.

9. களவுகள் கொலைகள் இல்லை—பெருங்
காமுகர் சிறுமை இல்லை
இளைத் தவர்க்கே வலியர்—துன்பம்
இழைத்துமே கொள்வ தில்லை.

10. சின்னஞ் சிறு குடிசில்—மிகச்
சீரழி வீடு களில்
இன்னலில் வாழ்ந்திடு வீர்—இது
எங்களுக் கில்லை யடா.

11. பூநிறை தருக் களிலும்—மிகப்
பொலிவுடைச் சோலை யிலும்
தேநிறை மலர் களிலும்—நாங்கள்
திரிந்து விளை யாடுவோம்.

12. குளத்திலும் ஏரி யிலும்—சிறு
குன்றிலும் மலை யினிலும்
புலத்திலும் வீட்டி னிலும்—எப்
பொழுதும் விளை யாடுவோம்.

13. கட்டுகள் ஒன்று மில்லை—பொய்க்
கதைகளும் ஒன்று மில்லை
திட்டுகள் கலகங் கள்—முதற்
சிறுமைகள் ஒன்றும் இல்லை.

14. குடும்பக் கவலை யில்லை—சிறு
கும்பித் துயர மில்லை
இடும்பைகள் ஒன்று மில்லை—எங்கட்
கின்பமே என்று மடா!

15. துன்ப மொன் றில்லை யடா—ஒரு
துயரமும் இல்லை யடா
இன்பமே என் வாழ்க்கை—இதற்
கேற்ற மொன் றில்லை யடா.

தமிழ் நாட்டின் விழிப்பு

[தேசீயக்கவி - சி. சுப்பிரமணிய பாரதியார்]

ஜீவ ஹிம்சை கூடாது. மது மாம்சங்களால் பெரும்பான்மையோருக்குத் தீங்குண்டாகிறது. மது மாமிசங்கள் இல்லா திருத்தல் சைவர்களுக்குப் பெரிய கீர்த்தி. அது பெரிய தவம். அது கிருதயுகத்திற்கு வேராகக் கருதக்கூடிய அநுஷ்டானம்.

ஆனாலும் தாம் ஒரு காரியத்தைச் செய்யாமலிருப்பது பற்றி அதைப் பிறர் செய்யும் பொழுது அளவிறந்த அசூயை கொள்ளுதல் தவறு.

ஊண், உடை, பெண் கொடுக்கல் வாங்கல் முதலிய விஷயங்களில் மூடத்தனமான கட்டுப்பாடுகளும் விதிகளும் விலக்குகளும் தடைகளும் காட்டுவதில் யாதொரு பயனுங் கிடையாது.

மேலும் உலகத்து மனிதர் எல்லோரும் ஒரே ஜாதி......எல்லா மனிதரும் ஒரே வகுப்பு. ஆஸ்திரேலியாவிலுள்ள புதர் மனிதர் முதலாகக் கும்பகோணத்துப் பார்ப்பனர், மலையாளத்து நாயர், ஸ்விஸ் ஜாதியார், மெக்சிகோ தேசத்தார், ஆங்கிலேயர், சென்னைப் பட்டணத்துச் செட்டிகள், அத்தனை பேரும் ஒரே குலம், ஒரே குடும்பம்.

சகல மனிதரும் சகோதரர். மனுஷ்ய வர்க்கம் ஓர் உயிர். இப்படியிருக்க நாம் ஒரு வீட்டுக்குள்ளேயே மூடத் தனமான ஆசாரச் சுவர்கள் கட்டி 'நான் வேறு ஜாதி, என் மைத்துனன் வேறு ஜாதி, இருவருக்குள் பந்தி போஜனம் கிடையாது' என்று சொல்வதும், 'அவன் சீமைக்குப் போனான்; அங்கே ஒரு வேளை மது மாம்ஸம் உண்டிருப்பான்; அவனை ஜாதிப்பிரஷ்டம் செய்ய வேண்டும்' என்பதும் சுத்த மடமையென்பதைக் காட்டும் பொருட்டாக இத்தனை தூரம் எழுதினேன்.

தமிழ் நாட்டில் ஜாதி சம்பந்தமான மூட விதிகளும் ஆசாரங்களும் சட சட வென்று நொறுங்கி விழுகின்றன.

அடுத்த விஷயம் பெண் விடுதலை......ஸ்திரீகளுக்கும் ஜீவன் உண்டு; மனம் உண்டு; புத்தி உண்டு; ஐந்து புலன்கள் உண்டு. அவர்கள்

செத்த யந்திரங்களல்லர். உயிருள்ள செடி கொடிகளைப் போலவுமல்லர். சாதாரணமாக ஆண் மாதிரியேதான். புற உறுப்புகளே மாறுதலுடையன. ஆத்மா ஒரே மாதிரி. இதனை மறந்து அவர்களைச் செக்குமாடுகளாகப் பாவிப்போர் ஒரு திறத்தார். பஞ்சுத் தலையணைகளாகக் கருதுவோர் மற்றொரு திறத்தார். இரண்டும் பிழை.

ஸ்திரீகள் தமக்கிஷ்டமான புருஷரை விவாகஞ் செய்துகொள்ளலாம். விவாகஞ் செய்துகொண்ட புருஷனுக்கு ஸ்திரீ அடிமையில்லை, உயிர்த்துணை. வாழ்க்கைக்கு ஊன்றுகோல். ஜீவனிலே ஒரு பகுதி. சிவனும் பார்வதியும் போலே, விஷ்ணுவும் லக்ஷ்மியும் போலே.

விஷ்ணுவும் சிவனும் உதைத்துக் கொண்டதாகக் கதை சொல்லும் பொய்ப் புராணங்களிலேகூட விஷ்ணு லக்ஷ்மியை அடித்தாரென்றுவது, சிவன் பார்வதியை விலங்கு போட்டாரென்றுவது கதைகள் கிடையா. சிவன் ஸ்திரீயை உடம்பிலேயே பாதியாகத் தரித்துக்கொண்டார். விஷ்ணு மார்பின் மேலே இருத்தினார். பிரமா நாக்குக்குள்ளேயே மனைவியைத் தாங்கி நின்றார். ஜகத்திற்கு ஆதாரமாகிய பெருங் கடவுள் ஆண் பெண்ணென இரண்டு கலைகளுடன் விளங்குகிறது. இரண்டும் பரிபூரணமாகச் சமானம். அணுவளவு பெண்ணை உயர்வாகக் கூறுதலும் பொருந்தும்.

எனவே, இன்று தமிழ் நாட்டில் மாத்திரமேயல்லாது பூமண்டல முழுவதிலும் பெண்ணைத் தாழ்வாகவும் ஆணை மேலாகவும் கருதி நடத்தும் முறைமை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு. அது துன்பங்களுக்கெல்லாம் ஆதாரம்; பாவங்களுக்கெல்லாம் அஸ்திவாரம்; அநீதிகளுக்கெல்லாம் கோட்டை; கலியுகத்திற்குப் பிறப்பிடம்.

இந்த விஷயம் தமிழ் நாட்டில் பல புத்திமான்களின் மனத்திலே பட்டும் பெண் விடுதலைக் கட்சி தமிழ் நாட்டின் கண்ணே பலமடைந்து வருகிறது. இந்த விஷயத்திலும், தமிழ் நாடு பூமண்டலத்துக்குச் சிறந்த வழி காட்டியாக விளங்கு மென்பதில் ஆட்சேபமில்லை.

அடுத்த விஷயம் மத பேதங்களைக் குறித்தது. இதில் பாரத தேசம், முக்கியமாகத் தமிழ் நாடு இன்று புதிதாக அன்று—நெடுங்காலமாகவே பூமிக்குத் தலைமை விளக்காக ஒளி செய்து வருதல் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இராமானுஜர் தமிழ் நாட்டில் பிறந்தவ ரன்றோ? நாயன்மார்களும் ஆழ்வாராதிகளும் அவதாரம் புரிந்தது தமிழ் நாட்டி லன்றோ?

பறையனைக் கடவுளுக்கு நிகரான நாயனாராக்கிக் கோயிலில் வைத்தது தமிழ் நாட்டி லன்றோ? சிதம்பரம் கோயிலுக்குள்ளே

நடராஜாவுக்கு ஒரு சந்நிதி; பெருமாளுக்கு ஒரு சந்நிதி. ஸ்ரீரங்கத்திலே பெருமாளுக்கு ஒரு துருக்கப் பெண்ணைத் தேவியாக்கித் துலுக்க நாச்சியார் என்று பெயர் கூறி வணங்குகிறார்கள். 'எம்மதமும் சம்மதம்' என்றார் இராமலிங்க சுவாமிகள். உலகத்திலுள்ள மத பேதங்களையெல்லாம் வேருடன் களைந்து சர்வ சமய சமரசக் கொள்கையை நிலை நாட்ட வேண்டுமானால் அதற்குத் தமிழ் நாடே சரியான களம். உலக முழுதும் மத விரோதங்களில்லாமல் ஒரே தெய்வத்தைத் தொழுது உய்யுமாறு செய்ய வல்ல அறிஞர்கள் இப்பொழுது தமிழ் நாட்டிலே தோன்றியிருக்கிறார்கள். அது பற்றியே பூமண்டலத்தின் புதிய விழிப்பு தமிழகத்தே தொடங்குமென்று கூறுகிறோம்.



இது யார் குற்றம்?

'தமிழர'சை வழக்கமாகப் படிக்கும் அன்பர் ஒருவர் புகை வண்டியில் பிரயாணம் செய்யும்போது அந்த மாதத் தமிழரசை ஒரு ஜங்ஷனில் வாங்கி ஆவலாய்ப் பிரித்து அதிலுள்ள கதையை ஆழ்ந்து படித்துக்கொண்டிருந்தார். அவரது மனம் 'தமிழர'சிலேயே பதிந்திருந்தது. அப்போது ஒரு திருடன் அவர் பக்கத்தில் வந்து உட்கார்ந்து அவர் சட்டைப் பையிலிருந்த மணிபர்ஸை மெதுவாக எடுத்தான். அதை அவர் சிறிதும் உணரவில்லை. இது யார் குற்றம்?

திரு அந்தோணி நாயனார் புராணம்

[திரு. சு. குருசாமி]

'இதென்னடா! அந்தோணியாம், நாயனாராம், புராணமாம். வேடிக்கையா யிருக்கிறதே!' என்று சிலர் வியப்புறுவர். அவர்களுக்காகத் தான் இம் முகவுரை எழுத முற்பட்டேன். முதலாவது நான் உங்களுக்குச் சொல்லவேண்டுவது என்னவென்றால், நான் இப்பொழுது எழுதப் புகுந்தது ஒரு சிவபக்தருடைய புராணம். அவருடைய பெயர் அந்தோணி நாயனார். 'இதென்ன கொடுமை சிவபக்தருக்கு அந்தோணி என்று பெயராமே! இதுவுங் கலிகாலக் கொடுமை போலும்!' என்று சில வைதிகப் பழங்கள் வயிற்றில் அடித்துக் கொள்ளுகிறார்கள். எல்லாம் உங்களால் வந்த கொடுமையே யல்லாமல், கலிகாலத்தினால் வந்த கொடுமை யல்ல.

திரு அவதாரப் படலம்

நாலா பக்கங்களிலும் நாகதாளிக் கோட்டைகளாலும், சாக்கடையாலாகிய அகழிகளாலுஞ் சூழப் பெற்ற பள்ளச்சேரி ஒன்றில் மண் சுவர்களின்மேல் கூரை வேய்ந்த வீடு ஒன்று உண்டு. அவ்வீட்டில்தான், நமது நாயனார், செவளக் குடும்பனுக்கும், மாரியாயிக்கும், அவர்கள் முன்னாளில் செய்த தவப்பயனாய் வந்து அவதரித்தார். மழை பெய்தால், அவ்வூர் ஆற்றில் வெள்ளம் வரத் தவறினாலும், நமது நாயனார் வீட்டில் வெள்ளம் வரத் தவறுவதில்லை. அது நாயனாரது மகிமையினால் என்று சிலர் சொல்வர். ஆனால் உண்மையில் காரணம் வேறு.

நாயனாரது பிள்ளைத் திருநாமம் கருப்பணன். இது நாயனாரது காரணப் பெயரோ என்பது எனக்குச் சந்தேகம். நாயனார் யானைச் சிவப்பு என்று சிலர் சொல்வர். அது தவறு. ஏனென்றால், யானைக்கும் முகத்தில் இரண்டொரு வெள்ளைப் புள்ளிகளுண்டு. ஆனால் நாயனாரோ ஒரே கருப்பு. காக்கையை அவருக்கு உவமையாகச் சொல்லலாமோ என்றால், அதற்குங் கழுத்தில் சிறிது கருப்பு மங்கி யிருக்கும். 'காக்கையிற் கரிது களம்பழம்' என்பார்கள். ஆனால் களம் பழத்தை நான் பார்த்ததில்லை; பாராமல் அதை எப்படி உவமை

யாகக் கூறுவது? ஆகையால் நான் இப்பொழுது கூறுவது என்ன வென்றால், ஒப்பு, உயர்வு இல்லாத அவாது நிறத்திற்கு ஓர் உவமை யைக் கூறி, அவாது மகிமையைக் குறைப்பது தகாத காரியம் என்பதே. கடவுள் ஒப்புயர் வில்லாதவர். அது போலவே நமது நாயனரும்.

நமது நாயனர், நந்தனர் வமிசத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொள்ளுகிறார். 'எப்படி?' என்று கேட்டு விடாதீர்கள். ஏனென்றால், அவர்கள் இருவருக்குமுள்ள உறவை விளக்குவ தற்கே ஒரு தனித்த புராணம் எழுத வேண்டும். நாம் இங்கு அறிய வேண்டுவது என்னவென்றால், அந்த நந்தனர் வாசனை நமது நாய னருக்குங் கொஞ்சம் அடித்தது என்பதே. நாயனருக்குஞ் சிறிது கடவுள் பக்தி யுண்டு.

சிவன் கோயிலுக்குச் சென்று பரமசிவனைத் தரிசிக்க வேண்டு மென்று நாயனருக்கு வெகு நாளாக ஆசை. ஆனல் பாழும் பஞ்சம குலத்தில் பிறந்திருக்கிறாரே, அதற்கு என்ன செய்வது? பல நாளாக இதைப்பற்றி யோசித்து இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார். உள்ளூர்க் கோயிலுக்குச் சென்றால், அவரைக் கண்டுபிடித்து விடுவார்கள். ஆகையால், பக்கத்திலுள்ள ஆகம புரிக்குச் செல்வதாக உத் தேசித்து வெள்ளை வஸ்திர மணிந்து, திருநீறு குழை த்து நன்றாய்ப் 'பட்டை பட்டை'யாகப் பூசி, ஒரு சந்தனப் பொட்டும் வைத் துக்கொண்டு புறப்பட் டார். நாயனர் ஆகம புரியை அடைந்து, தைரி யமாகக் கோயிலுக்குள் நுழைந்து சுவாமி சந்நி தியை அடைந்தார்; சுவாமியைப் பார்த்தார். பார்த்ததும் நாயனருக்கு அடக்க முடியாத ஆச்ச ரியம். உடனே பக்கத்தி லிருந்தவரை நோக்கிப் பின்வருமாறு திருவாய் மலர்ந்தருளினர்.



'இதென்னண்ணே! சாமி ஒரலுங் கொளவியும் போல இக்குது! இதைக் கும்பிடறதுக்குத்தானு, தின்னீறு கின்னீறெல்லாம்

பூசிக்கிட்டு, இவளவு கஸ்டப்பட்டு வந்தேன். எங்க முனியாண்டி யீக்கானே என்ன முறுக்கா! அவன் மீசையளகும், திறு திறு இண்டு முளிச்சிக்கிட்டிருக்கிற அவன் கண்ணு முளியும் பாக்கிற துக்கு என்ன அளகா இருக்குமே!'. நாயனர் சாயம் வெளுத்துவிட்டது. உடனே அங்கிருந்தவர்களெல்லாம் 'உதை, அடி, பிடி, மிதி' என்று வந்துவிட்டார்கள். நாயனர் என்ன செய்வார் பாவம்! இந்தச் சமயத்தில், நல்லவேளையாய், எந்தச் சாமி புண்ணியத்தாலோ ('ஊராங் குளவியின் புண்ணியமா யிருக்கலாம்) ஒரு வைதீகக் கிழம் ஓடி வந்து, 'அடடே! அவனைத் தொடாதிங்கோடா. பாவண்டா. அவன் பள்ளண்டா. நான் கம்பு கொண்டு வர்றேன். அப்பறம் நல்லா அடிடிங்கோடா!' என்றார். நமது நாயனர் பல ஜோலிக்காரர். அவர்கள் கம்பு தேடிக் கொண்டுவந்து அடிக்கும் வரைக்கும் பொறுமையுடன் உட்கார்ந்திருந்து—அப்பப்பா! உட்காரலாமோ, உட்காரக்கூடாது—நின்று கொண்டிருந்து, அடிவாங்கிக்கொண்டு போவதற்கு அவருக்கு அவகாசமில்லை. ஆகையால் 'விறு விறென' நடந்து கொடுத்தார்.

ஜோசப் பாதிரியார் தடுத்தாட்கொண்ட படலம்

நாயனர் தம் ஊரை யடைந்து, வீட்டிற்குச் சென்றார். அவருடைய தெருவில் ஒரு கோடியில் ஒரு கூட்ட மிருந்தது. அதென்னவென்று பார்க்கலாமென்று பக்கத்தில் சென்றார். அங்கே ஒரு பாதிரியார் மதப் பிரசாரஞ் செய்துகொண்டிருக்க, அதைப் பள்ளர் சிகாமணிகளும் பறையர் சிகாமணிகளுஞ் செவிமடுத்திருந்தார்கள்.

நாயனரும் உட்கார்ந்து கவனமாகக் கேட்டார். கேட்டுக் கொண்டிருக்கும் போதே, தாம் ஆகமபுரிக் கோயிலில் பட்ட அவமானம் அவர் ஞாபகத்திற்கு வந்தது. உடனே திடீரென எழுந்தார். சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் நின்று யோசித்தார். மறுபடியும் உட்கார்ந்தார். உட்கார்ந்து, பாதிரியார் சொல்வதைக் கொஞ்ச நேரங் கேட்டுக் கொண்டிருந்தார். பின்பு பாதிரியார் சொல்வதில் மனம் போகவில்லை. இருந்தாற் போலிருந்து ஒரு யோசனை

தோன்றியது. அன்று திருநீலகண்டேஸ்வரர் கோயிலில் ஒரு பட்லரைப் பார்த்த ஞாபகம் வந்தது. மறுபடியும் எழுந்தார். நெற்றியி

விருந்த பொட்டைப் 'பிய்த்தார்'. திருநீற்றை யழித்தார். கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தார். பாதிரியார் இவருக்கு ஞானஸ்நானம் பண்ணி வைத்து (Antony) 'ஆண்டனி' என்று பெயரிட்டார். இப்பெயர் நமது நாயனார் வாயில் நுழையவில்லை. ஆகையால் அந்தோணி என்று சொல்லுவார். சில வேளைகளில் 'அந்தோணி' என்பதையும் மறந்து விடுவார். ஆகையால் யாராவது 'உன் பெயரென்ன?' என்று கேட்டால் 'நான் மறந்து விட்டேன். பாதிரியாரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்' என்று சொல்லுவார். கூடிய சீக்கிரத்தில், பாதிரியார், நாயனாருக்கு ஒரு துரையினிடத்தில் பட்லர் வேலையும் வாங்கிக் கொடுத்தார்.

நாள் ஆக ஆக, அந்தோணி நாயனாருக்கு 'ஊறுங் குளவி'யின் பேரில் அன்பு மிகுந்துகொண்டே வந்தது. கடைசியாகத் தினந் தோறுஞ் சிவன் கோயிலுக்குப் போவதெனத் தீர்மானித்தார். அது முதல், அநுதினமுங் கோயிலுக்குச் சென்று சுவாமியையும் அம்மனையும் மிகுந்த பக்தியுடன் தரிசித்து வந்தார். இப்பொழுது அவருக்கு சுவாமி தரிசனத்தில் ஒரு தொந்தரவும் ஏற்படுவதில்லை. எஜமானர் உலாவப்போகுஞ் சமயம் பார்த்து அவர் கோயிலுக்குப் போவது வழக்கம். ஞாயிற்றுக்கிழமைகளில் 'சர்ச்சு'க்குப் போகும்படி கட்டாயப்படுத்தினால் அங்கே போய்ச் சிவபிரானையே மனத்தில் நினைத்து ஆராதிப்பார்.

இவ்வாறு பல மாதங்கள் சென்றன. கோடைகாலம் வந்தது. எஜமானர் கொடைக்கானலுக்குச் சென்றார். நாயனாருங்கூடச் செல்ல வேண்டியிருந்தது. நாயனாருக்கு ஒரு பெருங்கவலை. கொடைக்கானலில் சிவன் கோயில் கிடையாது. என்ன செய்வது? எஜமானர் கூடப் போய்த்தான் தீரவேண்டும். ஆனால் சிவபிரானைத் தரிசியாமல் அவரால் இருக்க முடியவில்லை. ஆகையால், கொடைக்கானலிலுந் தினந்தோறுஞ் 'சர்ச்சு'க்குச் சென்று சிவனையே சிந்தித்த வண்ணமாயிருப்பார். ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை. வழக்கம்போல், சிவபிரானைச் சிந்தித்துக்கொண் டிருக்கும்போழ்து, பக்தி வெள்ளம் பெருகி, அடக்க முடியாதவராய், 'அரஹர சிவசிவா' என்று சொல்லிக் கன்னத்தில் அடித்துக் கொண்டார். அங்கிருந்தவர்க ளெல்லாம் பார்த்தார்கள். வேறு வழியில்லை. நாயனாரைக் கிறிஸ்துவ மதத்தினின்றுந் தள்ளி விட்டார்கள்.

'பழைய குருடி கதவைத் திறடி' என்ற படலம்

மீண்டும், ஹிந்து மதத்திற் சேர்ந்து கொள்ளலாம் என்று நினைத்து, நாயனார், ஒரு புரோகிதரிடஞ் சென்று பிராயச்சித்தஞ்

செய்து கொண்டார். பிராயச்சித்தஞ் செய்துகொண்ட பின்னர், தாம் இனி கோயிலுக்குள் செல்லலாமா என்று ஐயரைக் கேட்டார். 'நீ என்ன ஜாதி?' என்று ஐயர் கேட்டார். 'நான் குடும்பன்' என்ருர் நாயஞர். 'அப்போ, நீ கோயிலுக்குள் போகலாமோ? அது உனக்கல்லவோ பாவம்! உங்களுக்குத்தான் உங்கள் சாமி காடன், மாடன், கருப்பணன், ஐயஞர் இன்னும் எத்தனையோ இருக்கின்றனவே. அவைகளைப் போய்க் கும்பிடேண்டா?' என்று மிகவுங் 'கருணை'யோடு ஐயர் அருளினர். 'என்ன சாமி, இருந்திருந்து, அந்த முறட்டுப்பய சாமிகளையா கும்பிடச் சொல்லுகிறீர்கள்?'

என்ருர் நாயஞர். 'அதற்கென்ன செய்வது? அது உன் தலைவிதி. அந்தச் சாமியைக் கும்பிட்டால்தான் உனக்கு மோக்ஷம்' என்ருர் ஐயர்.

நாயஞர் உண்மையாகப் புத்தியுடையவராஞல், நந்தஞரைப் பிராமண குலத்தில் சேர்த்துக் கொள்ளும்படி கட்டளையிட்டது போல், ஏன் நமது நாயஞரையும் பிராமண குலத்தில் சேர்த்துக் கொள்ளும்படி அசரீரியாகச் சொல்லக்கூடாது என்று சிலர் கேட்கலாம். தற்காலத்துச் சாமிகள் தான், பேசிஞல் வாயி லிருக்கும் முத்தெல்லாம் உதிர்ந்து விடுமென்று மௌனஞ் சாதிக்கின்றனவே!

நாயஞர் என்ன செய்வார் பாவம்! வேறு வழி ஒன்றுந்தோன்றவில்லை. மறுபடியுங் கிறிஸ்தவ மதத்திற் போய்ச் சேர்ந்து கொண்டார். இப்பொழுது அவர் கோயிலுக்குப் போவதற்குத் தவறுவதுமில்லை. அவரை ஒருவருந் தடுப்பதுமில்லை.

அவருக்கு என்று விமோசனமோ!

புராண பலன்

இவ்வங்கோணி நாயஞர் திவ்விய புராணத்தைப் படிப்பவர்கள், இம்மையில் சகல சம்பத்துடனும் வாழ்ந்து, பிள்ளை பதினாறும் பெற்று, பேரன் பேத்திக்குங் குறை வில்லாம லிருந்து, மறுமையில், தேவலோகத்திற்குச் சென்று, ஒரு நூறு வருஷ காலம் இந்திர பதவியை யனுபவித்து, இறுதியில், பரமசிவனின் பாதார விந்தங்

களை யடைவர். இதைக் கேட்பவர், படிப்பவரைப் போல், இவ்வுல கத்தில் எல்லாச் சுகங்களுடனும் வாழ்ந்து, தேவலோகத்திற்குஞ் சென்று, இந்திர பதவியை நூறு வருட காலம் அனுபவித்துப் பின்பு மறுபடியும் பூவுலகத்தில் பிறந்து, பின்னர், இறைவனடிகளை எய்தும் பாக்கியம் பெறுவர். இதைப் படிக்க வேண்டுமென்று நினைத் தவர், இவ்வுலகத்தில் ஒரு குறைவு மில்லாமல் வாழ்வர். இதை எழுதினவனுக்குப் பலனு? ஒரு வேளை இத்திவ்விய புராணம் பிரசுரிக் கப் படாமல் போவதுதான். அதைவிடப் பெரும்பலன் வேண்டுமா? இதில் எழுதியுள்ள விஷயங்களை நம்பாதவர்களும், அதற்கு மாருக விதண்டாவாதஞ் செய்கிறவர்களும் என்றும் மீளாத நரகத்தில் வீழ்ந்து மாய்வர்.

*   *   *

கொஞ்சம் பொறுங்கள். இன்னொரு சங்கதி. இதைப் படித்த தன் பயனாக யாராவது சீக்கிரம் சுவர்க்கத்திற்குப் போக நேர்ந்தால், அங்குச் சேக்கிழார் சுவாமிகள் இருப்பார்; அவரை நான் வரச் சொன்னதாகச் சொல்லுங்கள். 'எதற்கு?' என்று கேட்டால் 'தாங்கள் அறுபத்து மூன்று நாயன்மார்கள் புராணம் பாடினீர்க ளல்லவா? இப்பொழுது நாயன்மார் அறுபத்துமூவர் என்பது பொய்த்து விட்டது. அந்தோணி நாயனுர் என்று ஒருவர் அவதரித் திருக்கிருர். நாயன்மார் அறுபான்நால்வராயினர். அவருடைய புரா ணத்தைப் பாடி, முடிவுபெருமலிருக்கும் பெரிய புராணத்தை முடிப்ப தற்காக நான் வரச்சொன்னதாகச் சொல்லுங்கள்.

யாராவது நாயன்மாரைக் கோயில்களில் பிரதிஷ்டை செய்து வைத்தால், நமது அந்தோணி நாயனுரை மறந்துவிட வேண்டாம்.



அன்பு முத்தம்

[திரு. பெ. தூரன்]

சின்னப்பன் ஓர் ஏழைக் கிழவியின் ஒரே மகன். தாயும் பிள்ளையும் காட்டுப்பாளையத்தில் சிறிய குடிசையொன்றில் வசித்து வந்தார்கள். சின்னப்பன் மூன்று ரூபாய்க்கு ஒரு பண்ணையத்தி லிருந்தான். அதை வைத்துக்கொண்டுதான் அவர்கள் காலந்தள்ளவேண்டும். மற்றப்படி தாய்க்கு மகன் ஆஸ்தி; மகனுக்குத் தாய் ஆஸ்தி. தாய் தனது மகனை மிக்க அன்புடன் வளர்த்து வந்தாள். ஒரு வேளை கஞ்சி குடித்துங் குடியாமலும் அவள் தன் மகனைப் போஷிப்பாள். பையனுக்கு உடுக்க மாத்திரம் இரண்டு துண்டுகளுண்டு. அவன்மேல் அவன் வாழ்ந்த பதினாறு வருஷங்களில் ஒரு நாளும் ஆடைபட்டு அறியாது. ஆனால் தாயும் மகனும் இன்பமாக வாழ்ந்து வந்தார்கள்.

சின்னப்பனுக்குப் பண்ணையக்காரன் மாடுகளை மேய்ப்பதுதான் வேலை. பகல் முழுதும் மாடுகளோடு திரிவான். அது அவனுக்கொரு விளையாட்டு. மாடுகளென்றால் அவனுக்கு அதிகப் பிரியம். அதிலும் ஓர் இளங்காளையை அவன் தன் சொத்தாகப் பாவித்து வந்தான். அது பருத்துப் பார்ப்போர் கண்ணைக் கவரும் கம்பீரமுள்ளதாயிருந்தது. அதற்குக் கூர்மையான இரு கொம்புகளுண்டு. அதனால் சின்னப்பன் அதை 'ஈட்டிக் கொம்பன்' என்று செல்லப் பெயரிட்டுக் கூப்பிடுவான். அதன்மேல் ஒரு ஈ நாத்தக் கூடாது. அது 'மா' என்று கத்தினால் தன்னைத்தான் கூப்பிடுகிறது என்று அவன் ஓடுவான்.

பொழுது விழவிழ சின்னப்பன் தொழுவத்திற்கு மாடுகளை ஓட்டிக்கொண்டு வந்து அடைத்துவிட்டு வீட்டிற்கு வருவான். இரவு அன்ன மருந்திய உடன் அவன் தன் தாயாரோடு ஒரு கட்டிலில் வெளி வாசலிற் படுத்துக்கொள்வது வழக்கம். தாயார் கதை சொல்வாள். அதைக் கேட்டுக்கொண்டே சிறுவன் தூங்கிவிடுவான். தூக்கத்தில், 'டே! ஈட்டிக்கொம்பா? கொணாரி போடரீங்களா?' என்பான். கிழவி புன்சிரிப்போடு அவனுக்கு ஒரு முத்தம் அளித்து

விட்டுத் தானும் உறங்கிவிடுவாள். நக்ஷத்திரங்கள் தான் அவர்களைக் காத்துக்கொண் டிருக்கும்.

மாதத்தின்பின் மாதமாய்க் கழிந்து கார்த்திகை பிறந்து முதல் வாரமும் சென்று விட்டது. காட்டுப்பாளையத்து மாரியம்மனுக்குப் பொங்கல். மாரியம்மன் பொங்கலென்றால் காட்டுப்பாளையத்திற்கு ஒரு பெரிய கொண்டாட்டம். புதிய மாப்பிள்ளைகள், பழைய மாப்பிள்ளைகள், பந்துக்கள் எல்லோரும் அங்கு இரண்டு நாள் முன்னதாகவே வந்து கூடிவிடுவார்கள். பொங்கலன்று எங்குப் பார்த்தாலும் புதுவேஷ்டிகள், தீபாவளிக்கு எடுத்துக் கொடுத்த சிவப்புப் பட்டு வஸ்திரங்கள், பச்சை வஸ்திரங்கள், கெண்டை நாற்மடிகள், மேகவர்ணப் புடைவைகள், வான வில்லிலும் அதிக நிறவேறுபாடுகளுடைய சிற்றுடைகள், இதைவிட நகைகள் எல்லாம் தலை மயங்கிக் கோயிலிலும், கடைகளிலும் மிளிரும். மாமன்மார்களும் அம்மாயிமார்களும் கொடுத்த 'தேர்க்காசு' கொண்டு சிறுவர்கள் வாங்கிய 'சீக்கி', புல்லாங்குழல் ஓசை ஊர் முழுதுங் கேட்கும்.

சின்னப்பன்க்கு அவன் தாயார் பொங்கலன்று இரண்டணாக் கொடுத்தாள். அவன் உடனே நல்ல வெங்கல மணி ஒன்று வாங்கி 'ஈட்டிக் கொம்ப'னுக்குக் கட்டிவிட்டான். அவனுக்கு வந்த சந்தோஷத்திற் களவில்லை. 'ஈட்டிக் கொம்ப'னை கட்டிக்கொண்டு ஒரு முத்தங் கொடுத்தான்.

மறுநாள் வழக்கம்போல் சின்னப்பன் மாடுகளை ஓட்டிக் கொண்டு காட்டுக்குச் சென்றான். புதிதாக மணி கட்டியிருப்பதால் 'ஈட்டிக்கொம்பன்' மிரண்டு வாலைத் தூக்கிக்கொண்டு ஓடிற்று. ஓடவே மணிச் சத்தமும் அதிகரித்தது. அதனால் அது சின்னப்பன் கைக்குச் சிக்காமல் எங்கேயோ ஓடிவிட்டது. சின்னப்பன் மிக்க வருத்த மடைந்தான். பகல் முழுவதும் அங்கு மிங்கும் ஓடினான். காளையைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இருட்டானதும் காளை தொழுவத்திற்கு வந்துவிடுமென்று பார்த்தான். ஆனால் மறுநாளும் அது வரவில்லை.

பண்ணையக்காரனுக்குக் கோபம் வந்து விட்டது. 'மாடுகளை விட்டுவிட்டு உங்களுக்குத் தேர்க்கடையில் என்ன சோலி!' என்று இரண்டு அறை 'பளார்' 'பளார்' என்று சின்னப்பன் கன்னத்தில் அறைந்தான்; 'காளை வந்து சேராவிட்டால் ஊரைவிட்டுக் குடியெழுப்பியாகிவிடும் சாக்கிரதை' என்றான்.

சின்னப்பன் தேம்பிக் கொண்டே வீட்டை நோக்கி நடந்தான். 'ஈட்டிக்கொம்ப'னைக் காணாத விசனம் ஒரு பக்கம்; தான் எவ்வளவு

பணிவாக வேலைசெய்து வந்திருந்தும் பண்ணையக்காரன் அடித்தானே என்ற வருத்தம் மற்றொரு பக்கம். அப்பொழுதுதான் அவனுக்கு 'என்ன இருந்தாலும் நான் ஒரு கூலிக்காரன் தானே, மூன்று ரூபாய்க்காக வேலை செய்பவன்தானே' என்ற எண்ணம் உண்டாயிற்று.

'ஈட்டிக்கொம்பன்' நல்ல காளையாவதற்கு நான்தானே காரணம். இப்பொழுது அது போய்விட்டதென்று எனக்கு அடி கிடைத்தது. காளை வந்து சேராவிட்டால் ஊரைவிட்டே போய்விட வேண்டுமாம்' எனப் பலவாறு நினைத்துப் பெருமூச்சுவிட்டான். அவன் கண்களிலிருந்து முத்துப்போன்ற நீர்த்துளிகள் சிந்தின.

இதற்குள் அவன் குடிசைக்குப் பக்கத்தில் வந்துவிட்டான். கண்ணீரினிடையே அது மங்கிப் பன்மடங்கு கேவலமாகத் தோன்றியது. 'அம்மாள் இதைக் கேட்டால் அழுவாளே, அவளிடம் எப்படிப் போவேன்?' என்று எண்ணி விம்மினான். அவன் மனத்தில் ஓர் உறுதி உண்டாயிற்று. 'காளையைத் தேடிப் பிடியாமல் வீட்டுக்குள் நுழைவதில்லை' என்று அப்படியே திரும்பித் தன் கால் போன போக்கில் நடந்தான்.

மறுநாள் அந்திவேளை. உலகம் சூரியனது பொற்கிரணங்களில் முழுகிக் கிடக்கின்றது. பக்ஷிகள் இனிமையாகக் கூடிக்கொண்டு வீசும் 'மெல்லிய பூங்காற்றில்' மூழ்கி மூழ்கிக் களிக்கின்றன. பசும் புல்லை மேய்ந்த பசுக்கள் சுரந்து வீங்கிய மடியைத் தாங்க மாட்டாது அசைந்தசைந்து தங்கள் கன்றுகளைத் தேடி வீடு நோக்கிவந்து கொண் டிருக்கின்றன. பின்னால் மாடு மேய்ப்பவர்கள் புல்லாங்குழல் வாசித்துக் கொண்டும், வயலில் வேலை செய்துவிட்டு வரும் கூலிக்காரர்கள் சலிப்புத் தோன்றாம லிருப்பதற்காகக் கதை சொல்லிக் கொண்டும் வருகிறார்கள். சின்னப்பனது பண்ணையக்காரன் உலாவுவதற்காகப் புறப்பட்டவன் இயற்கையழகு மனத்தைக் கவரவே, தன்னை யறியாது சுமார் நான்கு மைல் தூரம் ஊரைவிட்டுச் சென்றுவிட்டான். அவன் மனத்தில் என்றுமில்லாத ஒரு கிளர்ச்சி உண்டாயிற்று. அவன் ஆச்சரியத்தோடு சுற்றிலும் நோக்கினான். ஒரு கிளி 'கிக்கி' என்று குதப்பி மரங்களின் இலையோடு இலையாய் மறைந்தது. கிளியின் குரலைப் பழிப்பதுபோல் ஒரு காக்கை 'கா கா' என்று கரைந்து ஒரு மலை மல்லிகை மரத்தின் கொம்பில் கர்வத்தோடு பறந்து சென்று உட்கார்ந்தது. அது உட்கார்ந்ததினால் அசைந்த கொம்புகள் வெண் மலர்களை உகுத்தன. இதைக் கவனித்த பண்ணையக்காரனுக்கு ஒரு களிப்புண்டாயிற்று. அப்பொழுது அவன் மனம் மாசு நீங்கிப் பரிசுத்த மடைந்து அன்பு, இரக்கம் முதலிய நற்குணங்களுக்கு வீடாயிற்று.

இப்படி அவன் தன்னை மறந்து இயற்கையில் ஒன்றிச் சென்று கொண்டிருக்கையில் மணிச்சத்தம் அவன் காதில் விழுந்தது. அதனால் தன் உணர்வு வந்த பண்ணையக்காரன் திரும்பிப் பார்த்தான். ஒரு மரத்தில் தான் இழந்த காளை கட்டப்பட்டிருந்தது. கழுத்தில் கட்டப்பட்டிருந்த மணி சப்திக்கும்போது அது துள்ளிக் குதித்தது. சின்னப்பன் 'ஈட்டிக் கொம்ப'னைத் தன் இடுப்புத் துண்டால் ஒரு மரத்தோடு சேர்த்துக் கட்டிவிட்டுக் களைப்பால் ஒரு பக்கத்திற் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். அவன் அரையில் ஒரு கோவணமேயிருந்தது.

இந்தக் காட்சியைக் கண்டதும் பண்ணையக்காரனுக்குச் சின்னப்பன் 'ஈட்டிக் கொம்பன்'மேல் வைத்திருக்கும் ஆசையும் அதனால் அவனுக்கு விளைந்த துன்பமும் வெளியாகி விட்டன. ஆகையால் அவன் குறுக்கிப் படுத்துக்கொண்டிருக்கும் சின்னப்பனை அன்போடு உற்றுப் பார்த்தான். சின்னப்பன் கன்னத்தில் வழிந்த கண்ணீர்த் தாரைகளும், தான் அறைந்த அறையின் தடிப்புகளும் அப்படியே இருந்தன. அவன் இரண்டு நாட்களாகப் பட்டினியாகையால் வயிறு முதுகோடு ஒட்டியிருந்தது. பண்ணையக்காரனுக்கு இதைக் கண்டதும் இரக்கம் பொங்கிவிட்டது. 'இவனையும் அடித்தோமே' என்ற எண்ணம் அவன் கண்களில் நீரைப் பெருக்கிற்று. அப்பொழுது அவனுக்குப் பண்ணையக்காரன், கூலிக்காரன் என்ற பிரிவே மனத்தில் உண்டாகவில்லை. சின்னப்பனிடம் என்றுமில்லாத-என் பண்ணையக்காரர்களுக்கே இல்லாத-அன்பு வளரப் பண்ணையக்காரன் அவனை வாரியெடுத்து அவன் கண்ணீர் வடிந்த கன்னங்களில் அன்பு முத்தம் ஈந்தான்.

ரயிலில் பிரயாணஞ் செய்ய ஒரு பாட்டியும் பேரனும் சென்றனர்.



சிறுவன் ரயிலில் புகை கிளம்புவதைப் பார்த்துவிட்டு,

'பாட்டி ரயிலில் தீப் பிடித்துக் கொண்டது. நான் ஏறவே மாட்டேன். வா சீக்கிரம் ஆத்துக்குப் போவோம்"

ஐயருக்குக் கிடைத்த போர்டு

[திரு. டி. எஸ். எஸ். காசீம்]

போன வருஷம் கள்ளுக் கடை குத்தகைதார் C. குப்புசாமி நாடார். இவ்வருஷம் நாடார் குத்தகை எடுக்கவில்லை. ஐயருக்கும் நாடாருக்கும் கொடுக்கல் வாங்கல் விஷயமாய் அதிக நேசமுண்டு. அதனால் நாடாரிட மிருந்த கள்ளுக்கடை போர்டு பலகையை ஐயர் தமக்குக் கேட்டார். 'சரி, தருகி றேன், கள்ளுக்கடை எழுத்துக்களை அழிக்காமல், மறுபுறம் காப்பி கிளப் போர்டு எழுதிப் போட்டுக்கொள்ளுங்கள். அடுத்த வருஷக் குத்தகைக்கு நீங்கள் கொடுத்துவிட வேண்டு'மென்றார் நாடார். சரி, என்று ஐயர் ஒப்புக்கொண்டு வாங்கிப்போய் காபி கிளப் என்ற விளம்பரத்தை எழுதி ஹோட்டலில் ஐயர் தொங்க விட்டார்.



அந்தப் போர்டை வெளியே இருந்து பார்த்தால் காபி கிளப் என்றும், உள்ளே இருந்து பார்த்தால் கள்ளுக் கடை என்றும் தெரிகிறது. கள்ளுக்கடை போர்டு C. குப்புசாமி குத்தகைதார் என்று எழுதி யிருக்கிறது. காபி கிளப் போர்டு C. குப்புசாமி புரொப்ரைட்டர் என்று எழுதி யிருக்கிறது. கடைசியில் விசாரித்ததில் சொக்க நாடார்மகன் குப்புசாமி நாடார் என்றும், சின்னச்சாமி ஐயர் மகன் குப்புசாமி ஐயர் என்றும் தெரிந்தது. மேல் கண்டவர்களின் தகப்பனார் பெயர்கள் ஆங்கிலத்தில் முதலெழுத்து

C தான்வரும். பட்டப் பெயர்களாகிய ஐயர், நாடார் என்று போர்டில் எழுதாதது வருந்தத் தக்கது.

ஐயர் அதிக கர்வமுடையவர்; கரண்டி ஆபீசர் வேலை பார்த்தாலும், அதைக் கலெக்டர் வேலை என்று நினைப்பதுடன் தமக்கு 'நிகரில்லை என்று கூடியவரை ஊரில் யாவருடனும் பகைத்து வந்தார். அவர் கையில் இப்போது இரண்டுக்கு இருக்கலாம். (நண்பர்கள் தப்பர்த்தம் செய்யக்கூடாது 2 லக்ஷத்துக்கு இருக்கலாம்) மிகவும் கஞ்சத்தன முடையவர்.

ஊரில் உள்ள நான்கு காலிப் பயல்கள் ஐயருக்குப் புத்திவரச் செய்ததுதான் போற்றத் தக்க விஷயமாகும். மேல்கண்ட நான்கு பேரும் ஏதோ பேசி முடித்தார்கள். ஒருவன் 'அப்படித்தான் செய்ய வேண்டும்' என்றான். மற்றவர்கள் சரி, போட்டு எழுந்து போய் விட்டார்கள்.

மறுநாள் காலையில் ஒருவன் போஸ்டாபீசில் போய் ஆப்காரி சர்கிள் இன்ஸ்பெக்டருக்கும், போலீஸ் சப் இன்ஸ்பெக்டருக்கும் ஏதோ ஒரு தந்தி கொடுத்தான். ஒருவன் 2 பல கஞ்சாவும், ஒரு புட்டி கள்ளும் கொண்டுவந்து வைத்துக்கொண்டான். ஒருவன் கருப்பு இனமல் கொண்டுவந்து வைத்துக்கொண்டான். மாலை 6 மணிக்குமேல் இரண்டுபேர் ஐயர் கிளப்புக்குப் போய் காபி கேட்க ஐயர் உள்ளே போனதுபார்த்து பலகார பீரோவுக்குக் கீழே கள்ளு புட்டியையும் படத்திற்குப் பின்னால் கஞ்சா பொட்டணத்தையும் வைத்தான். மற்றொருவன்கருப்பு இனமலினால், காபி கிளப் என்ற விளம்பாத்தை அழித்து போர்டைத் திருப்பி மாட்டி விட்டான். அதற்குள் ஐயர் காபி கொண்டுவர இருவரும் சாப்பிட்டு போய் விட்டார்கள்.



மாலை $6\frac{1}{2}$-மணிக்கு ஒருவன் வந்து சாமி கள்ளு இருக்குதா; கஞ்சா இருக்குதா என்று சச்சரவு செய்துகொண் டிருந்தான். இப்படிக் கலகம் நடந்துகொண்

டிருக்கும்பொழுது ஒரு காரில் 6 போலீஸ்காரரும், ஆப்காரி அதிகாரி களும் வந்து ஐயர் கிளப்பில் பறிசோதனை போட்டு ஐயரை அரஸ்டு செய்து கைப்பற்றினர். அங்குக் கிடைத்த கள்ளு புட்டியும், கஞ்சா பொட்டணமும் எடுத்துக்கொண்டு கலகம் செய்துகொண் டிருந்தவ னிடம் வாக்கு மூலம் வாங்கிக் கொண்டு போய் விட்டார்கள்.

15 நாளைக்குப் பின் ஐயர் கேஸ் விசாரணைக்கு வந்தது. கலகம் செய்தவனும், கள்ளு கஞ்சா வைத்தவனும் போர்டை அழித்தவனும் ஆக 4 பேரை சாக்ஷியமாக விசாரித்து ஐயருக்கு 5 வருஷ கடின காவல் தண்டனை விதித்தார்கள்.

* * *

ஐந்து வருஷங்களுக்குப் பிறகு ஐயர் விடுதலை யடைந்து ஊர் வந்து சேர்ந்தார். காப்பி கிளப்பை எடுத்துவிட்டு ஒரு ஜவுளிக் கடை வைத்துக்கொண்டு தினம் ஒரு ஏழைக்காவது அன்னம் படைத்து அவர் உண்பார்.

ஒரு நாள் ஐயர் வீட்டிலிருக்கும்போது ஐயருக்கு எதிரியாகிய நான்கு காலிப் பயல்களும் வந்தார்கள். அவர்களை ஐயர் உபசரித்து வரவேற்றார். வந்தவர்களை என்ன சமாசாரம் என்று கேட்டார். 'ஒன்றுமில்லை. நாங்கள் செய்த சூழ்ச்சியால்தான் நீங்கள் சிறைவாச மடைய வேண்டியதாச்சு. அதற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்க வந்தோம்' என்றனர் அந்நால்வரும். 'ஆ நீங்கள் தானா என் எதிரிகள். உங்களால் நான் வெகு உன்னதமான புத்தியுடையவனானேன். உங்களைச் சீர்திருத்த தேவதைகள் என்றல்லவா வணங்க வேண்டும்" என்றார் ஐயர், ஆக எல்லோரும் சந்தோஷமடைந்து விடைபெற்றுச் சென்றார்கள்.

இப்போது ஐயர் அவ்வூர் யூனியன் சேர்மனாகவும், பொதுஜன சேவை சங்கத் தலைவராகவும் இருந்து வருகிறார். அவரைப் போற்றா தவர் பாக்கியில்லை. மேற்படி சங்கங்களில் மேற்கண்ட காலி நால் வரையும் உத்தியோகஸ்தர்களாகவும் ஐயர் சேர்த்துக்கொண்டார்.

கணேச கனபாடிகள்

[அப்பு]

வில்லிங்டன் துரையின் பேட்டி கிடைத்தாலும் கிடைக்கும், ஆனால்! எங்கள் கணேச கனபாடிகளைப் பேட்டி காண்ப தென்பது அரிது. வருடம் 365 நாளும் அவருக்கு ஓச்சல் ஒழிச்சல் என்பதே கிடையாது. ஊரிலுள்ளவர்களில் முக்கால் வாசி பேர்களுக்கு அவர்தான் உபாத்தியாயர். தம்மால் தம் காரியங்களைச் சரிவர செய்ய முடியவில்லை என்றே மாதம் ரூ. 35 சம்பளத்தில் ஐவர் அவர் கீழ் 'அஸிஸ்டெண்டாக' யிருக்கின்றனர்.

எல்லோருக்கும் அவரிடம் ஒருவித நன்மதிப்பு உண்டு. அவர் பல பெரிய யாகங்கள் செய்துள்ளாரென்றும், நாலு வேதங்களும் அவருக்குக் கறதலைப் பாடமென்றும், வைதீக சம்பிரதாயத்தில் அவரை ஒருவரும் வெல்ல முடியாதென்றும் கேள்வி. அவர் கழுத்தில் மாட்டிக்கொண் டிருக்கும் உருத்திராக்ஷத்தில் தொங்கும் தங்க கௌரி சங்கமும் அதற்கு அறிகுறியாம்.

வரும்படியோ, கனபாடிகளுக்குக் கணக்கு வழக்கில்லை. ஒரே நாளில் அவருக்குப் பல இடங்களில் வேலை யிருக்கும். மேலும், அவர் தாம் அவசியம் செல்ல வேண்டிய பெரிய இடங்களுக்கு மட்டுமே செல்லுவார். இரவில் அடிக்கடி சில. பெரிய வீடுகளில் வால்மீகி ராமாயண கதாகாலக்ஷேபமும், கனபாடிகள் அவர்களால் நடத்தப்படும். இராமர் பட்டாபிஷேக கதையன்று, கனபாடிகள் அவர்களுக்கு வரும் சன்மானங்களைக் கணக்கிட முடியாது. சில வருடங்களுக்கு அவர் வீட்டிலுள்ள ஆண் பிள்ளைகளுக்கு வேஷ்டியும், அவரது தர்ம பத்தினிக்குப் புடவையும் வாங்க வேண்டியதில்லை. இவைகளைத் தவிர ரொக்கமாகப் பணம் வேறு! என்ன குறைச்சல்! மனுஷன் பிறந்தால் இப்படி யல்லவோ பிறக்க வேண்டும். அவரும் ஒரு பாங்கரைப்போலத் தக்க ஆசாமிகளாய் இருந்தால் நூறு அல்லது ஐம்பது வரை $1\frac{1}{2}$ வட்டிக்குப் பணம் கொடுத்து வருகின்றார் என்ற ஒரு வதந்தியும் உலாவுகின்றது.

சாதாரண அல்கா சாஸ்திரிகளைப் போல, கனபாடிகள் எல்லா வீடுகளிலும் பிராமணர்த்தம் சாப்பிட மாட்டார்; தம்முடைய கௌரவத்திற்குச் சமமான வீடுகளிலேதான் சாப்பிடச் சம்மதிப்பார். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் தக்ஷிணை ரேட்டும் முறையே ஏறிப் போகும். சாதாரணமாகக் குழித்தலை, கரூர் முதலிய 40-ஆம் நம்பர் வேஷ்டிகள் வாங்கிக் கொடுத்தால் கட்டிக் கொள்ள மாட்டார். அசல் சேலம் 100-ஆம் நம்பர் நூலில் தயாரிக்கப்பட்டு, சுமார் மூன்று விரக்கிடை அகலமுள்ள குண்டஞ்சு வேஷ்டிகளையே அவர் உடுத்துவது வழக்கம்.

இப்பொழுது எங்கள் ஊரில் நடந்த 'வைதீக மகா நாட்டிற்கும்' கணேச கனபாடிகள்தான் தலைமை வகித்தார்கள். நீங்க ளெல்லாம் பேப்பர்களில் பார்த்திருக்கலாமே! தீண்டாமை யைப்பற்றி பேசி, மகாத்மா காந்தியடிகளைச் சக்கை வாரி பிழிந்து விட்டார். அப்பப்பா! நானே, அவரிடம் ஒரு முறை இந்தத் தீண்டா மையை விலக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு பட்டபாடு தெய்வத் திற்குத்தான் தெரியும்.

எங்கள் வீட்டிற்கும் கனபாடிகள்அவர்கள் உபாத்யாயம் தான். என் தந்தைக்கு ஸ்ராத்தம் வந்துவிட்ட தென்றால், எனக்கு ஒரு மாத முன்பே கவலை உண்டாகி விடும். அச்சமயங்களில் நான் கனபாடிகளைத்தான் நினைத்துக்கொண்டு, அவர் மேல் பொறாமை கொள்வது வழக்கம். நமக்கு வருடத்திற்கு ஒரு நாள் சில மணி நேரங்கள் சேர்ந்தாற்போல் பட்டினி கிடப்பது கஷ்டமா யிருக்கின் றதே! எப்படித்தான் கனபாடிகள், அந்தந்த வீடுகளின் சௌகரி யப்படி, பசியைப் பொருட் படுத்தாமல் வேளைதப்பித் தப்பி புசிக்கின் றார்களோ! 'பசி வந்திடில் பத்தும் பறந்துபோம்' என்பதற்கிணங்க, அவர் சிறிதேனும் பசியினால் ஆயாசப்படுவ துண்டோ? பிறக்கும் பொழுதே கடவுளிடம் இருந்து பசியா வரம் பெற்றுப் பிறந்தனரோ, என்று நான் சில சமயங்களில் ஐயமுறுவதுண்டு. நாம் முன் ஜாக்கிரதையாகக் 'கொஞ்சம் சீக்கிரம் வந்து காரியங்களை முடித்து விடுங்கள்' என்று தெரிவிக்க வேண்டும். இல்லாவிடில் அன்று நமது பாடு கஷ்டந்தான். அம்மாஞ்சியைப் போல, பேசாம லிருந்தோ மானால், நமது வீட்டிலும் ஒரு சிறிய குட்டி 'வைதீக மகாநாடு' நடைபெறத் தொடங்கி விடும். ஊரிலுள்ள மற்ற சாஸ்திரிகளின் வரும்படியைப் பற்றிய வம்புகளும், ஒருவர்க்கொருவர், இதிகாச சாஸ்திர புராண ஆராய்ச்சிகளும் செய்யத் தொடங்கி விடுவர்.

இவ்வருடம் நடந்த என் தகப்பனார் ஸ்ராத்தத்தன்று, எனக்குப் பசி பொறுக்க முடியவில்லை. மேலும் சென்ற இரவும் டிராமாவுக் குச் சென்று கண்விழிக்க நேரிட்டதால், பசி அகோரமாய்ப் பாதைப் படுத்திற்று. என்னால் கூடியவரையில் சிரமப்பட்டு பசியைப் பொறுக்

துக்கொள்ளப் பார்த்தேன், முடியவில்லை. பாழும் மனது கேட்கின்றதா? காவிரிக்குச் சென்று திரும்பி வரும் வழியிலுள்ள ஒரு ஹோட்டலைப் பார்த்ததும், என்னை அறியாமலே ஹோட்டலுக்குள் நுழையும்படித் தூண்டிற்று. ஹோட்டல் வாசலிலேயே நின்று அரை மணி நேரம் யோஜனை செய்தேன். கடைசியில், ஹோட்டலும் ஊரில் ஒரு மூலையில் இருப்பதால், என்னை ஒருவரும் பார்க்க நேரிடாதென்று, தைரியத்துடன் உள்ளே நுழைந்தேன். நேராகச் சமையலறைக்குச் சென்று சாப்பிடுவதே நலமென்று தோன்றியதால், சமையலறைக்கே நேராகச் சென்றேன்.

சமயலறை வாசலை அடைந்ததும், நான் என்னையே நம்பாமல் என்னைக் கிள்ளிக்கொண்டேன். காண்பது கனவோ வெனத் தோன்றியது. சகலராலும் பெரிய 'வைதீகமடிசஞ்சிகள்', எனக் கருதப்படுகின்ற, கணேச கனபாடிகள் உள்பட, சிலர் உட்கார்ந்துகொண்டு, வாயைத் திறவாமல், சுமார் முக்கால் டஜன் இட்லிகளை ஒவ்வொருவரும் பிண்டு, பிண்டு உள்ளே தள்ளிக்கொண்டிருந்தனர். என்னடா, 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோலாயிற்றே' என்று, அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டேன். உள்ளே போகாமலும், வெளியே செல்லாமலும், வாசற்படியிலேயே நின்றுகொண்டிருந்தேன். கணேச கனபாடிகள் ஏதோ ஏதேச்சையாக வாசற்படியின் பக்கம் திரும்பியவர், என்னைப் பார்த்துவிட்டார்.



என்னைப் பார்த்ததும் அவர் உடம்பெல்லாம், வியர்த்து 'வெட வெட'த்துப் போய், நடுங்கிற்று. ஆடு திருடிய கள்வனைப்போலப் பேந்தப் பேந்த விழித்தார். நான் தீண்டாமையைப்பற்றிக் கனபாடிகளிடம் ஒரு முறை விவாதித்தபொழுது, அவர் என்னைப்பற்றிப் பலரிடம் 'பையன் கெட்டுப்போய் விட்டான். பறையர்களைக் கட்டிக்கொண்டழுகின்றான். இவர்களெல்லாம் பிராமணனாகப் பிறக்க வேண்டாம்,' என்று இழிவாக டமாரம் அடித்தது என் கண் முன் கூத்தாடியது. கணேச கனபாடிகள், நம்மிடம் வலுவாகச் சிக்கிக் கொண்டாரென்று, என் உள்ளம் ஆனந்த வெள்ளத்தால் பெருகியது.

கனபாடிகளை நோக்கி, 'என்ன கனபாடிகள்வாள்! தங்களைத் தான் தேடிக்கொண்டு வந்தேன். அவசரமில்லை. சவகாசமாகக் காப்பியையும் சாப்பிட்டுவிட்டு வரலாம்,' என்றேன்.

தாடி பற்றி யெரியும் பொழுது சுருட்டைப் பற்றவைத்த மாதிரி, அவர் பட்டபாட்டை என்னென்று உரைப்பது. போட்டது போட்டபடியே எழுந்து, என்னை அழைத்துக்கொண்டு கொல்லைப் பக்கமாகத் தமது வீட்டிற்குச் சென்றார்; தனிமையாக என்னை ஒரு அறைக்குள் அழைத்துப் போனார்; சாஷ்டாங்கமாக என் காலில் விழுந்து என் காலைப் பிடித்துக்கொண்டார். நான் உடனே அவர் அவ்வாறு செய்வதைத் தடுத்தேன். அவர் தமது கண்களில் நீர் பெருக என்னை மிகவும் பரிதாபத்துடன் பார்த்து, 'அப்பா! என் மானத்தை நீதான் காப்பாற்ற வேண்டும். 'பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்" என்பதைப்போல் இன்று உன்னிடம் மாட்டிக் கொண்டேன். நான் உன்னிடம் என்ன சொல்வேன். என் காலமெல்லாம் கழிந்து, இதுவரை எல்லோருக்கும் என்னிடம் ஒரு நன்மதிப்பே! இதை நான் இழந்துவிடுவேனாகில், என்னைக் கண்டு பொறாமையுறும் என் இனத்தைச் சேர்ந்தவர்களுடைய கேலிக்கு இடமாகி, நான் அடையும் அவமானத்திற்கு ஓர் அளவு இராது. அதைவிட நான் தூக்குப் போட்டுக்கொள்வதே நலம். ஆதலால் நீதான் எனக்கு உயிர் பிச்சைக் கொடுத்து, என் மானத்தைக் காப்பாற்ற வேண்டும். இன்றைய தினத்தி லிருந்தே வைதிகத்தொழிலை விட்டு விடுகின்றேன். அநாசாரமாக அதைக் கடைப்பிடிப்பதை விட விட்டு விடுவதே நலம்,' என்று கதறினார்.



என் மனதும் கலங்கிப் போய், அவர்மேல் இரக்கங்கொண்டு, நான் கண்டதை ஒருவரிடமும் பறை சாற்றவில்லையென்ற வாக்குறுதி கொடுத்து, அவரைத் தேற்றிவிட்டு வீட்டை அடைந்தேன். அன்றைய தினம் என் தந்தையின் ஸ்ராத்தம் கனபாடிகளுக்கு உடம்பு அசௌகரியமென்று வேறொருவரால் நடத்தப்பட்டது.

சிலநாட் கழித்து, கனகபாடிகளைக் காண அவர் வீட்டிற்குப் போனேன். அவரைக் காணவில்லை. ஸ்தல யாத்திரைக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறாரென அவரது தர்ம பத்தினியினால் அறிந்து கொண்டேன்.

வைதீகம், வைதீகம் என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு கணக்கற்ற அட்டூழியங்களைச் செய்யும் வைதிகப் பிச்சுகளே! இனி உஷார்! கணேச கனபாடிகளைப்போல், உங்கள் வண்டவாளங்களும் வெளி வந்துவிடும். போலி வேஷம் போடாமல் சத்தியத்தைக் கடைப்பிடித்து, உண்மையாய் நடவுங்கள். கணக்கற்ற நமது இந்து சகோதரர்கள், தீண்டாமை என்னும் திரையினுல் மறைக்கப்பட்டு, கலங்கி நிற்கின்ருர்கள். மகான் காந்தியடிகளைத் தழுவி, அத்திரையை விலக்க, நீங்கள் ஒருமுட்டுக்கட்டையாக இல்லாமல் அதற்காகப் பாடுபட்டுப், பாரதத்தாயின் ஆசியைப் பெறுங்கள்.

காட்டினுள் செல்லும் கள்வன்

தாசிகளும் தாசிகாந்தர்களும்

ஒரு விநோத நாடகம்

(திரு. ஏ. சோக்கலிங்கப் பிள்ளை)

(பதிப்புரிமை ஆசிரிய ருடையது)

சென்ற மாதத் தொடர்ச்சி

காட்சி 3

இடம்—நாராயண சாஸ்திரியார் வீட்டில் சபை

காலம்—மாலை 4 மணி

(சென்ற வாரத்தில் வந்தவர்களும், காமேஸ்வர ஐயர் அவர்கள் முதலான இன்னுஞ் சிலரும் பிரவேசம்.)

நாராயண:—ஐயா வசந்தநாதர் அவர்களே! தாங்கள் போன தடவை எங்களோடு வாதிப்பதற்காக உங்கள் சிநேகிதர்களெல்லாரையும் அழைத்து வருவதாகச் சொன்னீர்கள். இப்போது வந்தார்களா?

வசந்தநாதர்:—அவர்க ளெல்லோருக்கும் அவசரமான காரியமிருப்பதால் யாரும் வரவில்லை. சோமநாதையர் போஜனஞ் செய்தவுடனே அவர் போகவேண்டிய இடத்திற்குப் போய் விட்டாராம். பாஸ்கராசாரியார், ஸ்திரீகாந்த ரிவர்கள் இவ்வித சபைகளுக்கு வரமாட்டோ மென்றார்கள். காம கோடி ஐயங்கார், அலங்காரம் பிள்ளை இவர்களும், ஆயிரம் பேர் சேர்ந்து ஆயிரஞ் சபைகளைச் சேர்த்தாலும் தங்களுக்கொன்றும் இலக்ஷியமில்லை யென்றார்கள். காமேஸ்வர ஐயர் அவர்களும் இன்னுஞ் சிலரும் வந்திருக்கிறார்கள்.

காமேஸ்:—நான் அவர்கள் பக்கம் பேசுவதாக வந்திருக்கிறேன். ஏன் கேட்க ஆரம்பிக்கலாமா?

நாராயண:—அவசியம்.

காமேஸ்:—தேவடியாளை வைத்துக் கொள்வதால் என்ன தோஷ முண்டாகிறதோ அதை முன்னம் எனக்குச் சொல்லுங்கள்.

விவேகரா:— தேவடியாளை வைத்துக் கொள்வ தெல்லாந் தோஷமே. சிறு வயதி லிருந்து தாய் தந்தையர் வளர்த்த தேகம் பாழாகின்றது. முன்னோர்கள் சம்பாதித்து வைத்த தனமெல்லாம் தேவடியாட்கள் தனத்தைக் கண்டு பாழாகின்றன. பெரியோர்கள் சொன்ன தர்ம மெல்லாம் மண்ணில் போகின்றன. நல்லவர்கள் நம்மை நீக்கிவிட துன்மார்க்கர்களோடு சகவாச முண்டாகிறது.

யோக்கியர்கள் நிந்திக்கிறார்கள். மனைவி மக்கள் துக்கிக்கிறார்கள். நரகம் நமக்காக வாய் பிளந்து எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறது. தாய் தந்தையர் கவலையால் மூழ்கப்படுகிறார்கள். சூது, மதுபானம், அசத்தியம் முதலிய துஷ்ட காரியங்களுக்கெல்லாம் உட்படச் செய்கின்றது.

காமேஸ்:—இவைகளை யெல்லாம் யோசித்துக்கொண் டிருந்தால் நாம் உலகத்தில் இன்பம் அனுபவிப்ப தெப்படி?

விவேக:—வேசியின் சங்கமத்தால் நீங்க ளென்னமோ சுகம் அனுபவிப்பதாக நம்புகிறீர்கள். அவர்களுடன் அனுபவிப்ப தெல்லாம் துக்கமே தவிர சுகம் இம்மி யளவு மில்லை. குடித்து வெறித்துக் கீழே விழுந்து புரண்டுகொண் டிருக்கும்போது சுகமாகக் காணப்பட்டாலும், பிறகு, மயக்கம் நீங்கி ஸ்மரணை வந்து தேகநிலை தெரிந்து, ஐயோ! உடம்பு நோகிறதே என்று உணர்வதைப்போல் விபசாரஞ் செய்பவர்களுக்குத் தற்காலத்தில் தெரியா விட்டாலும், பிறகு, தேகந்தளர்ந்து துன்பப்படும்போது, முதல் அனுபவித்தவை யெல்லாம் துக்கமானதென்ற சங்கதி நன்றாகத் தெரியும். இந்தப் பாட்டைக் கேளுங்கள்:—

'கூத்தியார் போகமுங் குஞ்சிப் பொடிச்சிரங்கும்
பார்த்தா லிரண்டும் பரிசொக்கும்—கூத்தியார்
தோய்ந்த நலமொக்கும் சொரிந்தநலம் கைப்பொருளை
யீந்த நலமொக்கும் எரிவு'

பார்த்தீர்களா ? இதுபோலத்தா னிருக்கிறது.

மீனாட்சித் தம்பிரான்:—ஐய! நாம் இந்த உலகத்தில் உயிரோ டிருப்பதே நாலு நாள். கிழத்தனம் வருகிற பரியந்தம் பிழைத்திருப் போமோ என்னமோ சந்தேகம். பிழைத்திருக்கிற நாலு நாளும் மனத்திற்கிதமான விஷயத்தில் சுகமனுபவித்துச் சாகிறதுதானே.

விவேக ராஜா:—நாம் ஒரு காரியத்திற்குப் பிரவேசிப்பதற்கு முன் எதையும் விசாரிக்காமல், அப்போதுக் கப்போது தோன்றின படிக் கெல்லாஞ் செய்வது புத்திமான்களுக்கு அழகல்ல. நாம் எந்தக் காரியஞ் செய்யத் தொடங்கினாலும் அதனால் சுகமுண்டாகுமோ அல்லது வேறென்ன வுண்டாகுமோ வென்று முன்னதாக யோசித்துச் செய்ய வேண்டும். அப்படி யோசிக்காமல் பிரவேசிப்ப தானால், அப்போதைக்குப் பணங் கிடைக்கிறதே யென்கிற சந்தோஷத்தினால் திருட்டுத்தனஞ் செய்யவும் பொய் பேசவும் வேண்டி வருகிறது. வியாதிக்கு மருந்து சாப்பிடுவது வெகுட்டலா யிருக்கிற தென்று விட்டு விட்டால், பிறகு, துன்பப்பட வேண்டிவருமல்லவா?

மீனாட்சித் தம்பி:—நீங்கள் சொன்னவைகளைப் போல, இந்தச் சங்கதியில் ஏதாவது உடனே நஷ்ட முண்டாகிறதா?

விவேகரா:—ஒரு தின சம்போகத்தை அபேக்ஷித்து நம் துரைசிங்கம் பட்டபாட்டை நீங்கள் பார்க்க வில்லையா? அவனுக்கு வந்தது ஒரு நோயா, ஆறுமாத காலம் கால் முடங்கிப் பாயும் படுக்கையுமாய்க் கிடந்து செத்துப் போனவன்தானே, யார் செய்த புண்ணியமோ மறுபடியும் பிழைத்தான்.

மீனாட்சித் தம்பி:—மெய்தான், அவர் பிழைத்தது மறுபடியும் தாய் வயிற்றி லிருந்து பிறந்தது போலவே யொழிய வேறல்ல. அவர் தாய் வயிறு நல்ல பூசாபலம் பண்ணினது. நூறு ரூபாய் வாங்கிக்கொண்டாலும், அந்த வைத்தியர் தீராத வியாதியைத் தீர்த்துவிட்டார். ஸ்திரமாக ஒருத்தியையே வைத்துக் கொண்டு அவளுடனிருந்தால், இப்படிப் பட்ட வியாதிகள் எப்போதும் உண்டாகாது.

தமிழரசி

விவேகரா:—ஒருத்தி யோடே யிருப்பதா யிருந்தால் ஒரு பெண்டாட்டி யோடே யிருக்கப்படாதா? ஒருகால் ஆண்பிள்ளை ஒருத்தி யோடே யிருப்பதா யிருந்தாலும், துட்டுக்காக அங்கவீனனுக்கானாலும் நோயாளிக்கானாலும் தன் தேகத்தை விற்பதற்குச் சித்தமா யிருந்து, மாயா மந்திரங்கள் செய்து, பல குடும்பங்களைப் பாழ்படுத்தப் பூமியில் அவதரித்த தேவடியாள் ஒருவனோடே யிருப்பாளா?

மீனாட்சித் தம்பி:—நீங்கள் பூர்வீக சங்கதிகளை யோசிக்காமல் தேவடியாட்களைத் தூஷிக்கிறீர்கள். யாரும் அவர்களை வைத்துக் கொள்ளாமற் போனால் பூமியில் தேவடியாட்கள் குல மிருக்குமா?

விவேக:—அந்தக் குலமில்லாமற் போனால் என்ன நஷ்டம்? அவர்க ளில்லாமற் போனால் நாமெல்லோருஞ் சுகப்படுகிறோம்.

விபசார னிமித்தமாகப் பிரத்தியேகமாய் ஒரு சாதி யில்லாமற் போவதற்காக நாமெல்லோரும் திரிகரண சுத்தியாய்க் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும்.

மீனாட்சித் தம்பி:—நீங்கள் தேவடியாட்கள் குலத்துக்கே சுன்னம் வைக்கின்றீர்கள். நல்லது, அவர்க ளில்லாமற் போனால் சங்கீதம் எப்படி விருத்தியாகும்? கலியாணங்களிலும், சுவாமி உற்சவங்களிலும் பாடுகிறவர்களும் ஆடுகிறவர்களும் யாரிருப்பார்கள்?

விவேக:—வேண்டுமானால் ஆண் பிள்ளைகளைக் கொண்டு பாடச் செய்தலாகாதா? சங்கீதமானது துட்டுக்குக் கும்பகோணத்தைக் கொடுக்கும் தேவடியாட்கள் வசமானதால், அதனுடைய பெருமை போயிற்று. அவர்கள் பாடும் ஜாவளி கீவளி முதலிய பண்டைப் பாட்டுகளைப் பார்க்கிலும் சுவாமியண்டை சிவநாம சங்கீர்த்தனம், அரிநாம சங்கீர்த்தனம் செய்தால் நன்று யிராதா?

காமேஸ்:—சிவகீர்த்தனை, அரிகீர்த்தனைகள் பாடச் செய்தால் கலியாணங்கள் வெகு சோபிதமா யிருக்கும். இனி அழைத்த பெரிய மனுஷர்களும் செவ்வையாக வருவார்கள். (சிரிக்கிறார்.)

விவேக:—என்ன சிரிக்கிறீர்களே? பதிவிரதா தர்மத்தைத் தெரியச் செய்யச் சொல்லிய விவாகத்தில், தேவடியாட்களால் பண்டைச் சொற்களைப் பாடச் செய்வதை யொழித்து, கடவுள் விஷயமான கானத்தைச் செய்தால் நன்று யிராதா?

காமேஸ்:—ஆ, ஆ, ஆண் பிள்ளைகள் பாடினால் சங்கீதம் என்ன சோபிதமா யிருக்கும்? விபசாரத்தைப் பற்றியாவது தோஷ மிருக்கிறதென்று தாங்கள் சொன்னால் நன்று யிருக்கும். அவர்களைப் பாட்டு பாடச் செய்வது கூடாதென்றால் நாலு பேர் சிரிப்பார்கள். தேவடியாள் பாடினால் என்ன நஷ்ட முண்டாகும்?

விவேக:—'பக்ஷக்காரன் வழக்கறியான்' என்பது போல உங்களுக்கு அவர்கள் மீதுள்ள ஆசையினால், அவர்களா லுண்டாகுங் கெடுதி யெவ்வளவுந் தெரியவில்லை. விஷயம் இன்னதென்று முன்னதாக யோசித்து அறிந்து கொள்ளச் சக்தி யில்லாத அநேக புருஷர்களைத் தங்கள் மாயவலையில் போட்டுக் கொள்ளும் உபாயங்களைக் கற்றுக் கொண்டு, அவர்களை மயக்கிக் கையி லிருக்கும் பணத்தை யெல்லாம் பறித்துப் பாழ் செய்வதே பிரதிக்ஞையாகக் கங்கணங் கட்டிக்கொண்டு உட்கார்ந் திருக்கும் தேவடியாட்களால் நஷ்டமா

கின்றதா வென்று கேட்கவே வேண்டாம். அவர்கள் மனமார உண்மையாக ஆடுகிறவர்க ளல்ல. விளக்கு வெளிச்சத்தில் தங்கள் மோகினி வேஷத்தால், அங்கே பார்க்க வந்தவர்களை உட்படுத்திக் கொண்டு, தங்களுடைய பார்வையினுல் அவர்களை ஆட்டி வைக்கின் ருர்கள். ஆட்டத்தைப் பார்க்க வந்தவர்கள் அப்போதே ஏமாந்து போய், அங்கிருந்தே அத் தேவடியாள் இருப்பிடத்தை விசாரிக் கிறதும், எவ்வளவு கொடுக்க வேணுமென்றும், இப்போது அவள் யார் வசத்திலிருக்கிருளென்றும் விசாரித்து, அவர்களைச் சிநேகித்துக் கெட்டுப் போனவர்கள் எத்தனை ஆசாமிகளிருக்கின்ருர்கள். அவர்கள் விபசரிக்காதவர்களாளுல் சங்கீதம் கேட்பதில் யாதொரு நஷ்டமு மில்லை.

காமேஸ்:—அவர்கள் சங்கீதங் கேட்டவர்க ளெல்லாருங் கெட்டுப் போகிருளா?

விவேக:—எல்லாருங் கெட்டுப் போகாமற் போனுலும் அநேகர் கெட்டுப் போகிருர்கள். சமுசார பந்தங்களை விட்டு, இச்சைக்குக் காரணமான அறுசுவை யுணவுகளை நீக்கி அடவிகளிற் சென்று, காய் கனிவர்க்கங்களைத் தின்னும் முனிவர்களுங்கூடப் பெண்களின் மாய்கையி லகப்பட்டு, அவர்களுக்குத் தாசர்களாகத் திரிந்துகொண் டிருப்பவர்களென்று சொன்னல், உவர்ப்பு, துவர்ப்பு, புளிப்பு, கார்ப்பு முதலிய அறுசுவைகளோடுந் தின்று சமுசார பந்தத்தில் மூழ்கி யிருப்பவர்களுக்குக் காமத்தை விட்டு விட முடியுமா? எவ்வளவு நல்லவனுக்கும் முதலில் கெட்டதாகத் தோன்றின போதிலும், பத்துதரம் கிரமமாகத் தேவடியாட்களைப் பார்த்துக் கொண்டே வருவதால் மனஞ்சலித்து, இந்தக் காரியம் நல்லதோ கெட்டதோ? என்கிற சந்தேக முண்டாகிறது. பிறகு, அக்காரியம் நல்லதாகவே தோன்றும். அதற்குமேல் அக்காரியத்தில் பிரவேசிப்ப தற்கே புத்தி ஸ்திரப்படும். அப்போது மனங் கொஞ்சம் வருத்தப் பட்டாலும், அவர்கள் செய்யவில்லையா? இவர்கள் செய்யவில்லையா? என்கிற காரியங்களை யெண்ணித் திருப்தி செய்துகொண்டு, அந்த விர்த்தியில் பிரவேசித்த பிறகு, தேவடியாட்கள் வீட்டுச் சேவகர்க ளாகிருர்கள். ஏனையா இரத்னகர பண்டிதரே! நான் சொல்லியவை யெல்லாம் உண்மையா பொய்யா?

இரத்னகர பண்டிதர்:— நீங்கள் சொல்லியவை யெல்லாம் உண்மையே. நான் சிறுவனுனுலும் என் அற்ப அனுபவத்தில், இப்படிக் கெட்டவர்களை ஏறக்குறைய நூறுபேர் வழிகளைப் பார்த் திருக்கின்றேன். தேவடியாட்களை வைத்துக்கொண் டிருப்பவர்களைப் பார்த்தே அநேகர் கெட்டுப் போகிருர்கள். நாமெல்லோருங் கூடி அப்படிப்பட்டவர்கள் சிலரைக் குலத்தை விட்டு நீக்கினுல் மிகவும்

நன்று யிருக்கும். பசியோடு பட்டினி கிடந்து வருந்துங் குருடர்களுக்கும், நொண்டிகளுக்கும், இன்னும் ஆதாவற்ற யாசகர்களுக்கும் ஒரு காசும் கொடுக்க மனமில்லாத சிவகாருண்ணிய மற்ற எத்தனை புத்திமான்கள், மாதமொன்றுக்கு ரூபாய் 50, 60, 100 கொடுத்துத் தேவடியாட்களை வைத்துக் கொண்டு, வீணை, பாட்டு முதலிய கல்வி சொல்லி வைக்கின்றார்கள். ஏனையா வசந்தநாதாவர்களே! இந்தச் சமயத்தில் வாய்மூடிக்கொண் டிருக்கிறீர்கள்?

வசந்த:—முட்டையானது குஞ்சைப் பார்த்துப் பரிகாசஞ் செய்தது போல இக்காலத்தில் இவர்களெல்லாரும் இங்கிலீஷ் படிப்புப் படித்துவிட்டு எங்கள் எல்லாரையும் பரிகாசஞ் செய்ய ஆரம்பித்தார்கள். செய்யட்டும். கலியுகம் 5000 வருஷம் முடிந்தது. இனி வருண சங்கிரகமாகப் போகிறது. உங்களைப் போன்ற மகானுபாவர்களும் பெரிய மனுஷர்களும் புறப்பட்டபோது இன்னும் என்னென்ன ஆச்சரியமான சபைகள் ஏற்படுமோ? ஏற்படட்டும்.

காமேஸ்:—ஐய! தேவதைகள் காலத்திருந்து வந்திருக்குந் தேவடியாட்களை வேண்டா மென்கிறீர்கள். இந்திரலோகத்திலும் எத்தனையோ தேவடியாட்க ளிருக்கிறார்கள். பூலோகத்தில் மாத்திரம் ஏன் அவர்க ளிருக்கக் கூடாது? என்று உங்களைக் கேட்கின்றேன். 'சத்தியின் மாய்கை போலத் தமது மாமாய்கையாலே, நித்தமுஞ் சூழ்ந்து போற்றும் நிதியுள் ஆடவர்கட்கெல்லாம், பத்தியா யேக போகம் பகர்ந்திடற் கவதரித்த, சித்தினி தாசிமார்கள்' இல்லையாயின் இவ்வுலகில் பாட்டேது, ஆட்டமேது, இன்பமேது. சொல்லுங்கள்? தேவடியாட்களைக் காட்டிலும் அதிகமாக அந்தரங்கத்தில் குடும்பங்களில் விபசரித்துத் திரியுங் குலப் பெண்களையும் குலபுருஷர்களையும் ஒன்றுஞ் செய்ய யோசிக்க மாட்டீர்கள். அதேன்? அது ரகசித்திரம். வெளிக்கு வந்தால் மோசம். மானம் போகும். அபாயத்திற் கிடமாகும். ஆனால், தேவதைகள் காலத்திருந்து வந்திருக்குந் தேவடியாட்களுக்கு மாத்திரம் கூட்டங்கூடி கட்சி பேசுங்கள். இருக்கட்டும். உங்களுடைய ஞாயந் தெரிந்து கொண்டேன். இனி உங்களோடு பேச வேண்டியதில்லை. உங்களிஷ்டப் பிரகாரஞ் செய்யுங்கள். இருட்டாகின்றது, போக வேண்டும்.

(எல்லோரும் போகிறார்கள்.)

[தொடரும்]

நீதிபதி:—அந்தப் போலீஷ்காரனை நீ ஏன் முத்தமிட்டாய்?

குற்றவாளி:—அந்த ஆள் என்னைப் பணம் கேட்கும்போது, எனது மனைவியைப்போன்று அவ்வளவு இனிமையாகப் பேசியதால், எனது மனைவி யெனவே நினைத்து, பண மிப்போது இல்லை என்று சொல்லிக்கொண்டே முத்த மிட்டுவிட்டேன்.

* * *

கணவனும் மனைவியும் மோட்டார்காரில் போய்க்கொண் டிருக்கையில், எதிரே வந்து கொண்டிருந்த மாட்டு வண்டியில் பூட்டப் பட்டிருந்த மாடுகள் மிரண்டன.

அதைப் பார்த்த கணவன் மனைவியை நோக்கி 'உன் மனுஷாளைப் பார்த்தாயா? எப்படி மிரளுகின்றனர்' என்றார்.

மனைவி:—ஆமாம். இவர்க ளெல்லாம் எனக்குக் கலியாணமான பிறகு பந்துக்களானவர்கள்.

* * *

ஆசிரியர்:—இந்தியாவிலுள்ள விலங்குகளில் கொடியது ஒன்று சொல்.

மாணவன்:—அடிமை விலங்கு.

* * *

பெரியவர்:—பையா! சிகரெட் நீ உபயோகப்படுத்தலாமா?

சிறுவன்:—கூடா தென்றுதான் பொசிக்கித் தள்ளுகிறேன்.

* * *

ஐயா, இந்தச் சமயத்தில் நீங்கள் பணம் உதவினல் நான் உங்களை என்றும் மறக்கமாட்டேன்.

ஆம், அடிக்கடி என்னிடம் பணம் பணம் என்று தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருப்பாய்.

* * *

ஒருவர் கிராப் செய்துகொள்ள சலூனுக்குச் சென்ருர். பார்பர் கிராப் செய்து முக க்ஷவரம் செய்ய ஆரம்பித்தபோது வேறு ஒருவர் க்ஷவரம் செய்து கொள்ள வந்தார். முதலில் வந்தவர் முகத்தில் சோப்பைத் தடவி அப்படியே உட்கார வைத்து விட்டு இரண்டாவது வந்தவருக்கு க்ஷவரம் செய்து விட்டான்.



இரண்டாவது வந்தவர் அம்பட்டனுக்கு ஒரு அணு கொடுத்தார்.

அம்பட்டன்:—என்ன ஒரு அணு கொடுக்கிறீர்களே?

இ-வந்தவர்:—ஏன் போதாதா? வேறொரு வேலையைக் கவனித்துக்கொண்டுதானே எனக்கும் செய்தாய்?

* * *

மனைவி:—நீங்கள் என்னைக் கலியாணம் பண்ணிக்கொண்டிராவிட்டால் என்மீது உங்களுக்கு இவ்வளவு ஆசை இருக்குமா?

கணவன்:—இவ்வளவு இராது. இன்னும் அதிகமாக இருந்திருக்கும்.

* * *

ஆசிரியர்:—கற்றதனல் ஆய பயன் என்?

மாணவன்:—வெள்ளையர்தம் நற்ருள் தொழுதலேயாம்.

* * *

ராமன்:—இராமாயணம் என்பதே நடந்திருக்க முடியாது.

இராவணன்:—அதை எப்படிக் கண்டுபிடித்தீர்?

இராமன்:—கதைக்குக் காலுண்டா? காலிருந்தா லல்லவோ நடந்திருக்க முடியும்?

* * *

முத்து:—அடே, நான் ஒரு கடிதம் எழுதி அதில் மடையனுக்குக் கொடுப்பது என்று போட்டால் தபால் ஆபீசில் என்ன செய்வார்கள்!

மணி:—கடிதம் உனக்கே திரும்பி வரும்.

* * *

வக்கீல்:—அடே, உன்னை எதிரி எவ்விதம் வைதான்?



சுப்பன்:—வாயில் வந்த படித் திட்டினன்.

வக்கீல்:—அது சரிதான். என்ன சொல்லித் திட்டினன்.

சுப்பன்:—பெரிய, யோக்கியமும் கண்ணியமும் வாய்ந்த மனிதர்களிடத்தில் அந்தக் கேவலமான வார்த்தைகளைச் சொல்ல நான் விரும்பவில்லை.

வக்கீல்:—அப்படியானல் நியாயாதிபதியின் காதில் மாத்திரம் சொல்லி விடு.

* * *

குமாஸ்தா:—சார்! எனக்கு லீவ் வேண்டும்.

மானேஜர்:—ஏன்? என்ன காரணம்?

குமாஸ்தா:—டாக்டரிடம் போக வேண்டும். எனக்குத் தலைவலி.

மானேஜர்:—தலைக்குத்தான் பற்று போட் டிருக்கிருயே. பின்னர் ஏன் டாக்டரிடம் போக வேண்டும்?

குமாஸ்தா:—அது பற்று அல்ல சார். விபூதி அணிந்திருக்கிறேன்.

வெளி விகடம்

தமிழ் மக்களுக்கு இன்பம் தருவது எது?

அரசுரிமை பெற்று வாழ்பவர்களுக்கு உண்டாகும் இன்பத்தை விட அதிக இன்பத்தை அளிப்பது எது?

இவற்றிற்குப் பதில் உங்களுக்குத் தெரியுமா? தெரியாவிட்டால் முதல் கேள்வியிலுள்ள முதல் மூன்று எழுத்துக்களையும், இரண்டாவது கேள்வியிலுள்ள முதல் மூன்று எழுத்துக்களையும் சேர்த்து வாசித்துப் பாருங்கள். சரியான விடை கிடைக்கும். —ஜெயராமன்

* * *

மகன்:—(பாடசாலையிலிருந்து வந்து தாயைப் பார்த்து) அம்மா இனிக் காற்றடிக்கும்போது நீ வெளியே செல்ல வேண்டாம்.

தாய்:—எதற்காக மகனே?

மகன்:—பூகோளப் படத்தில் காற்றுகளெல்லாம் அம்புகளைப் போலப் பாய்கின்றன. ஆதலினால் காற்றடிக்கும்போது நீ வெளிச் சென்றால் அவைகள் உன் தேகத்தில் குத்திவிடும். —ச. சின்னத்துரை

* * *

சாப்பிடுகிறவர்:—ஐயரே, நீர் வெங்காய சாம்பார் என்றீரே, ஒரு வெங்காயம்கூடக் காணோமே?

ஓட்டல் ஐயர்:—என்ன ஐயா நீர் மைசூர் ரசம், பம்பாய் சட்னி என்றால் மைசூரையும், பம்பாயையும் பதார்த்தங்களில் காட்டச் சொல்வீர்போ லிருக்கிறதே? —சிவலிங்கம்

* * *

'ஆடை யில்லா மனிதன் அரை மனிதன்'.

'ஆம்! ஆம். ஆடை யில்லாத மனிதன் வெட்கப்பட்டுக்கொண்டு அறையில்தான் இருப்பான். —விமலா

எசமான்:—(வேலைக்காரரைப் பார்த்து) நீங்கள் சொன்ன வேலைகளை மாத்திரஞ் செய்கின்றீர்களே யன்றி நீங்களாய் நினைத்து ஒரு வேலையுஞ் செய்யவில்லையே. உங்களைப் பார்த்தால் பரமார்த்த குருவின் சிஷர்களைப்போல் காணப்படுகின்றீர்களே.

வேலைக்காரரிலொருவன்:—ஐயா, அப்படியானால் பரமார்த்த குருவாகக் காணப்படவேண்டியவர் தாங்கள் தானே.

—ச. சின்னத்துரை

* * *

தந்தை:—குழந்தாய்! விளையாடிக்கொண் டிருக்கும் போது லக்ஷ்மியின் முகத்தில் கடித்து விட்டாயாமே? இனி இப்படி அக்கிரமம் செய்தால் கட்டாயம் அடிபடுவாய்.



மகன்:—அப்பா, என்னை அடிப்பதாயின் உங்களை யார் அடிப்பது?

தந்தை:—என்னை என் அடிக்க வேண்டும்?

மகன்:—நேற்று சாயங்காலம் நீங்கள் அம்மாவின் முகத்தைக் கடித்ததை நான் பார்த்தேன்.

—எம். சுப்பிரமணியம்

* * *

அம்மா, உன் மகன் மிகவும் துஷ்டனாக இருக்கிறான். அவன் என் பெண்ணைப் பார்த்து 'ஆ! என்ன அழகு, என்ன அழகு' என்று கேலி செய்தானாம்.

அம்மா, நீங்கள் கோபித்துக்கொள்ள வேண்டாம். அவன் மடையன். இப்படித்தான் அவன் எதையும் நன்றாகப் பார்க்காம லேயே சொல்லிவிடுகிறான்.

—லோகநாதம்

* * *

இராமன்:—வைத்தியர் என்னை மூன்று வாரத்துக்குள் நடக்கும்படி செய்கிறேன் என்றார்.

கிருஷ்ணன்:—அப்படியா?

இராமன்:—ஆமாம். அவருடைய பீஸைக் கொடுக்க என் மோட்டாரை விற்கும்படி ஆய்விட்டது.

—திருநாவுக்கரசு

(தன் தகப்பனை இழந்த பையன் தாயைப் பார்த்து) அம்மா, நான் கொஞ்சி விளையாடுவதற்கு எனக்கு ஒரு தம்பி பெற்றுத் தா.

தாய்:—உங்க அப்பா இல்லையே.

மகன்:—மார்க்கண்டேயர், சாவித்திரி இவர்களுடைய பெற்றோர் கடவுளைத் தொழுது அப் பிள்ளைகளைப் பெற்றனரென்று எங்கள் உபாத்தியாயர் சொன்னாரே. அப்படியாயின் அப்பா இல்லாவிட்டாலும் நீயும் கடவுளைத் தொழுது ஒரு பிள்ளை பெறக் கூடாதா?

* * *

சாராயங் குடிப்பவர்:—(விற்பவரைப் பார்த்து) ஓய் ஏன் சாராயத்தில் தண்ணீர் கலந்து விற்கிறீர்?

சாராயம் விற்பவர்:— நான் தண்ணீர் கலந்து விற்கா விட்டால் நீங்கள் வீடு போய்ச் சேருவது திண்டாட்டமே. தண்ணீர் கலந்தபடியால்தானே வெறி இல்லாமல் போகின்றீர்கள்.



* * *

நீதிபதி:—நீ முன்னரும் பல குற்றச்சாட்டுக்குள் அகப்பட்டிருக்கின்றாய். இம் முறை உனக்குச் சரியான தண்டனை விதிக்க வேண்டும்.

குற்றவாளி:—ஐயா, நான் குற்றஞ் செய்வது எனக்காகவல்ல. தங்களுக்காகவே.

நீதிபதி:—எப்படி?

குற்றவாளி:—என் போன்ற முட்டாள்கள் குற்றஞ் செய்யாவிடில் தங்களைப் போன்றவர்களுக்கு இந்த நீதிபதி வேலை கிடைத்திருக்க மாட்டாது. ஆதலால் நான் தன்னயங் கருதாமல் தங்களைப் போன்றவர்களுக்காகவே பிரயாசைப்படுகின்றேன். எனவே எனக்கு ஏதும் உதவி செய்ய வேண்டும். —ச. சின்னத்துரை

தாய்:—மகளே, ஒரு வெறும் பானை எடுத்துக்கொண்டு வா.

மகள்:—அம்மா அங்கு ஒரு வெறும்பானையும் கிடையாது.

தாய்:—ஏன் மகளே அப்படிச் சொல்லுகின்றாய்.

மகள்:—வெறும் பாத்திரங்களுளெல்லாம் வாயு இருக்குமென்று எங்கள் உபாத்தியாயினி சொன்னார். —ச. சின்னத்துரை

* * *

வெயிலில் வேலை செய்யும் கூலிக்காரனைப் பார்த்து 'அடே! வெயிலில் மொட்டைத் தலையோடு வேலைசெய்கிறாயே! மூளை உருகிப் போகாதா?'

கூலிக்காரன்:—ஐயா, என் தலையில் மூளை இருந்தால் இந்த வேலைக்கு வருவேனா?

—எம். சுப்பிரமணியம்

* * *

தகப்பன்:—மகனே நீ எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்.

மகன்:—இனிமேல் அப்படியே செய்கிறேன்.

(சில தினங்களுக்குள் அவர்கள் வீடு தீப்பற்றிக் கொண்டது. தகப்பன் அந்நேரம் அங்கு இல்லை. சிறிது நேரஞ் சென்று தகப்பன் அங்கு வருதலும் வீடு முழுவதும் தீப்பற்றிக் கொண்டதை அறிந்தான். அப்போது மகன் ஆழ்ந்த சிந்தனையிலிருக்கிறான்.)

தகப்பன்:—அடே வீடெரிவது உனக்குத் தெரியவில்லையா?

மகன்:—தெரியும். ஆனால் சில தினங்களுக்கு முன் நீங்கள் தானே எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டுமென்று சொன்னீர்கள். ஆதலினாற்றான் நான் இப்போது வீடெரிவதை விட்டுச் சிந்திக்கலானேன். —ச. சின்னத்துரை

* இன்பக் கனிகள்

[சொந்தத் தோட்டத்தில் விளைந்தவை]

மண் உண்ணிகள்

'மண் உண்ணி' என்னும் சிறிய பிராணி மண்ணைத் தின்று அதனைப் பக்குவமாகச் செய்து மீண்டும் பூமிக்கே அளிப்பதாகப் பலரும் கூறுவர். மண் உண்ணி செய்யும் வேலை புல் பூண்டு வர்க்கங்களுக்கு மிகவும் உதவியாகின்றதாம். இவ்வாறு மண் உண்ணி மண்ணைத் தின்று பக்குவஞ் செய்தளிக்கும் மண்ணானது புல் பூண்டு வர்க்கங்களுக்குச் 'செவிலித்தாய் ஊட்டும் உணவுபோல்' இனிக்கின்றதாம். இக் காரணத்தால் 'மண் உண்ணிக்குப் புல் பூண்டுகளின் செவிலித்தாய்' என்ற பெயர் உண்டாம்! நமது சிறிய சகோதரவர்க்கங்களாகிய புல்பூண்டு வர்க்கங்களுக்கு அமுத உணவூட்டி வளர்க்கும் செவிலித்தாய் வாழ்க! ஆனால், மண்ணுண்ணியைப் பார்த்தும் அதன் நற்குணத்தை யறிந்தேனும் பரோபகாரிகளாக வாழத் தெரிந்து கொள்ளாது 'வீணே உணவுண்டு மண்ணுக்குப் பாரமாகி, முடிவில் மண்ணாகின்ற மானிடரைப் பார்த்துப் போலும் வெட்கித் தலைகுனிந்து இம் மண்ணுண்ணி துள்ளிக் குதிக்கின்றது.'!

இரட்டையர் அல்லது மானிட ஜோடி

இரட்டையர் என்று புகழ் பெற்ற இரண்டு கவிகள் தமிழ் நாட்டில் இருந்தனர். இவர்க ளிருவரும் முறையே கண் ணில்லாதவரும் காலில்லாதவருமாக இருந்தனர். ஆயினுமென்ன! புத்திமான் பலவான்! இவர்களில் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து 'நண்பரே! நாமிருவரும் கலைமகளின் திருவருளை ஒருவாறு பெற்றிருக்கிறோம்! ஆயினும், நான் நடந்து செல்லக் காலில்லாதவன். தாங்களோ வலிமை பொருந்திய கால்கள் அமையப் பெற்றவ ராயினும், வெளி வழி காட்டும் கண்ணொளி குன்றியவர். ஆகவே நாம் இருவரும்— அல்லது நம்போன்ற மானிடர் யாவரும் தமது புலமை காரணமாக அகங்காரப்பேய் கொண்டு கண் தலை தெரியாது கொடிய செயலில் ஈடுபடா திருக்க வேண்டி, மானிடர் யாவரும் ஒருவர்க் கொருவர் உதவிசெய்வோராகவே வாழவேண்டு மெனும் கருத்தைப் புகட்ட வேண்டி பேரறிவுள்ள கடவுள் நம்மிருவரையும் அங்க ஈனராகப் படைத்துள்ளார் என்பதை அறிந்துள்ளோம். ஆகவே, புலவரிற் சிறந்தோய்! நாமிருவரும் பரஸ்பர உதவிகொண்டு பணி செய்வோமாயின் நமது புலமையின் பயனை நாமும் அடைந்து, உலகமும் பெற

---

* பயிர் செய்து தந்தவர் பண்டிதர் டி. கே. ராமபத்திர சர்மா அவர்கள்.

துய்யுமாறு செய்யலாம்' என்றார். அறிஞர் தலைவராகிய மற்றொரு நேயரும் 'அதனை அன்புடன்' அங்கீகரித்தார். புலவ ரிருவரும் ஐக்கிய அறிவு கொண்டனர். கண்ணில்லாத புலவர் காலில்லாத புலவரைத் தலைமேற் கொண்டார். புலவ ரிருவரும் கவலையின்றி—கவி பாடிச் சென்றனர். கண்ணில்லாத புலவரின் கால்கள் தடையின்றி நடந்து செல்லும்! காலில்லாத புலவரின் கண்கள் வழி காட்டும்! இவ்வாறு புலவரிருவரும் தமது உற்சாக யாத்திரை தொடங்கி, பிரபுக்கள் பலரையுஞ் சென்று கண்டு பரிசுகள் பல பெற்று வறுமையை வென்று, வாழ்க்கையின் பயனை யறிந்து வையகம் புகழ வாழ்ந்தனர்.

துணையுள்ள வாழ்க்கை

அதுபோல, அன்புடையாளை யிழந்த ஆடவர் யாவரும் அன்புடையானை அதிபாலியத் திழந்த அரிவையரையே மணப்பது எனப் புதியதோர் நோன்பு கொண்டால், இந்து மாதரின் முகத்தினின்று சிந்தும் கண்ணீரானது சிறிதேனும் குறையலாம்! இதனைப் பேசுந் தமிழில் இனி யொரு முறை கூறுவதென்றால், பெண்டாட்டியை யிழந்த புருஷர் யாவரும் கணவனை யிழந்த கைம்பெண்களையே வாழ்க்கைத் துணைவிகளாகக் கொள்ளவேண்டும் என்பதாம். வாழ்க்கைத் துணைவனை யிழந்த மாதர் பலரும், வாழ்க்கைத் துணைவியை யிழந்த ஆண் மக்கள் யாவரும் இவ்வேண்டுகோளின் கருத்தை மனத்திற் கொள்வாரானால் அவரிருவரது ஆத்மாவும் சாந்தி பெற்று வாழும். குறையுடைய இருவரும் விவேகிகளாக—பகுத்தறி வுள்ளவராக மட்டும் இருப்பாராயின், அவர் அக் குறை நீங்கப் பெறுதல் எளிதாம்!

முள் ளில்லாத தோற்றம்—துன்ப மற்ற வாழ்வு

படைப்பிலேயே முள்ளோடு பிறந்த சப்பாத்துக்கள்ளி (நாகதாளி)யை, மனிதன் தன் (தனது புத்தி நுட்பத்தால் ஒரு யந்திரம் உண்டாக்கி) அதன் முட்களைக் களைந்து மாடுகளுக்கும் ஆடுகளுக்கும் அந்தத் தென்னை மரத்திற்கும் அரிய உணவாகச் செய்கின்றான். வேறொரு பூச்சிப் புலவர் அந்த யந்திரத்தை உண்டாக்க வேண்டிய கூலிச் செலவைக்கூட மனிதன் ஏற்றுக் கொள்ள வேண்டாமென்று மார்புதட்டிக் கூறி, தமது புத்தி நுட்பத்தால் ஒட்டுக்கட்டும் புதிய முறையொன்றைக் கைப்பற்றி—முள்ளோடு பிறந்த நாகதாளியின் சந்ததிகளை—முள்ளில்லாதவர்களாகவே பிறக்கச் செய்து, தமது படைப்பின் திறமைக்குப் பரிசு கேட்கின்றார்! அவர்க்கு ஒரு பொன் பதக்கம் அளித்தல் பெரிதல்ல!

மானின் குணம் கொண்ட மானிடர்

மூன்னூறு—மூவாயிரம்—மூன்றுலக்ஷம் தலைமுறையாக முள்ளோடு பிறந்த நாகதாளியை முள்ளில்லாது வாழச் செய்த ரசாயன

சாஸ்திரியின் முறையை யறிந்தால், முள்ளைப் போன்று பிறரை வருத்தும் மானிட மிருகங்களை அஹிம்ஸா தர்மம் வாய்ந்த மானிட சிரேஷ்டர்களாக வாழச் செய்ய இயலாதா? என்பது ஒரு கேள்வி.

சகோதரர்க்குச் சலவை வேலை

பள்ளர், கள்ளர், சக்கிலியர், பறையர், வேசிகள், தாசிகள் ஆகிய மானிட வகுப்பார் யாவரும் பகுத்தறிவுள்ள மக்களே யாதலால், பண்டைச் சப்பாத்தியின் முறையில் வர மீண்டும் தனித்தே வாழவேண்டு மெனப் பிடிவாதஞ் செய்யாது 'இவர் யாவரும் நமது ஆருயிர்ச் சகோதரர்' என்ற உணர்வு கொண்டு, அவரது மனத்திலும் தேகத்திலும் உள்ள அழுக்குகளை நீக்கி, அவர்களை நமது மானிட சகோதா ரத்தினங்களாக வாழச் செய்வோமாக.

மானிட மரத்தில் இன்பக் கொடி தழைத்தல்

முன் தெரிவித்த கதைகள் யாவும் 'குற்ற முள்ள மனிதர்களையும் முறையே குறைவற்றவராகவும், குறை நீங்கியவராகவும் செய்ய வேண்டியது முறையே குற்றமமைந்தோருடையவும், குறைவற்றோருடையவும் சமமான கடமை' யென்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால், குறைவற்ற ஆடவரும் பெண்டிரும்—சுந்தா புருஷரும் சுந்தா வனிதையரும் சேர்ந்து வாழ்ந்து, பொன்னும் முத்தும் போல, தங்கமும் ரத்தினமும் போல ஒன்றை யொன்று அணைத்துப் பொருந்தி பரஸ்பர அழகு செய்துகொண்டு ஆனந்த வாழ்வு பெறுவதை எவரும் தடுக்க விரும்பார். அத்தகைய ஆணும் பெண்ணும் அன்புடன் மணந்து இல்வாழ்வு நடத்துதலே இவ்வுலக சொர்க்க இன்பமாம்! அத்தகைய பெண்களின் அழகு ஆடவர்க்குச் சாந்தத்தையும், ஆண்களின் கம்பீரம் பெண்களுக்கு இன்பத்தையும் முறையே அளித்து மகிழ்விக்கின்றன.

பணக்காரராகும் வழி

பாலூர் கிருஷ்ணயர் பழமொழி கூறுவதில் பேர்போனவர். 'காம்பை சுற்றினால் கால் பணம் கிடைக்கும்' என்பது அவர் கூறும் பழமொழிகளில் ஒன்று. அதன் கருத்து என்னவென்றால், பத்தடி தூரமேனும் ஒரு கிராமத்தில்—வயல் வாய்க்கால்களில்—தோட்டந் தோப்புகளில்—ஒருவன் நடந்து சென்றால் அரையணு விலையுள்ள பொருளேனும் அவனுக்குக் கட்டாயம் கிடைக்கும் என்பதாம். அதுசரி! காடுகளில் வீணுகின்ற இலைகளையும் சருகுகளையும் கூடை கூடையாகச் சேகரித்தாலோ! எத்தனை மூலிகைகள்! எத்தனை உரப் பொருள்கள்! எத்தனை வேர் வகைகள்! எத்தனை தானிய வித்துக்கள்! அத்தனையும் பண மல்லவா?

அதிருஷ்டவானுகின்ற அரிப்புக்காரன்

ஆற்றங்கரைப் பக்கங்களில் ஆடவரும் மாதரும் தலை மூழ்கும் பொழுது பண்டம் பாத்திரங்களையும் ஆடையாபரணங்களையும்

அறியாமை காரணமாக இழந்து போவது வழக்கம். அதனை 'அரிப்புக்காரன்' தனது பொறுமையான வேலைத் திறமையினால் கண்டெடுத்துப் பணக்காரனாகின்றான். நாம் குப்பை யென்று தள்ளிய பொருள்கள் அவனுக்குப் பொன்னாகின்றன. விவசாயிக்கும் அது போல்தான். 'உலகமே குப்பை' என்பது வேதாந்திகளின் கருத்து. அதிலிருந்து அவர்கள் அறிவுக் கடவுளை அரித்தெடுக்கின்றனர். ஆனால், அவர்களுக்குக் கூலி இல்லை.

கடவுள் பணக்காரர் தோழனா?

சிவபெருமானுக்கு— கடவுளுக்கு— 'குபேரன் தோழன்' என்று ஒரு பெயருண்டு. அவர் கடவுளாயினும்—எல்லாம் கடந்தவராயினும்—அவர்கூட 'தம்மை ஒரு பணக்காரரின் தோழன்' என்று பெயரிட்டழைக்க விரும்புகின்றார்! ஏன்? அப்பொழுதுதான் இம்பீரியல் பாங்கியில் நாணயமுண்டு போலும்!

அவசியமான கேள்வி

பிறவியினால் பெருமைப் பித்தேறித் திரியும் பார்ப்பான் பெரியவனா, அன்றி அறியாமையினால் தன்னைக் 'கீழ் மனிதன்' என்று பிதற்றித் திரிகின்ற சகோதரன் சிறியவனா என்ற வீண் கேள்வி நமக்கு வேண்டாம்! ஆனால், ஒரு தேசம் அறிவுடைய மனிதனாலும் அறியாமை வாய்ந்த ஜனசமூகத்தாலும் ஒரே மாதிரியான செல்வச் செல்வாக்கு, கல்வி யந்தஸ்து பெறும் வழி யாது? என்பதே நம் கேள்வி. இஷ்டமுள்ளோர் விடை தருக!

(ஒரு பையன் பிள்ளையில்லாத புருஷனையும் மனைவியையும் பார்த்து) உங்களுக் கேன் ஒரு பிள்ளையு மில்லை?



அவர்கள்:— என்ன செய்வோம். நாங்கள் பூர்வ புண்ணியஞ் செய்யவில்லை.

பையன்:—ஓரறிவும் இல்லாத உயிரெழுத்தும் மெய்யெழுத்துஞ் சேர்ந்து இருநூற்றுப் பதினாறு எழுத்துக்களைப் பெற்றுவிட்டனவே அவ்வளவு வன்மை ஆறறிவுடைய மனுஷராகிய உங்களுக் கில்லையா? —ச. சின்னத்துரை

தியாகாக்கினி

[திரு. டி. என். கிருஷ்ணசாமி]

பௌர்ணமி தினம். இன்பமான மந்தமாருதக் காற்று வீசிக் கொண்டிருந்தது. பசுக்கள், கறந்த உடன், பசும் புற்றரையில் மேய்ந்துகொண்டிருந்தன.

சாம்பசிவம் பிள்ளை கயிற்றுக் கட்டிலின் மீதுள்ள ஒரு தலையணையின்மேல் சாய்ந்துகொண்டிருந்தார். அவரது மனைவி, காசி, தரையின் மீதுஉட்கார்ந்துகொண்டு, பிரகிருதி தேவியின் உன்னதக் காக்ஷியை வியந்துகொண்டிருந்தாள். பூரணச் சந்திரனால் பிரதிபிம்பிக்கப்பட்டு சிறிது தூரத்தில் தவழ்ந்தோடும் வெண்ணிறச் சிற்றலைகளோடு கூடிய காவிரியும், நீலவானத்தில் நின்றுலவும் குதிரைகளைப் போன்ற மேகங்களும், பிரகிருதி தேவியின் அணிகளோ என மதிக்கத் தகும் நக்ஷத்திரங்களின் ஒப்பற்ற காக்ஷியும் கண்களுக் கோர் விருந் தளித்தன.



சாம்பசிவம் பிள்ளையின் புத்திரனான முருகப்பன், பண்ணையாளின் மகனான கறுப்பன் என்ற சிறுவனுடன், தந்தையின் அனுமதி பெற்று மாலைப் பொழுதை வயல் வெளிகளில் கழிக்கச் சென்றிருந்தான். அவன் சென்று நெடுநேரமாகியும், வராததைக் கண்ட சாம்பசிவம் பிள்ளை தமது மகனைத் தேடப் புறப்பட்டார்.

சந்திரன் நிர்மலமான ஆகாயத்தில் சென்றவண்ணம், வெண்ணிலாவைப் பொழிந்துகொண்டிருந்தான். எங்கும் சாந்தம் குடிகொண்டிருந்தது. முருகப்பன் தனது நண்பன் கறுப்பனுடன் ஒரு

மணல் திட்டின் மீது உட்கார்ந்துகொண்டு, பாரதியாரின் பாடல்களை உள்ள முருகிப் பாடிக்கொண் டிருந்தான். கறுப்பன், அவைகளைச் சந்தோஷத்துடன் கேட்டுக்கொண் டிருந்தான்.

முருகப்பனும், கறுப்பனும் இணை பிரியா நண்பர்கள். கறுப்பன் ஹரிஜன வகுப்பில் பிறந் திருந்தா னாயினும், முருகப்பனுக்கும் அவனுக்கும் அளவற்ற அன்பு வளர்ந்துகொண்டு வந்தது. ஒரே ஆத்மா இரண்டாய்ப் பிரிந்து ஒன்றை ஒன்று தழுவிக்கொண் டிருந்ததை ஒக்கும் அவர்கள் நிலை.

சிறிது நேர மாயிற்று. பாரதியாரின் கவி வெள்ளத்தில் மூழ்கியிருந்த இருவரும் நீந்திச் சென்று திருப்தி என்ற கரையை அடைந்தனர். நேரம் சென்றதை அவர்கள் அறியவில்லை. வானத்தில் உலவும் ஒளிவிளக்கின் நிலையை யறிந்தே இருவரும் நேரத்தைத் தெரிந்து கொண்டனர்.

ஒரு சிறு மூட்டையில், கறுப்பன் பழங்களும், சிற்றுண்டிகளும் கொண்டு வந்திருந்தான். மிகுந்த உற்சாகத்துடன், இருவரும் மூட்டையை அவிழ்த்துச் சிற்றுண்டிகளையும் பழங்களையும் அருந்திக் கொண் டிருந்தனர்.

அதற்குப் பிறகுதான், சாம்பசிவம் பிள்ளை தமது மகனைத் தேடிக் கொண்டு வந்தார். வயல் வெளிகளில் அவர்களைக் காணாது, சந்திரிகையின் உதவியினால் மணல் திட்டின் மீது அவர்கள் இருக்கக் கண்டு, அங்கு வந்து சேர்ந்தார்.



முருகப்பன், ஓர் ஹரிஜனச் சிறுவனுடன், கொஞ்சமும் அஞ்சுதலின்றிக் குலவுவதைக் கண்ட சாம்பசிவம் பிள்ளையின் கண்கள் கோபாக்கினியுடன் கொழுந்துவிட்டு ஜ்வலித்தன; உதடுகள் துடித்தன; கோடையிடி போல் வார்த்தைகள் பீறிட்டு அனல் மொழிகளை வீசின. முருகப்பன் கற்சிலை போல் நின்றான். அவன் தீண்டாமைமீதுள்ள தனது தந்தையின் நம்பிக்

கையை நன்கு அறிவானயினும், வெகு நாளாக, அதைப்பற்றி ஒன்றும் சொல்லா திருந்தான்.

தனது தந்தையினல், தன தில்லம் புக முருகப்பன் அனுமதி மறுக்கப்பட்டான். துக்கம் என்ற சாகரம் அவனுள்ளத்தில், மலை போன்ற அலைகளை எழுப்பியது ; கண்களினல் வழிந்தது.

இக் கடூரமொழிகளை விஷம்போல் கக்கிவிட்டு, முருகப்பனது தந்தையான சாம்பசிவம் பிள்ளை, வீடு போய்ச் சேர்ந்தார்.

தன்னந் தனியே, மணல் திட்டின்மீது இரு உருவங்கள் நின்று கொண் டிருந்தன. ஆகாயத்தில் ஒளிந் திருந்த மேகங்கள் ஒன்று கூடின; மந்தமாருதம் மலைகளைத் தாண்டி மறைந்தது; புயற் காற்று பலமாக வீசத் தொடங்கியது; இடி முழக்கம் உலகமே திடுக்கிடும்படி ஒலித்து, மனித ருள்ளங்களை உலுக்கிற்று.

வாய் திறவாது மணல் திட்டினின்று முருகப்பன் கீழிறங்கி ஓடிப்பாதை ஒன்றின் வழியாகச் செல்லலானன். கறுப்பன் தன தன்பன் எங்குத் தனதுயிருக்குத் தீங்குவிளைத்துக் கொள்ளப் போகி ருனே என்றஞ்சி, மனத்தில் பயத்துடன் பின் தொடர்ந்தான்.

காரிருள் கவிந்துகொண் டிருந்தது. கருமேகங்கள் 'பளிச் பளிச்' சென்று மின்னற்கொடிகளை வீசிக்கொண் டிருந்தன. முருகப்பன் அவ்வூர் சிவன் கோயில் வாயிலை யடைந்து உள்ளே சென்ருன். கறுப்பனும் பின் தொடர்ந்தான்.

* * *

மணி பதினென்று இருக்கலாம். கோயிலில் இன்னும் பூஜை யாகவில்லை. மழை 'சோ'வென்று இரைந்து பொழிந்துகொண் டிருந் தது. தெருக்களிலும், சந்துகளிலும் மழைநீர் வெள்ளப் பெருக் கெடுத்தோடிற்று.

ஒரு பருத்த உருவம் தாழங்குடை ஒன்றைக் கையி லேந்திக் கொண்டு, கோயிலுள் நுழைந்தது. அவர்தான் அக்கோயில் அர்ச்சகர் சிவரத்ன கனபாடிகள்.

பூஜை திரவியங்களை யெடுத்துக்கொண்டு உள்ளே சென்ற கனபாடிகள் முருகப்பனும், கறுப்பனும் கர்ப்பக்கிருக வாயிலில் தலையைவைத்து நன்றாய் அயர்ந்துறங்குவதைக் கண்டார். உடனே அவர் கரங்களிலிருந்த பூஜை திரவியங்கள் நழுவி விழுந்தன.



ஒரு ‘பஞ்சமன்’—, கோயிலுள் புகுந்து நித்திரை செய்வதைக் கண்ட குருக்கள், தெருக்களில் ஓடிச்சென்று, சிற்சில பிராமணர்கள் சகிதமாய்த் தடிகளுடன் வந்து சேர்ந்தார்.

இதற்குள் முருகப்பன் அந்த சப்தத்தினால் விழித்தெழுந்தான். உடனே அப் ‘பிராமணர்கள்’ சினங் கொண்டு, அவர்களிருவரையும் ஓர் கற்றூணில் கட்டி தடிகளால் நையப் புடைத்தனர். இரத்தம் வெள்ளமாய்ப் பெருகியது; எலும்புகள் உடைந்தன; அப்படியே இருவரும் நடுத்தெருவின் சேற்றுப் பிரவாகத்தில் தூக்கி எறியப்பட்டனர்.



* * *

பொழுது புலர்ந்தது. எங்கும் ஜலப்பிரவாகமா யிருந்தது. இடிந்த வீட்டுச் சுவர்களும், வேரற்றுக் கீழ்விழுந்த மரங்களும் எங்கும் காணப்பட்டன. இன்னும் வானத்தில் அடர்ந்திருந்த கருமேகங்கள் அகலாது சிறு சிறு ஜலத்துளிகளை வெளியிட்டுக்கொண் டிருந்தன.

ஊரெங்கும் அமளியா யிருந்தது. என்ன நேரிடுமோ, என்ற பயம் எங்கும் சூழ்ந்துகொண் டிருந்தது. ஹரிஜனச் சேரிகளில், ஆவேசமும் ஆத்திரமும் பொங்கி யெழுந்துகொண் டிருந்தது. பிராமணக் கோஷ்டிகளின் பிரார்த்தனைக் கிணங்க ஜில்லா போலீஸ் அதிகாரி தம் பிரதம கணங்களுடன் சாந்தபுரத்தில் எழுந்தருளியிருந்தார். ஹரிஜனங்கள் வசிக்கும் இடங்களைச் சுற்றிப் போலீஸ் சேவகர்கள் பாராக் கொடுத்துக்கொண் டிருந்தார்கள்.

* * *

ஹரிஜனச் சிறுவன் விண்ணுலகை யடைந்தான். அவ்வூர் காங்கிரஸ் தலைவர்கள் அவனுடலை ஊர்வலமாக எடுத்துச் சென்றார்கள். பக்கத்துக் கிராமங்களி லிருந்து ஏராளமான ஜனங்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். எங்கும் ஆவேசமும், தியாக உணர்ச்சியும் ததும்பிக் கொண் டிருந்தது. எங்குஜனத்திரள், அஹிம்சையைக் கடந்து விடுமோ, என்று காங்கிரஸ்காரர்கள் அஞ்சி, 'சாந்தம்! சாந்தம்' என்று உரக்க எச்சரித்



துக்கொண்டு சென்றனர். ஊர்வலம் மயானத்தை அணுகும்கால் 'மஹாத்மா காந்திக்கு ஜே!' என்ற கோஷம் வானையும் பிளந்து சென்றது.

* * *

தஞ்சாவூர் ஜில்லா தலைமை ஆஸ்பத்திரி. வெண்ணிற உடைகள் அணிந்த பணிவிடைப் பெண்கள், அங்கும் இங்கும் சென்றுகொண்டிருந்தார்கள். ஆஸ்பத்திரியின் ஓர் மூலையில், மாலை மந்தமாருதம் தவழ்ந்து செல்ல, ஒரு கட்டிலின்மீது ஓர் உருவம் கிடத்தப்பட்டிருந்தது. அருகில் சாம்பசிவம் பிள்ளையும், காசியும், முருகப்பனது சகோதரனை ஜகந்நாதனும் நின்றுகொண்டிருந்தனர்.



ஒரு தர்மப்போரில் வெற்றிமாலை யணிந்த வீரனைப் போன்று முருகப்பன் விளங்கினான். அவன் தேக மெங்கும் கட்டுகளாய் இருந்தன. சாந்தமும், கருணையும் அவனது முகத்தில் புன்னகை பூத்து விளங்கின.

திடீரென்று அவன் கண்களி லிருந்து நீர் வடிந்தது. மெல்லிய குரலில் தனது தந்தையை நோக்கிப் பின்வருமாறு கூறலானான்: ‘தந்தையே, நான் பிழைத் தெழுவதில் எனக்குச் சற்றும் நம்பிக்கை யில்லை. ஆயினும், ஈசனருளால் சௌக்கிய மடைந்தால், எனது ஆயுளையே ஹரிஜன முன்னேற்றத்திற்கு அர்ப்பணம் செய்யத் துணிகிறேன்.’

* * *

ஒரு வார மாயிற்று. முருகப்பனது தேகஸ்திதி மிகவும் க்ஷீண தசையை அடைந்தது; உயிரும் உடலைவிட்டுப் பிரிந்து எல்லையற்ற சாஸ்வதமான ஆனந்தத்தில் அமிழ்ந்தது.

‘தியாக அக்கினியினால் பரிசுத்த மாக்கப்படாமல் எந்தத்தேசமும் உயர் வடைந்த தில்லை.’

—மகாத்மா காந்தி

* தாயும் தாரமும்

[சுவாமி. விவேகானந்தர்]

208579
600 008

இந்தியாவில் மாதர்கள் தாய்மார்களாகக் கருதப்பட்டு வருகின்றனர். 'ஸ்திரீ' என்ற பெயரைக் குறித்த மாத்திரத்திலேயே அது அந்நாட்டில் தாய் என்பதைத்தான் குறிக்கும். நாங்கள் குழந்தைகளாயிருக்கையில் ஓர் சிறு கோப்பையில் தண்ணீரை எடுத்துச் சென்று அதைத் தாயார் முன்பு வைத்து அவர் ஆசி பெற்றே அந்த நீரைப் பருகுவது வழக்கம்.

* * *

ஆனால் மேனாடுகளிலுள்ளோர் ஸ்திரீகளை 'மனைவி' என்ற முறையிலேயே கருதுகின்றனர். பெண்மையை அவர்கள் 'மனைவி' ரூபமாகவே பாவிக்கின்றனர். இந்திய இல்லங்களில் தாயே அரசியாக விளங்குகிறார். மேனாட்டு இல்லங்களில் தாயார் மனைவிக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். இங்கு வீடு மனைவிக்கே உரியது. ஆனால் எங்கள் இல்லங்களிலே தாயே வசிக்கிறாள். மனைவி அவளுக்குக் கீழ்ப்பட்டே இருத்தல் வேண்டும். இவ் வித்தியாசங்களைக் கூர்ந்து கவனிக்க.

* * *

இப்பொழுது நான் வேற்றுமைகளையே குறிப்பிட்டேன். இனி நான் உண்மைகளை எடுத்துரைப்பேன். மனைவியாயுள்ள இந்திய மாதின் விஷயமென்ன என்று நீங்கள் வினவுவீர்களாயின், அமெரிக்க மாது தாயாக இருப்பதைப் பற்றி என்ன சமாசாரம் என இந்தியர் கேட்பர். நமக்கு இவ்வுடலைக் கொடுத்த மகிமை வாய்ந்த அவ்வுத்தமி யார்? பத்து மாதம் தன் வயிற்றிலே என்னைச் சுமந்து பெற்ற அவள் யார்? வேண்டுமானால் எனக்குத் தன் உயிரிலே இருபது பங்கை அளித்துவிடக் கூடியவள் யார்? நான் எவ்வளவு

* 1910-ம் ஆண்டு ஜனவரி 18-ந் தேதி அமெரிக்கா தேசத்திலுள்ள காலிபோர்னியா மாகாணத்தைச் சேர்ந்த பஸ்டீனா நகரில் ஷேக்ஸ்பியர் கிளப்பில் 'இந்தியாவின் மாதர் என்ற விஷயமாக ஸ்வாமி விவேகானந்தர் நிகழ்த்திய பேருரையின் மொழி பெயர்ப்பாகும்.

கெட்டவனுயிருந்த போதிலும் என் மீது சிறிதும் குன்றாத அன்பைக் காட்டும் அவள் எங்கே?

* * *

நான் சிறிது கடினமாக நடத்தினுல் விவாகத்தை ரத்து செய்து கொள்ள வேண்டுமென்று கோர்ட்டுக்கு ஓடுபவளுக்கும் தாய்க்கும் என்ன வித்தியாசம்? அமெரிக்க ஸ்திரீ எங்கே இருக்கிருள்? உங்கள் தேசத்தில் நான் அவளைக் காணேன். தாயே முதலானவள் என்ற எண்ணத்தைத் தாங்கிநிற்கும் புதல்வனை நான் இங்கே காணவில்லையே. நாமிறந்தாலும் நம்முடைய மனைவிகளும் குழந்தைகளும் அவளுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொள்ளப் பிரியப்படவில்லை. நாங்கள் அவள் முன்பு இறந்தால் மீண்டும் அவள் துடைமீது எங்கள் தலையை வைத்தே இறப்போம். இந்தியாவின் லட்சியம் இதுவே.

* * *

சாமானிய ஆடைகளை அணிந்து, வீதி, வீதியாகத் திரிந்து வீடு வீடாகச் சென்று பிச்சையெடுத்துப் பிழைத்து ஜனங்களுக்கு வேண்டிய காலத்து நல்லுபதேசங்களைப் போதித்து அகப்பட்ட இடத்தில் உறங்கிக் காலம் கழித்துவரும் கூட்டத்தைச் சேர்ந்தவன் நான். இக் கூட்டத்தினர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஸ்திரீயையும் 'தாயார்' என அழைக்க வேண்டும். ஒவ்வொரு பெண்ணையும் நாங்கள் 'தாயார்' எனவே கூப்பிட வேண்டும். இதுதான் வழக்கம். இங்கு வந்தும் அப்பழக்கம் என்னை விட்டு அகலவில்லை. இங்குள்ள ஸ்திரீகளைக் கண்டு நான் 'தாயே' என அழைத்தால் அவர்கள் திடுக்கிட்டு வியப்புறுகின்றனர். அவர்கள் ஏன் அச்சுற வேண்டுமோ எனக்குத் தெரியவில்லை.



சுகாதார ஆசிரியர்:—அடே ராமா, தலையிலே விஷந் தீண்டினுல் என்ன செய்ய வேண்டும்?

இராமன்:—உடம்பெங்கும் பாவாதபடி உடனே தலையை வெட்டி எறிதல் வேண்டும்.

—ச. சின்னத்துரை

அறிவு உலகம்

[திரு. த. பா. நித்தியானந்தன்]

உலகிடைத் தோன்றிய உயிர்கள் அனைத்திற்கும் அறிவு உண்டு. அவ்வவ் உயிர்களுக்கு ஏற்றவாறு, ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு, ஐயறிவு என்றும், மனிதராய்ப் பிறந்த நமக்கு ஆறறிவு என்றும் ஏற்பட்டிருக்கிறது. அவ் உயிர்கள் அவ்வறிவுப் புலனைக் கொண்டு உய்கின்றன. அவ்வறிவிற்குப் புறம்பான செயல்களை அவை செய்வதில்லை. உதாரணமாகத் தொட்டாற் சிணுங்கி என்னும் சிறு செடியை எடுத்துக்கொள்ளுவோம். யார் தொட்டாலும், தன் இலைகளைக் குவித்துக்கொள்ளும் உணர்ச்சிப் புலனை நுகர்ந்து அதன் படி ஒழுக, அது ஒருபோதும் தவறுவதில்லை. ஒரு நாயை எடுத்துக் கொள்ளுவோம். தன் யஜமானன் சென்ற திசையை முகர்ந்து கொண்டே அவனைச் சென்றடைகிறது. அதன் முகரும் சக்தி அதற்கு ஒரு போதும் பொய்ப்பதில்லை. ஆனால், ஆறறிவுடைய மனிதர் மட்டும் தம் அறிவை நேர்மையாக உபயோகிப்பதில்லை. காரணம் விளங்கவில்லை. உலகம் நமது. நாம் உலகத்திற்குச் சொந்தம். உலகிலுள்ள பொருள்களை எவ்வாறு நாம் எடுத்துக் கையாளுகிறோமோ, அதுபோலவே, நம்மையும் பயன் படுத்திக்கொள்ள உலகத்திற்கு உரிமை யுண்டு. இக உரிமையை யுணர்ந்து பயன்படுத்திக் கொள்ளும் உணர்ச்சியே அறிவு எனப்படும். அறிவைத் தீ நெறியில் பழக்கினால், அத் துறையிலேயே பழகி நாளடைவில் உணர்ச்சி மழுங்கி, அறிவுக்கண் இருளடைந்து தான் ஆற்றுவது தீச்செயல் என்னும் எண்ணமே அற்றுப் போகிறது. அப்போதுதான் அவர் ஓரறிவுடைய ஒரு செடிக்கும் கீழான கடையாளாக மாறுகிறார். தீ நெறி விடுத்து நன்னெறியில் நம் அறிவைப் பழக்கினால், உணர்ச்சி ஓங்கி, அறிவுக்கண் சுடர் பரப்பி, அன்பு வெள்ளம் பெருகி, இன்பம் பொங்கி, உலகத்தையே அன்பு மயமாகப் பார்க்கிறோம். உலகத்தின் அமைப்பிற்கு அடிப்படையான தத்துவம் அன்புதான். இக் காரணம் பற்றியே சைவ சித்தாந்திகள் 'அன்பே சிவம்' எனக் கூறுவர். சிவம் என இயற்கைக் கடவுளையே இவர்கள் கூறுகின்றனர். இயற்கை இலங்குவதற்கு அன்பன்றோ காரணம். ஆகவே, அன்

புள்ள இடத்தில் அறிவு விளக்கமும் நன்னெறியும் தோன்றும் என்பது பெற்றாம்.

அறிவையும் அதற்கு அடிப்படையாக உள்ள அன்பையும் கொண்டு ஆற்றும் பணியே தொண்டு எனப்படும்.

மக்கள் அனைவருக்கும் பொறுப்பும் கடமையும் உண்டு. அவைகளை நேர்மையான முறையில் உள்ளன்போடு ஆற்றுவதுதான் தொண்டு. இத் தொண்டாற்றுதலின் பொருட்டுத் தம் உயிரிழந்தோர் பலர். துன்புற்றோர் அநேகம். காரணம் என்ன? அன்பின் திறத்தை அவனி அறியாததன்றோ? பிறர் மாட்டுத் துன்பம் நுகரவும் ஆருயிரிழக்கவும் முற்படுந் திறத்தினர்தம் அன்புதானென்னே!

உலகம் தீநெறி பற்றிச் சென்று கொண்டிருப்பதைக் கண்ட அன்பர்கள் மனம் பொறாது, அதனை மீட்க அவாவுகின்றனர். இந்த அவா பெருகி, செயலாற்றும்படி அவர்களைத் தூண்டுகிறது. இவ்வண்ணம் செயலாற்றுவோர், மாக்களின் அறியாமை என்னும் பெருவெள்ளத்தை எதிர்த்துச் செல்ல வேண்டியிருக்கிறது. மாக்கள், பணச் செருக்கும் அதிகாரச் செருக்கும் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருக்கிறார்களெனவே, உண்மையன்பர்களின் அருந்தொண்டுகள் 'ஆற்றிற் கரைத்த புளி'போலாகிறது. ஆகவே, தன் வலியும் மாற்றான் வலியும் சீர்தூக்கிப் பார்த்த பின்னரே தம் முயற்சிகளில் இறங்குதல் அறிவுடைமையாகும். அல்லாமல், நமது கருத்து எத்துணை உன்னதமானதேயாயினும், அதை ஏற்றுக்கொள்ளுமாறு பிறரை வற்புறுத்துவது தவறான காரியமாகும். எனினும், அத்துறையில் மக்கள் மனம் பதியுமாறு பண்படுத்திய பிறகு நமது கருத்துக்களைக் கூறுவோமானால், மண்ணெண்ணெயில் தோய்ந்த திரியுடன் தீப்பொருந்தினாற்போல் உடனே நமது கருத்துக்கள் அவர்களது பண்பட்ட மனத்திற் பற்றிக் கொள்ளும். சீர்திருத்தவாதிகள் இவ்வுண்மையை மனத்தில் நன்கு மதித்து ஒழுகுவார்களாயின், தீவிரமான புரட்சிக்கு இடமின்றி, நேர்மையான சீர்திருத்தங்களை எய்துதற்கியலும். இதை அவர்கள் நன்கு உணருவார்களாக.

'மாப்பிள்ளையின் மர்மம்'

:o:

[திரு. A. Y. S. மணியன்]

கோபாலபுரம் என்னும் கிராமத்தில் வேங்கடேசையர் பதின்மூன்று வருட காலமாக, உதாரநிமித்தம் உபாத்தியாயராய் இருந்து வந்தார். அவர் ஆங்கிலம் அதிகம் படித்தவரல்லர். ஆதலால் ஸ்கூலில் இன்ஸ்பெக்ஷன் ஏற்படும் போதெல்லாம் அவருக்கு உண்டாகும் சிரமங்களுக்கு அளவே யில்லை.

வேங்கடேசையர் உத்தியோகத்திற்கு வந்து இரண்டு வருடங்களுக்கெல்லாம், கோபாலபுரத்தி லிருந்து நான்கு மைல் தூரத்திலுள்ள அரங்கநாதபுரம் என்னும் கிராமத்தில் மிராசுதாரரா யிருந்த சுப்பிரமணிய ஐயரின் செல்லப் புதல்வியாகிய சுந்தரி என்னும் பெண்ணை மணந்தார். சுப்பிரமணிய ஐயருக்கு நான்கு குமாரர்களும், சுந்தரி என்ற பெண்மணியும் இருந்தனர். சுப்பிரமணிய ஐயர் வயது முதிர்வால் இறக்க நேரிட்டது. சுந்தரியின் நான்கு சகோதரர்களும், சுந்தரியிடமும், வேங்கடேசையரிடமும் அதிக அன்பு பாராட்டி வந்தனர்.

தெய்வானுக்கிரகத்தால் சுந்தரி கர்ப்பமுற்றாள். ஆறு மாதமானதும், வேங்கடேசையர், தமது மனைவியைப் பிறந்தகம் அனுப்பி விட்டார். ஒவ்வொரு வாரமும் விடுமுறை நாட்கள் வந்ததும், வேங்கடேசையர் அரங்கநாதபுரம் போய்விடுவது வழக்கம்; பாடசாலை திறக்கும் தினத்தன்று, கோபாலபுரம் வந்துவிடுவார்.

ஒரு வெள்ளிக்கிழமை யன்று கலாசாலை மூடியதும் வேங்கடேசையர், மனைவியைப் பார்க்க ஆவல்கொண்டு, அரங்கநாதபுரத்திற்கு மாலை நான்கு மணிக்குப் புறப்பட்டுத் தனிப்பாதையில் சென்றார். 'அஸ்தமனத்திற்குள் அங்குச் சென்று விடுவோம்' என்று அவர் எண்ணினார். ஆனால் வேங்கடேசையர் மூன்று மைல் தூரம் போவதற்குள் அஸ்தமனம் ஆகிவிட்டது. வேங்கடேசையருக்கோ, அஸ்தமித்து விட்டால், கண் தெரியாமல் போய் விடுவது வழக்கம். ஆனால் அவ்விஷயம், அவருக்கும் அவரது மனைவிக்குமே தெரியும். வேங்கடேசையருக்கு 'அந்தி மாலை' ஏற்பட்டது. என்ன செய்வார் பாவம்! என்ன செய்வது என்று அவர் துக்கத்தோடு யோஜித்துக் கொண்டு நிற்கையில், அவரது மாமனார் வீட்டுப் பண்ணையாள் ஒருவன் மாமனார்

வீட்டு மாடுகளை மேய்த்துக்கொண்டு வேகமாய் அவ்வழியே வந்தான். பண்ணையாள் மருதை வேங்கடேசையரைக் கண்டு நமஸ்கரித்தான். இருவருக்கும் சம்பாஷணை நடந்தது:—

மருதை:—எஜமான்களே! ஒங்களை நான் ஒரு மாதமாப் பாக்கலிங்க! அடிக்கடி நீங்க ஏன் இங்கே வரலிங்க, சாமி.

வேங்க:—ஏண்டா! நான் போன வாரத்தில்கூட வந்திருந்தேனே!

மருதை:—உங்களுக்கு சாமி! ஆம்பளப்பிள்ளை புறக்கணுங்க!

வேங்க:—சரித்தாண்டா!....அம்மா சௌக்யமா யிருக்கோல்யோ............

மருதை:—மாட்டை யோட்டிக்கிட்டு வந்தபோதுகூட பார்த்தேன் சாமி! அம்மா சௌக்யம்தான்! ஏங்கசாமி! உங்க ஊரிலே சாமி! சலத்துக்குக் குறைவு இல்லீங்களே!

வேங்க:—இல்லையடா!

மருதை:—ஏங்கசாமி! இருட்டிலீ வரீங்களே! பூச்சி புட்டு, இருக்கும்! வேகமா வாங்க!

வேங்க:—உன் பின்னால் வருகிறேன். நீ போ....

மருதை சில மாடுகளை ஓட்டிக்கொண்டு போனான். அவனுக்குப் பின்னால் சில மாடுகள் சென்றன. வேங்கடேசையர் எப்படியாகிலும், வீடு போய்ச் சேர வேண்டும் என்று யோசித்து, ஒரு எருதின் இரண்டு கால்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். எருதும் தன்னால் கூடிய மட்டும், இரண்டு கால்களாலும் வேங்கடேசையரை உதைத்து,



அவர் முகத்தில் காயங்கள் உண்டாக்கி விடுபட முயன்றது. எருது என்ன செய்தும் பயன்படவில்லை. ஐயர் மாட்டின் கால்களை விடவில்லை. அவரது முகத்தில் ரத்தம் பீரிட்டது. எருதோ அவரது பாரத்தைத் தாங்க மாட்டாமல், அவரை வரப்பிலும் வயலிலும் இழுத்துக்கொண்டு, கடைசியாக மாட்டுக் கொட்டகையில் போய் நின்றது. மாட்டுக்காரன் மருதை, மாட்டுக்கொட்டிலுக்குள் மாடு

களை அடைத்துவிட்டு, கதவை மூடிக்கொண்டு போய்விட்டான். வேங்கடேசையர் மாட்டுக் கொட்டலில் உட்கார்ந்துகொண்டு, காயங்களைத் துடைத்துக் கொண்டு, விழித்துக் கொண்டிருந்தார்.



அவர் அவ்வாறிருக்க, வேங்கடேசையரின் மைத்துனன் ராமு, கையில் லாந்தலைப் பிடித்துக்கொண்டு மாடுகளுக்கு வைக்கோல் போடப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்கக் கொட்டத்திற்கு வந்தான்; மாப்பிள்ளையைக் கண்டான்; பேச ஆரம்பித்தான்.

ராமு:—மாப்பிள்ளை! வாருங்கள்! எப்போது வந்தீர்கள். என் இவ்விருட்டில் தாங்கள் இவ்விடம் உட்கார்ந்திருக்கின்றீர்கள். வீட்டிற்குள் போகலாம் வாருங்கள்!

வேங்க:—(மைத்துனன் ஒருவனுக்கும் தனக்கு 'அந்தி மாலை' என்று தெரியக்கூடாது என்று நிச்சயித்து) ராமு! பலேபேஷ்!! நீங்கள் செய்கிற காரியம் ஒவ்வொன்றையும் நான் என்னென்று சொல்வேன். மிகவும் யோக்யமா யிருக்கிறது!

ராமு:—தாங்கள் கோபிக்க வேண்டாம்! நான் என்ன அபராதம் செய்தேன்!

வேங்க:—என் மாமனார் காலத்தில் மாடுகள் எவ்வளவு பலமுள்ளதா யிருந்தன! தற்காலம் உங்கள் ஆதீனத்தில் மாடுகள் எப்படி யிருக்கின்றன பார்த்தாயா!

ராமு:—மாப்பிள்ளை! கோபிக்கக் கூடாது! இரண்டு வருஷ காலமாக, ஊரில் மழை இல்லாததினால், தானியங்கள் விளைவு குறைவு! தனமும் அதிகமில்லை என்ன செய்வது!

வேங்க:—ராமு! மாடுகளைப் பார்த்துத்தான் எனக்குக் கோபம் வந்தது.

ராமு, வாருங்கள் என்று வேங்கடேசையரை அன்புடன் ஷேகன் கொடுத்து, கையைப் பிடித்து அழைத்துப் போய் அவரைக் கூடத்தில் விட்டு விட்டு, வேறு காரியமாகச் சென்றான்.

வேங்கடேசையர் கூடத்தில் ஒருவருமில்லை என்று தெரிந்து, சுவற்றைப் பிடித்துக்கொண்டு, உள்நோக்கிச் சென்றார். நெல் கொட்

டிப் பழக வைப்பதற்காக நிர்மாணம் செய்யப்பட்டுள்ள 15 அடி ஆழமுள்ள குழியில் ஐயர் விழுந்து விட்டார். வேங்கடேசையர் வெளியே வரமுடியவில்லை. குழியினுள் உட்கார்ந்துகொண் டிருந்தார். இவ்வித மிருக்கையில், வேங்கடேசையரின் வேறு மைத்துனன் கோபு ஊரி லிருந்து வந்த மாப்பிள்ளையைக் காணவந்தான். விளக்கின் வெளிச்சத்தால் குழியினுள் ஒரு மனிதனின் நிழலைக் கண்டு உற்று நோக்கினன். மாப்பிள்ளை விழித்துக்கொண் டிருந்தார்.

கோபு:—மாப்பிள்ளை! எப்போது வந்தீர்கள்! ஏன் இதற்குள் உட்கார்ந்திருக்கின்றீர்கள்!

வேங்க:—(குரலால் கோபு என்று அறிந்து)—கோபு! மிகவும் பேஷ்! எனது மாமனார் இருந்த காலத்தில் இக்குழிகளில் ஒன்றுமில்லாதிருந்து பார்த்திருக்கின்றேயா! இக்குழிகளில் நெல் நிரம்பக்கொட்டியிருக்குமே. தற்போது நீங்கள் செய்யும் விவசாயம் நன்று....நன்று.

கோபு:—என்னை மன்னிக்க வேண்டும்! மழை 2 வருஷ காலமாய்ப் பொழியாததால், தானியம் ஒன்றும் அதிகமாக விளையவில்லை. கோபு இவ்வாறு சொல்லி மாப்பிள்ளையைக் கை கொடுத்து வெளியே தூக்கிவிட்டு, 3-வது வாசற்படி யண்டையில் விட்டு விட்டு, மாப்பிளை வந்திருக்கும் விஷயத்தைத் தாயாருக்குத் தெரிவிக்கச் சென்றான்.

நிற்க, வேங்கடேசையரின் 3வது மைத்துனன் சீனு, மாட்டுக்கார மருதையின் செம்மறியாட்டைத் தன் வீட்டின் 3வது வாசற்படியண்டை கட்டி யிருந்தான். அந்தஆட்டிற்குச் சலங்கைகளும் மணிகளும் கட்டியிருந்தன. வேங்கடேசையர் சுவற்றைப் பிடித்துக்கொண்டு, அவ் வாசற்படியண்டை செல்லுகையில் செம்மறியாடு, 'கிலு கிலு' என்ற மணியோசையுடன் மாப்பிள்ளையைக் கொம்புகளால் முட்டித் தள்ளிற்று. வேங்கடேசையர் கீழே விழுந்தார். உடனே ஒரு மைத்துனன் மாப்பிள்ளையைத் தூக்கிவிட்டு, ஆஸ்வாசப் படுத்தி, அவரை உள்ளே அழைத்துச் சென்றான்.



மாப்பிள்ளை அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு போஜனம் அருந்த உட்கார்ந்தார். அவரது 4 மைத்துனர்களும், அவருக்கு

எதிரே உட்கார்ந்தனர். வேங்கடேசையர் மாமியார் கமலம்மாள், தனது பெண் சுந்தரியை, அவர்களுக்கு அன்னமிட உத்தரவிட்டாள். சுந்தரி முதலில் எல்லோருக்கும் நெய் பரிமாறிப்போனாள். அவள் கைகளில் வளையல்கள் அதிகமாக அணிந்திருந்ததால் 'ஜல்' என்ற சப்தம் வேங்கடேசையருக்குக் கேட்டது. அவருக்கு உடனே, தம்மை முட்டிய ஆட்டின் ஞாபகம் வந்தது. ஆடு தம்மை மறுபடியும் முட்ட வருகிறது என்று தீர்மானித்து, தமது பக்கத்தில் வைத்திருந்த கூஜாவைக் கையில் ஜாக்கிரதையாகப் பிடித்திருந்தார். அவரது மனைவி காய்கறிகளைத் தாம்பாளத்தில் கொண்டுவந்து, வேங்கடேசையரின் இலையில் பரிமாறினாள். 'கிலுகிலு' என்று அவள் வளையல்களின் சப்தம் கேட்கவே வேங்கடேசையர், வந்திருப்பது ஆடென்று எண்ணி, கூஜாவால் (தமது மனைவியையே) முகத்தில் நான்கு அடிகள் அடித்து விட்டார். உடனே கோபங் கொண்டு 4 மைத்துனர்களும், மாப்பிளை வேங்கடேசையரை ஒருமிக்கத் தாக்கினார்கள். அடி பொறுக்க மாட்டாமல் வெங்கடேசையர், தமக்கு 'அந்தி மாலை—அந்தி—மாலை' என்று உண்மையை வெளியிட்டார். வேங்கடேசையருக்கு ஏற்பட்ட அவமானத்திற்கு அளவேயில்லை. அவர் தமக்கு அந்திமாலை என்று மாட்டுக்கொட்டிலில் இருந்தபொழுதே சொல்லியிருந்தால் அவருக்கு அவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கா.



ஆதலால், உண்மையை உரைப்பதே நன்மைக்கு இடம்.

முன்னுக்கு வர விரும்பினால்

[திரு. விக்டர் ரேய்மாண்டு]

நாம் மிக்க அறிவாளியாக இருக்க முடியாது. விடா முயற்சியாலும், உழைப்பாலும் நாம் நம் நிலைமையை முன் இருந்ததைவிடச் சிறிது உயர்த்திக் கொள்ள முடியும்.

மக்களிற் சிறுபான்மையோருக்கே போதுமென்ற மனம் இருக்கிறது. ஒரு காரியாலயத்தில் டைபிஸ்ட்டாக இருக்கிறவன் அங்குள்ள உயர்ந்த உத்தியோகஸ்தருக்கு அந்தரங்கக் காரியதரிசியாய் வர முயல்கிறான். அவ்வாறே பெரும்பாலும் கீழ்த்தர உத்தியோகத்தி லிருப்பவர்கள் மேல்வர நினைக்கிறார்கள்.

அவ்வாறு மேல் நிலைக்கு வர முயல்கிறவர் அந்நிலைக்கு வேண்டியவைகளை மன உறுதியோடு இடைவிடாது செய்கின்றனர். அவ்வாறு செய்வதால் அவர்களையே காலச் சக்கரம் அந்த நிலைக்குக் கொண்டு வந்து விடுகிறது. ஆனால் இது எல்லோரிடத்தும் காண்பதரிது.

வாழ்வில் தக்க நிலையை அடைய விரும்புகிறவர்கள் விருப்பத்துடனும் விடாமுயற்சியுடனும் அதிக நாள் உழைத்தே தீரவேண்டும். சாதாரண வேலைக்குக் கஷ்டப்படவே வேண்டியதில்லை. அவ்வேலைகளால் ஊதியமுங் குறைவாகவே வரும். ஏனென்றால் அவ்வேலைக்கு அதிக அறிவும் உழைப்பும் தேவையிரா.

நீ ஒரு சிறிய வேலையி லிருந்தால் அதைவிட மேல் பதவியையடைவதற்குக் கஷ்டப்பட்டாகிலும் தகுதியாக்கிக்கொள். எப்பொழுதும் பேராசையின்றி உண்மையோடிரு. உன் வேலையை உயர்த்திக் கொள்ளவேண்டுமென்றும், உன் மனத்தைக் குறுகிய நோக்கங்களிலிருந்து விலக்கி விசாலப்படுத்திக் கொள்ளவேண்டுமென்றும் உறுதி செய்துகொள்.

உன் அறிவுக்கு நிறைய வேலை கொடுத்து முயற்சி செய்யாவிட்டால் உலகில் தக்க நிலையை யடைவது முடியாததொன்று. உனக்கு ஓய்வு இருக்கும்பொழுது அந் நோக்கத்தைச் சிறிது வினோதமாகக் கழி. ஆனால் ஓய்வு நேரத்தில் ஒரு கால அளவு வைத்துக்கொண்டு அந்நேரத்தை வீணாக்காது உன் நிலையை உயர்த்துவதற்கு வேண்டியவைகளைச் செய்.

செவிட்டுச் சுப்பன்

[திரு. டி. சி. சண்முகம்]

சுப்பனுக்குத் தன் மாமியார் வீட்டிற்குச் செல்ல வேண்டுமென்ற ஆசை நெடுநாளாக இருந்தது. அவன் போன ஜென்மத்தில் என்ன புண்ணியம் செய்தானோ தெரியவில்லை. காது இரண்டும் நன்றாகக் கேட்காது. ஒரு நாள் அவன் மாமியினிடமிருந்து தபாலொன்று வந்தது. அதில் 'மருமகன் சுப்பனுக்கு மாமி மருதாயி எழுதிக்கொண்ட தென்னவெனில் இவ்விடம் நான் வியாதியினால் கஷ்டப்படுகிறேன். ஆகையால் உடனே என்னை வந்து பார்க்கவும். இப்படிக்கு மாமி மருதாயி.' இதைப் பார்த்தவுடன் சுப்பன் அந்தக் கடிதத்தைக் கையில் பிடித்த வண்ணமே சிறிது நேரம் கூத்தாடினான். ஏனெனில் மாமியார் வீட்டிற்குச் செல்ல அவ்வளவு ஆவலா யிருந்தான்.

மறுநாட் காலை சுப்பன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு ஒரு சாண் அகலமுள்ள ஜரிகைக் கரை வேஷ்டி ஒன்று இடுப்பிலும், மற்றொன்று மேலிலும் போட்டுக் கொண்டு தன் மாமியார் வீட்டிற்குச் செல்ல ஆயத்தமானான்.

போகும்பொழுது வழியில் சுப்பன் பின் வருமாறு ஆலோசித்தான்:—மாமியோ வியாதியால் தேகம் மெலிந்திருப்பாள். நமக்கோ காது செவிடு; ஆகையால் நம்மிடத்து உரக்கப் பேச அவளுக்கு இப்பொழுது பலம் இராது. அதற்காக ஓர் உபாயம் செய்ய வேண்டும். அவள் வீட்டிற்குப் போனவுடனே அவளுக்கு வந்தனம் கூறி உட்காருவேன். அப்பால் 'மாமி இன்றைக்கு உடம்பு எப்படி இருக்கிறது?' என்று கேட்பேன். அவள், 'கொஞ்சம் அனுகூலமாயிருக்கிறது' என்பாள். அதன்மேல் 'அப்படியா சந்தோஷம்' என்று சொல்லுவேன். 'பிறகு பத்தியம்' என்ன? என்று கேட்பேன். அவள் 'நொய்க் கஞ்சி' என்று சொல்லுவாள். அதைக் கேட்டு 'அதனால் சௌக்கியம் உண்டாகும்' என்பேன். கடைசியாக 'யாரிடத்தில் வைத்தியம் செய்து கொள்ளுகிறீர்கள்?', என்று கேட்பேன். அவள் ஒரு வைத்தியனுடைய பெயரைச் சொல்லுவாள். அப்போது நான்

கடவுள் கிருபையால் அந்த வைத்தியன் குணப்படுத்துவான்' என்பேன்.

சுப்பன் இவ்வாறு யோசனை பண்ணிக்கொண்டு மாமியின் வீட்டிற்குப் போய் அவளுக்கு வந்தனம் கூறிவிட்டு அவள் பக்கத்தில் உட்கார்ந்தான். உட்கார்ந்ததும் 'மாமி! இப்பொழுது உடம்பு எப்படி இருக்கிறது?' என்று கேட்டான். அவன் மாமியோ, பேசக் கூட முடியாமல், 'காய்ச்சல், அதிகமாக அடிக்கிறது. மிகவும் துன்பப் படுகிறேன்' என்று தாழ்ந்த குரலில் சொன்னாள். சுப்பன்' அப்படியா, சந்தோஷம், கடவுள் கிருபையால் அப்படியே இருக்கட்டும்' என்றான். உடனே அவன் மாமிக்குக்கோபம் உண்டாயிற்று.



அப்பால் சுப்பன் 'நல்லது என்ன ஆகாரம் பண்ணுகிறீர்?' என்று கேட்க, அவன் மாமி, 'ஆகாரமாவது! மண்தான்' என்று சொன்னாள். சுப்பன் 'அது நல்லதுதான்' என்றான். வியாதியால் வேதனை யடைந்த அவன் மாமிக்கு அதைக் கேட்ட அளவில் கோபம் அதிகரித்தது.

அதன்மேல் சுப்பன், 'யார் வைத்தியம் செய்கிறார்?' என்று கேட்டான். மாமி கோபத்தால் 'எமன்தான் எனக்கு வைத்தியம் செய்கிறான்' என்று கூவினாள். 'கடவுள் அவனுக்குத் துணை நிற்க வேண்டும்' என்று சுப்பன் சொல்லவே, அவன் மாமிக்கு வருத்தமும், கோபமும் மிகவும் அதிகரித்தன. அதைக் கண்ட சுப்பன் 'காய்ச்சல் அதிகரிக்கிறது போதும், நான் போய் வருகிறேன்' என்று சொல்லி உடனே தன்னூருக்குத் திரும்பி விட்டான். அப்பொழுது அவன் மாமிக்கு எவ்வளவு கோபம் இருந்திருக்கும் என்பதை இதைப் படிக்கும் நேயர்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

மைசூரைப்பற்றி -

[யாத்திரீகர்]

மைசூர் மன்னரே கவனிப்பீரா!

பிரிட்டிஷ் இந்தியாவில் தோல்கேட்டுகளை நீக்கிவிட்டு அதற்கு ஈடாக மோட்டார் வண்டிகளின் வரியை உயர்த்தியும் பெட்ரோல் விலையில் தோல்கேட்டுக்காக நான்கு அணு அதிகப்படுத்தியும் இருக்கின்றனர். பிரிட்டிஷ் குடிகள் மோட்டாரில் சென்னையி லிருந்து மைசூர் போவதானுல் தோல்கேட்டு வரி 6 ரூபாய் செலுத்தவேண்டியிருக்கின்றது.

ஐயா, மைசூர் மன்னரே! நீங்கள் செய்வது நியாயம்தானு சொல்லுங்கள்? உங்கள் குடிகள் மோட்டாரில் சென்னைக்கு வந்தால் தோல்கேட்டு பணமில்லாமல் எங்கள் ரோட்டுகளில் சுற்றி விட்டுப் போய்விடுகின்றனர். நாங்கள் உங்கள் ஊருக்கு வந்தால் ரோட்டுகளுக்காக, வரி செலுத்தவேண்டியதா யிருக்கின்றது. அப்படியானுல் நீங்கள் பெட்ரோல் விலையில் நான்கு அணு குறைத்திருக்க வேண்டும். அதுவும் இல்லை. தவிர, சென்னை விலைக்குமேல் நான்கு அணு அதிகம் வாங்குகிறீர்கள். இனிமேலாவது தோல்கேட்டை எடுத்துவிடப் போகிறீர்களா? அல்லது பெட்ரோல் விலையைக் குறைக்கப் போகிறீர்களா? பெட்ரோல் விலை குறைக்க உங்களுக்கு அதிகாரம் இல்லை என்ருல் உடனே பிரிட்டிஷாரைக் கேட்டு உங்கள் ஊரில் விற்கப்பட்ட பெட்ரோலுக்கு வரியைத் தள்ளிக்கொடுக்கும்படிக் கேளுங்கள், இதை விட்டுவிட்டு குடிகள் பேரில் தண்ட தோல் கேட்டும், பெட்ரோல் அதிக விலையும் சுமத்துவது நியாயமில்லை.

எங்கள் ஊர் சட்டசபை மெம்பர்கள் தூங்கிக்கொண் டிருப்பதால்தான் உங்கள் ஊர் மோட்டார் வாகனங்கள் எங்கள் ரோட்டைத் தாராளமாய் வரிகொடுக்காமல் உபயோகப்படுத்திக்கொள்ளுகின்றன.

இனி மன்னரானுலும் சரி அல்லது சென்னைச் சட்டசபை மெம்பர்களானுலும் சரி, எவராவது இதைக் கவனித்துத் தக்கதை செய்யாவிடில் நீங்கள் பொது நலத்தைக் கவனியாத மோசக்காரர்களென மக்கள் நினைப்பார்கள். இதற்கு இடங்கொடுக்கப் போகின்றீர்களா?

திருநாராயணபுரம் சாமி எங்கே?

'மைசூர் ராஜ்யத்தில் திரு நாராயண புரத்தில் மேல் கோட்டை என்னும் மலையில் முற்கால அரசர்கள் எனக்காகக் கட்டிய ஆலயத்தில் நான் வசித்துவந்தேன். அந்த ஆலயத்திற்கருகில் பரிசார

ளர்களும் பட்டர்களும் ஆலயம் சுத்தம் செய்பவர்களும் காவலர்களும் தங்க வசதி யளித்திருக்கின்றது. எனக்கு வருடந்தோறும் 150000 ரூபாய் வருமானம் வருகிறது. இதில் 25000 ரூபாயை என் செலவுக்குக் கொடுத்துவிட்டு மீதியை மைசூர் அரசன் எடுத்துக்கொண்டு போவதால் என் மனம் சகிக்கவில்லை. ஏழைமக்கள் குடிக்கக் கஞ்சியின்றி உடுக்கஉடையின்றி வசிக்கவீடின்றித் தவிக்கின்றனர். பிழைக்க வகையறியா என் மக்களுக்கெனவே என் மலையில் சலவைக் கல்லை உற்பத்தி செய்திருக்கின்றேன். அதை என் பணத்தைக்கொண்டு வேலை செய்து சகல தேசங்களுக்கும் அனுப்பினுல் ஆயிரக்கணக்கான ஏழைகள் பிழைக்க வழி ஏற்படும். அதை விடுத்து மைசூர் அரசன் சாலைகள் (ரோடுகள்) போடுவதிலும், மாளிகைகள் கட்டுவதிலும், சிங்காரத்தோட்டங்கள் ஏற்படுத்துவதிலும் தசரா வேடிக்கையின் பொருட்டு இலட்சக்கணக்கான ஆங்கில பல்புகளையும் ஒல்டர்களையும் கம்பிகளையும் வாங்கிப் பணத்தை அயல்நாட்டிற்கு அள்ளிவிடுவதோடு தம் சொந்தத்திற்கும், ஏராளமாகச் செலவழிப்பதால் என் மனம் தாளவில்லை. நான் திருநாராயண புரத்தை விட்டு ஆலயத்தை நீங்கி ஏழைக் கிராமவாசிகளின் வீட்டு வாசலில் வந்திருக்கின்றேன். இது உண்மை. இது மெய். இது சத்தியம். இதற்குச் சாட்சி வேண்டுமானுலும் காட்டுகிறேன். சில நாட்களுக்கு முன் திருநாராயண புரத்தில் நானில்லாததைத் தெரிந்து பிளேக் மாரியானவள் பிரவேசித்துத் தாராளமாய் இருபது நபர்களைக் கொள்ளை கொண்டுபோய் விட்டாள். நான் அங்கிருந்திருந்தால் பிளேக் அங்கு தலை காட்டுமா? இதை அறிந்த பிறகாவது அரசன் சரியான வழியில் நடப்பானு? பார்க்கிறேன்.'

எங்கள் நாடு

இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழையராகி யினி மண்ணிற் றுஞ்சோம்
தன்னலம் பேணி யிழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனி லினிக்கையை விரியோம்
கன்னலுந் தேனும் கனியு மின்பாலும்
கதலியும் செந்நெலும் நல்கு மெக் காவும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே!
ஓதுவ மிஃதை யெமக்கிலை யீடே!

விநாயகரின் வேண்டுகோள்

[திரு. பெருமாள் பயிஞ்சலோ]

எனது தினசரி வாழ்க்கையில் நாளில் மூன்று முறையாவது பிள்ளையார் கோவிலுக்குப் போகாமல் விருப்பமில்லை.

வழக்கம் போல் ஒரு நாள் மேற்படி கோவிலுக்குப் போய்த் தரிசனம் செய்யும் தருணத்தில் 'ஓ! நண்பரே' என்ற ஒரு சப்தம் கேட்டது. சுற்று முற்றும் பார்த்தேன்; ஒருவரையும் காணவில்லை; திகைத்தேன். நான் தவிர வேறு ஆளில்லாத அவ்விடத்தில் சப்தம் பிறக்கக் காரணம் என்னவென்று யோசித்தேன். ஓ! ஹோ! இருக்கலாம். நாம் இவ்வளவு நாளாய் இம்மூஷிகவாகனனைப் பூஜித்து வந்த பக்தியால், நம்மேல் கருணை கூர்ந்து அழைக்கின்றானெனச் சந்தோஷ மேலிட்டவனாய் அருகில் சென்றேன்.



நான் நினைத்ததற்கு முற்றுமாறாக எலியப்பர் (தொந்தி வயிற்றோன் வாகனமாகிய பெருச்சாளி) முன் நின்று வரவேற்பவர்போல் தலையை ஆட்டினார். என்னடா இது விந்தையாயிருக்கிறது; எலியாவது பேசவாவது என்று நினைத்து 'யாரப்பா கூப்பிட்டது' என மூலஸ்தானத்துக்குள் தலையை நீட்டினேன். மறுபடியும் எலியப்பர் 'என் நண்பரே நான்தான் கூப்பிட்டேன். வாரும் இப்படி. உம்மிடத்தில் ஒரு இரகசியம் சொல்லப் போகிறேன். கவனமாகக் கேளும்' என்று சொல்ல ஆரம்பித்தார் எலியப்பர்.

நண்பரே! உலகில் வாழப்பட்ட சகலவித ஜீவாத்மாக்களுக்கும் முழுமுதற் கடவுளாய் விளங்கும் விநாயக மூர்த்தியானவர் ஒருநாள் என்னிடம் சொன்னதைக் கூறுகிறேன் கேளும் :

'சர்வ பராபர வஸ்துவாய் விளங்கும் பரமசிவக் கடவுளுக்கு நான் புத்திரனுய்ப் பிறந்து தக்க பருவ மடைந்ததும், என் தந்தை எனக்கு மணமுடித்து வைப்பதாய்ச் சொன்னர். நானதற்கு எனக்கு மணம் செய்து வைப்பதா யிருந்தால் என் தாயைப்போல் பெண்ணு யிருக்க வேண்டும்; இல்லையேல் நான் சம்மதப்பட மாட்டேனென்று சொல்லி விட்டேன். இதைக் கேட்ட என் தகப்பன் உன் தாயைப் போல் பெண் பார்க்க எங்களால் முடியாது. நீயேதான் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லி அன்று முதல் என்னைத் தண்ணீர்த் துறைப் பாதையில் இருக்க வைத்து விட்டார். எனவே, நான் ஒவ்வொரு ஊரிலும் குளக்கரை தவருது வழிக்கரையில் கற்சிலையாக அன்று (ஆரியர் புராணம் எழுத ஆரம்பித்தது) முதல் இன்றுவரை இருந்து வருகிறேன்.

நான்தான் ஆசையினுல் சொல்லி விட்டேன். என் தாயைப் போல் ஒரு பெண்ணைப் படைக்கும்படி பிரமனிடத்தில் ஏன் என் தந்தை ஆக்ஞாபிக்கப்படாது. அல்லது அவரே ஏன் சிருஷ்டிக்கக் கூடாது. அவர் நினைத்தால் ஆகாத காரியமும் உண்டா?

அரக்கனுகிய இராவணனுக்கு மூன்றரைக் கோடி ஆயுளளித்தும், சூரபத்மனுக்கு அவன் கையானது பட்ட மாத்திரத்தில் அக்கினி யாய்ப் பற்றும்படியான வரமளித்தும், கருங்குருவிக்கு உபதேசித்தும், நரியைப் பரியாக்கிப் பரியை நரியாக்கியும் இன்னும் இவற்றைப் போல் வேண்டியவர்களுக்கு இல்லை என்று சொல்லாது வரமளிக்கக் கூடிய என் பிதா ஏன் நான் கோரியதை அளிக்கப் படாது.

சரி, அதுதான் போகட்டும்; நான் வழிக்கரையி லிருந்து பார்த்தும் தாயைப்போல் பெண் (இது வரையிலும்) கிடைக்கவில்லை என்பதும் அவருக்குத் தெரிந்துதானே யிருக்கிறது. அப்படி நான் சொல்லியதற்குக் கோபமாய் நினைத்தாலும் பெற்ற பிள்ளைதானே! ஒரு மாதம் அல்லது ஒரு வருடம் இல்லை பத்து வருடம் சென்ருவது என்னை அழைத்துப் போய் வேறு பெண்ணைப் பார்த்தாவது கல்யா ணம் செய்துவைக்கப்படாதா? எனக்கும் எல்லாரையும்போல் இச்சை இருக்காதா? நானென்ன பேடியா! அவர் மாத்திரம்தலை முடியில் கூட ஒரு பெண்ணை மறைத்து (பெண்டாட்டிக்குத் தெரியாமல்) வைத்திருக்கிருரே. சரி; இனி அதை எல்லாம் நினைப்பதில் பிரயோ சனமில்லை. எலியப்பரே! என் தகப்பன்தான் என்னை நினைக்கவில்லை.

இப்போது என்னை நிரம்ப பக்தியோடு பூஜித்துவரும் இம் மானிடர்களாவது என் வருத்தத்தை அறிந்து ஆவன செய்கின் ரூர்களா? அதுவுமில்லை. என்னமோ பொங்கலாம், பூஜையாம்,

பாலபிஷேகமாம், நைவேத்தியமாம். இவை எல்லாம் என்? இவற்றில் ஏதாவது எனக்குப் பிரயோசனமுண்டா?

இவ்வுலக மக்கள் என் கருத்தை அறிந்து செய்ய வேண்டியதைச் செய்யாமல் கொஞ்சமும் எனக்குப் பிரயோசனமில்லாத காரியங்களில் பிரவேசித்துப் பணத்தைச் செலவழித்தால் நானெவ்விதம் இவர்களுக்கு நன்மை செய்யக் கூடும்' என்று வருந்தினர். அதனால்தான் இதை உம்மிடம் நான் கூறினேன். நீர் ஊர் ஜனங்களுக்குப் பிரஸ்தாபித்து விரைவில் விநாயகர் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டுமென்று எலியப்பர் என்னிடம் கோரினர். வைதீக நண்பர்களே என்ன செய்யலாம்; சொல்லுங்கள்.

புள்ளிக் குதவா பள்ளிக் கலை

ஒரு பட்டதாரியின் வாழ்க்கையையும் ஒரு தச்சுத் தொழிலாளியின் வாழ்க்கையையும் கவனித்துப் பார்ப்போம்.

பட்டதாரியாகிறவன் செலவு

முதல் பாரத்தினின்றும் பி. ஏ. படிப்பு வரை எங்கும் கரை தட்டாமல் கப்பல் போகுமானுலும் 10 வருஷம் பிடிக்கும். அந்தப் பத்து வருஷ காலத்துக்குள்,

சோற்றுச் செலவு (மீ 10 ரூ விதம்)	1200	ரூ.
துணிச் செலவு (வரு 15 ரூ விதம்)	150	
டாக்டர் செலவு (வரு 5 ரூ விதம்)	50	
ஹைஸ்கூல் புத்தகம் (6 வருஷத்துக்கு)	75	
ஹைஸ்கூல் சம்பளம் (மீ 4 ரூ விதம்)	288	
காலேஜ் புத்தகம் (4 வருஷத்துக்கு)	200	
காலேஜ் சம்பளம் (மீ 10 ரூ. விதம்)	480	
ஆகமொத்தம் செலவு	2443	ரூ.

தச்சு வேலைக்காரன் வரவு

முதலில் ஒரு வருடமோ இரண்டு வருடமோ பெரிய தச்சரின் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டு பையன் வேலை கற்றுக் கொள்ளுகிறான். பிரதிதினம் சம்பளம் கிடைக்க வழியிருந்தால் அவனுக்கு வருவாய் பின் வருமாறு:—

13 வயதில் (நாளைக்கு 6 அணு விதம்)	120	ரூ.
14 வயதில் (,, 8 ,,)	160	ரூ.
15, 16 ,, (,, 10 ,,)	400	ரூ.
17, 18 ,, (,, 1 ரூ. விதம்)	640	ரூ.
19,20,21,, (,, ஒன்றேகால் ரூ. ,,)	1200	ரூ.
ஆக மொத்தச் சம்பள வரவு	2520	ரூ.

தற்போதய சர்வ கலாசாலைப் படிப்பில் இன்னமும் நம்மவர்க்கு மோகமேன்?

—ஸர். டி. ஹாமில்டன்

பெருவாத்து முட்டையை அடைகாத்த சிறுவன்

[கோபால சமுத்திரம்-சாமி. ஆறுமுகனார்]

மோட்டார் யமன்கள் போன்ற இயந்திரங்களைக் கண்டு பிடித்த பேரறிஞர் எடிசனுடைய சரித்திரம் வெகு ருசியானது. ஜீனி, லட்டு, வடை, போளி, முதலிய சித்திரான்னங்கள் வேண்டுமா? எடிசனுடைய சரித்திரம் வேண்டுமா? என்று என்னைக் கேட்டால் எடிசன்தான் வேண்டும் என்பேன். ஏனெனில் அவருடைய வாழ்க்கையில் பல இன்பமான நீதிகளும், விநோதமான யோசனைகளும், வேடிக்கையான குணங்களும் காணக் கிடக்கின்றன.

எடிசன் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்; வறுமையிலேயே வாழ்ந்தவர்; தமது முயற்சியினாலேயே முன்னுக்கு வந்தவர்; உலகிலே மிகவும் மதிப்பு வாய்ந்தவர். இளமையில் அவருடைய வீட்டில் வளர்ந்து வரும் பெரு வாத்தொன்று முட்டை யிட்டது; அடைகாத்தது. சின்னாட்களில் முட்டையி லிருந்து குஞ்சுகள் பொரிந்தன. முதிராத அறிவுடைய எடிசனுக்கு அது அதிசயமா யிருந்தது.

சில நாட்கள் செல்லுமுன் ஒரு நாள் எடிசனைக் காணவில்லை. பெற்றோர் எங்குந் தேடிப் பார்த்தனர். அளவு கடந்த அன்புள்ள பெற்றோர் எடிசனைக் காணவேண்டுமே என்று ஏக்கங் கொண்டனர். எடிசனைப் பார்க்கவேண்டும் என்பதுதான் நோக்கமா யிருந்தது. எப்படிக் காண்பது? என்ன செய்வது?

பிள்ளையைக் காணாத தந்தை கொள்ளை கொடுத்தவர்போ லானார். தாயோ அதே கவலையில் மூழ்கினாள். கடைசியில் எடிசனுடைய பிதா அவரைக் கண்டுபிடித்தார். பல பெரு வாத்து (Goose) முட்டைகளை வயிற்றின்கீழ் வைத்துச் சுருண்டு கிடக்கும் சிறுவனைப் பார்த்து நகைத்துத் தேடிப் பிடித்தார். இளமையிலேயே உடலின் வெப்பத்தால் முட்டையைப் பொரிக்கும் நோக்கத்துடன் அடைகாத்தார். அம்முட்டைகள் மிகவும் சூடேற்றப் பட்டிருந்தன. இக்கதையை அவரது ஒரே தமக்கை அடிக்கடி கூறுவ துண்டாம்.

பெரு வாத்து முட்டையை அடைகாத்த சிறிய எடிசன் எளிய குடும்பத்திற் பிறந்தவ ராதலின் இளமையிலேயே உடலினை வருத்தி

வேலை செய்யவேண்டி வந்தது. அவரது பன்னிரண்டாம் வயதில் வர்த்தமானப் பத்திரிகையை விற்கும் தொழிலில் அமர்ந்தார். அத் தொழிலில் பிரசித்தி பெறும் பொழுதே பல நூல்களை இலவச வாசக சாலையில் படித்து வந்தார். சில நாளில் ஒரு சிறிய பத்திரிகாசிரிய ராய்த் தாமே எழுதி தாமே அச்சிட்டுத் தாமே விற்று வந்தார். அவர் பத்திரிகை விற்கும் புகைவண்டித் தொடரி லிருந்த ஓர் பழைய சாமானேற்றும் வண்டிதான் பத்திரிகை நிலையம். அங்கமர்ந்து ஓய்வு வேளையில் ரசாயன ஆராய்ச்சி செய்வா ராதலின் அஃதோர் ரசாயன சாலையாயும் விளங்கிற்று. ஒரு நாள் வில் (ஸ்பிரிங்) இல்லாத அவ் வண்டி ஆட்டம் எடுத்ததால் வண்டி தீப்பற்றி எரிய ஆரம்பித்தது.

உடனே நெருப்பு அணைக்கப்பட்டது. எனினும் அவ் வண்டியி லிருந்த கொடிய குணமுள்ள காவலன் (Guard) எடிசனின் கன்னத்தில் 'பளீரெ'ன்று அடித்து விட்டான். அந்த அடியால் ஒரு செவி செவிடு பட்டது. பின்னும் அவருடைய மனது புதியவை கண்டு பிடிப்பதிலேயே சென்றுகொண் டிருந்தது. அவருடைய உதார குணத்தால் தந்தியடிக்கும் வேலை கிடைத்தது. கொஞ்ச நாளில் அவர் ஓர் ஆராய்ச்சியால் பெரும் புகழடைந்தார். பல தந்திச் சமாசாரங்கள் ஒரே கம்பியில் அனுப்பும் வழியை நடத்திக் காட்டினர். இதனால் அமெரிக்கா மிக்க மகிழ்ச்சி யடைந்தது. ஏனெனில் இம் முறையால் நாற்பது லட்சம் பவுன் மீதியாயிற்று.

இங்ஙனம் நாளாகவாக உணவு, உறக்கம் முதலியவற்றைத் துறந்ததால் அவர் எண்ணில்லாத புதுப் புனைவுகளைக் கண்டுபிடித்தார். அவர் தமது 27-வது வயது ஆரம்பிக்கும்போது ஒரு தொழிற்சாலைக்குத் தலைவரானர். அவர் கண்டுபிடித்த ஆராய்ச்சிக்காக எண்ணாயிரம் பவுன் பரிசு பெற்றார். பேசுந் தந்தியாகிய டெலிபோன் அவர் கண்டுபிடித்ததே. நாடோறும் நாம் அனுபவிக்கிற மின்சார விளக்குகள் அவ ரில்லாவிடில் வந்திருக்கா. வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, அதனுடைய பெருமை எடிசனுக்குரிய தென்பது குறிப்பிடத்தக்கது.

ஒலி பரப்பும் கருவி, பேசும் படக்காட்சி, போனேகிராப், சீதோஷ்ண நிலை காட்டுங்கருவி முதலிய பல புதுப்புனைவுகளைக் கண்டு பிடித்தவர் தாமஸ் எடிசனே யாவர். எடிசனுடைய நோக்கங்களுக்கு அளவென்பதே கிடையாது.

பெருவாத்து முட்டைகளை அடைகாத்த சிறுவராகிய எடிசன் அவருடைய வாழ்நாளுக்குள், தமது அறிவு முதிர்ச்சியால் உலகத்தையே மாறுதலடையச் செய்தார். எடிசனை அறியா விட்டாலும் அவருடைய கருவிகளை அதாவது அவரது அறிவாலாக்கப்பட்ட புதுப்புனைவுகளை அறியாதவராவது, அனுபவிக்காதவராவது ஒருவரு

மில்லை என்று கூடச் சொல்லலாம். எடிசன் சிறந்த உழைப்பாளி; நல்ல அறிவாளி; வறுமையின் நட்பங்களைத் தெரிந்தவர்; தமது முயர்ச்சியாலேயே முன்னுக்கு வந்தவர். 1847-ஆம் ஆண்டில் பிறந்த அவர் 1931-ஆம் வருஷம் காலமானர். அவாது பிரிவுக்காக மன வருத்த மடையாத மனிதர்களு மிருப்பார்க ளென்று கூறுவது முடியுமா?

சுவாமி அருணகிரிநாதர்

இவர் ஓர் உண்மைத் துறவி; மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் மிகவும் உடையவர்; சில போலி சன்னியாசிகளைப் போலில்லாது உண்மையாய்ப் பிறருக்கு உழைப்பதையே தமது கடமையாகக் கொண்டவர்; எளிய மக்கள்-தாழ்த்தப்பட்ட மக்களது நன்மைக்கு அல்லும் பகலும் உழைப்பவர்; பேசுவதிலும்; எழுதுவதிலும் வல்லவர். தமிழில் சில சிறந்த நூல்கள் செய்துளார். இவாது சேவையை நாம் பாராட்டுகிறேம்.

"மீனாட்சி" பிரஸ் 31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

முந்துங்கள்! முந்துங்கள்!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

எழுதிய

அனுபவ வைத்திய நூல்

இரண்டு பாகங்களும் உங்களிடம் இருக்கின்றனவா? இல்லையேல் உடனே எழுதி வரவழைத்து வைத்துக் கொள்ளுங்கள். இப் புத்தகங்கள் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல்கள் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவே யிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூல்களின் உதவியைக் கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூல்களில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலப மான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அனுபவ வைத்திய நூலின் இரண்டு பாகங்களையும் வைத்துக் கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்தியராகலாமென்பது திண்ணம். சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன. முந்துங்கள்.

முதல் பாகம் விலை ரூபா		1—0—0
இரண்டாம் பாகம்	,,	1—0—0
இரண்டு பாகங்களும் சேர்ந்து	,,	1-12—0

தபால் சார்ஜ் வேறு

காரியஸ்தர் :—

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

வெளி வந்துவிட்டது !   வெளி வந்துவிட்டது !!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

ஜீவ ரகசியம்

என்ற அரிய ஆராய்ச்சி நூல்வெளிவந்து விட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப்பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட் டிருப்பதால் இதற்கு 'ஜீவரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர்களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மையெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை—தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட் டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம் சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள்களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

சிறந்த வரலாறு உயர்ந்த கருத்துகள்

லெனின்

இன்று சோவியத் ரஷ்யா உலகத்திலுள்ள நாடுகளுக்கு ஓர் உதாரணமாகத் திகழ்கின்றதென்றால், அதற்குக் காரணமாக இருந்தவர் லெனின் என்ற பெரியாரே யாவர். பெரியார் லெனின் சுயநலம் சிறிதும் கருதாது ஏழை ரஷ்யர்களைக் கொடுங்கோல் ஆட்சியினின்றும் விடுவிக்கவும், பணத்திமிர் படைத்தவர்கள் செய்துவந்த அட்டூழியங்களை ஒழிக்கவும் முயன்று, அதனால் தாம் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து இறுதியில் தாம் நினைத்ததைச் செய்து முடித்த வரலாறு படிப்போர்க்கு உணர்ச்சியையும் ஊக்கத்தையும் உதவுமென்பதில் ஐயமில்லை. ஏழை மக்களின் துயரம் துடைப்பதற்கெனவே தோன்றி, அதன் பொருட்டே தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்த வெற்றி வீரர் லெனினது வாழ்க்கைச் சரித்திரத்தை அடிமைக் குழியில் வீழ்ந்து வருந்தும் இந்தியர் ஒவ்வொருவரும் கற்றறிய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

லெனினது வாழ்க்கை, தோற்றம், செயல், குணம் முதலிய விவரங்கள் அனைத்தையும் இந் நூலில் பார்க்கக் காணலாம். அவரது திருவுருவப் படமும் இதில் சேர்க்கப் பட்டுள்ளது. கிளேஸ் காகிதம் 36 பக்கம் விலை அணா 2.

வேண்டுவோர் 2½ அணா தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

இரண சஞ்சீவி

இம்மருந்தை சேத்துப் புண்ணுக்குத் தடவலாம் சொரி சிரங்குகளுக்குப் பூசினால் குணமாகும். முகத்தில் காணும் மோகப் பருவுக்குத் தடவ முக வசீகரத்தைத் தரும்.

ஆராத மேகப்புண், மேகப்படை இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். மூல வியாதிக்கு மேல் பூசினால் மூல இரணங்கள் ஆறிவிடும்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1—0—0.

விலாசம்:

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட்டிருந்தாலும்,

இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்

புத்திர உற்பத்தியையளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தியுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையயும் பூர்த்தி

செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தை யில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப் போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இன்பசார மாத்திரையைப்பற்றிய
சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ணு அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

ஆண் தன்மை அடைந்தேன்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கட்கு,

அன்புள்ள ஐயா, தாங்கள் கொடுத்த இன்பசாரம் என்னும் மருந்து என்னை வீர புருஷனாகச் செய்து விட்டதை நோக்க நான் அடைந்த சந்தோஷம் சொல்லுந் தரத்த தன்று.

எனது முதல் மனைவி 10 வருட மிருந்து காலமானாள். இரண்டாவது மனைவியை எனக்கு என் உறவினர்கள் கட்டி வைத்தார்கள். விவாகமானதி லிருந்து என் மனம் அடைந்த துன்பம் அளவிலடங்காது. எனது நண்பர் திண்டுகுறத்தி எதிராஜுலு செட்டியாரால் தங்களிடம் வந்து இன்பசாரம் என்னும் மருந்தை உட்கொண்டதால் எனக்கும் என் குடும்பத்திற்கும் ஆனந்தம் கிடைத்தது.

என்னுடைய நாயகிக்குச் சரீரம் உஷ்ணமாயும் நீர் இறங்கும் போது பாதையாயும் இருப்பதாய்த் தெரிகின்றது. அதற்குத் தாங்கள் எண்ணெய் கொடுக்கும்படிக் கோருகிறேன்.

லேட் மோஸஸ் கம்பெனி
கொத்தா கிருஷ்ணசாமி செட்டியார்.

க்ஷயரோகம் நீங்கிற்று

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு: என்னுடைய நாயகிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோகம் காரணமாய் அதிகமாய்க் காய்ந்து கொண்டிருந்த சுரமும், இருமலும் தங்கள் இன்பசாரம் என்னும் மாத்திரைகளில் சில புட்டி சாப்பிட்டவுடன் நீங்கி விட்டது. இப்போது நிறையிலும் அதிகப்பட் டிருக்கின்றது. இருமலும், சுரமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. தங்களுடைய இன்பசார மாத்திரை ஆச்சரியகரமான மருந்து என்பதில் சந்தேகமேயில்லை. இதை க்ஷயரோகத்தால் துன்பப்படும் என்னுடைய சினேகிதர்களுக்குச் சொல்லி வருகின்றேன்.

வி. ராமநாத ஐயர்,
7—5—32 கார்ட்டன் வூட்ராப் கம்பெனி, மதராஸ்.

அன்பார்ந்த டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

இதுவரையிலும் 6 புட்டி இன்பசார மாத்திரையை என் மனைவிக்குக் கொடுத்துள்ளேன். அதனால் நான் எதிர் பார்க்காத வண்ணம்

குணம் கண்டிருக்கிறேன். இரத்த விருத்தியும் நல்ல பசியும் எடுக்கின்றது. என் மனைவி பிழைத்தது ஆச்சரியமே!

வேறொரு பெண்மணிக்கு இதைக் கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு இரத்த மில்லாமல் வெளுத்திருந்த உடம்பு இப்போது இரத்தம் பரவிவிட்டது. இன்னும் இரண்டு புட்டி வி. பி. யில் அனுப்பவும்.

இப்படிக்கு

28—4—33, காஞ்சிபுரம். Dr. T. N. நடராஜன். L. M. P

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

தைலாமிர்தம்

இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலான உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் திட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

5 பலம் கொண்ட டின் ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

காஸ்டோலின்

(இது சர்வ படையையும் சம்மரிக்கும்)

சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், துடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையைவைத்து நமை நீங்க சொறிந்துக் கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்குக் கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எங்கோமும் நீர் கசிந்துகொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள். புட்டி 1-க்கு விலை அணா 4.

Rangoon,
Dated 24th August 1933

Dear Doctor

I have the pleasure to inform you that your GASTOLINE has got a very good effect in curing all kinds of skin diseases, as the stock previously recieved by V. P. P. is nearly finished, and there is a good demand for it, I request you to send ½ dozen bottles by earliest V. P. P. & oblige.

Thanking you in anticipation, yours fai hfully

E. K. Panchanatham,
c/o The Rangoon Electric Tramway & Supply Co. Ltd.
Merchant Street, Rangoon.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

208529
சென்னை-600 008

சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் பெறுவதென்றால் ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணு, மணியார்டர் கமிஷன் 2 அணு, வி. பிக்குத் தபால் சார்ஜ் ½ அணு, ஆக 5½ அணு சேர்த்து ரூபா 1-5-6 கட்டி வி. பி. யைப் பெற நேரிடும். மணியார்டர் அனுப்பினுல் ரூ. 1-2-0 மட்டுமேயாகும். ஆதலால் முன்னதாக மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே இரு சாராருக்கும் நலமாகும். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம்.

2. இடம் மாறும் சந்தாதாரர்கள் தங்கள் புதிய விலாசத்தோடு சந்தா எண்ணையும் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

3. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும் மணியார்டர் அனுப்பும் பொழுதும் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டும். இன்றேல் பதில் செய்ய இயலாது. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்ப வேண்டும்.

தமிழ் நாட்டில்

சிறந்த மாதப் பத்திரிகை எது?

'பாரதி' தான்.

இவ்வுண்மையை ஒரு தரம் 'பாரதி'யைப் படித்துப் பார்த்தால் உணரலாம். பாரதிக்கு நான்கு ஆண்டு முடிந்து இதுபோது ஐந்தாம் ஆண்டு நடை பெறுகிறது. 'பாரதி'க்குச் சமத்துவம் சகோதரத்வம் இரண்டும் இரண்டு நுரை யீரல்கள்; உரிமை வேட்கையே உயிர். 'பாரதி'யைத் தமிழ் நாட்டு 'மாடென் ரெவியூ' என்றே சொல்ல வேண்டும். இதன் ஆசிரியர் பத்திரிகை உலகில் பண்பட்டவரும், சிறந்த தேச பக்தருமான திரு. ரா. நாராயணசுவாமி அவர்களாவர். 'பாரதி' தமிழர் ஒவ்வொருவரும் தவருது வாங்க வேண்டிய பத்திரிகை.

சந்தா விவரம்

உள் நாடுகளுக்கு	வருடத்திற்கு	ரூ. 2.	அல்லது	3	ஷில்லிங்.
வெளி	,,	,,	ரூ. 3.	,, 5	,,

விலாசம்:—

'பாரதி' ஆலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

"Tamil Arasu" Rgd. M No. 2559.

கார்டோலின்

ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம்

ஈளை இருமல், சுவாச காசம், காச இருமல், மந்தார காசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.

30, 40 வருடங்களாகக் காசநோயால் கஷ்டப்பட்டவர்களை இம் மருந்து காப்பாற்றி இருக்கிறது.
விலை புட்டி 1-க்கு ரூபா 10. விவரமான கேட்லாக்குக்கு எழுதவும்.

விலாசம்:—31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudaliar at Meenatchi Press, 31, Vaithiyanatha Mudali Street, Madras.